பக்கங்கள்: முப்பத்திஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 17 செவ்வாய்க்கிழமை (31.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 186



16 குற்றம்சாட்டுவதால் நாட்டுக்கு பங்கமே



24 மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்



29 காலிறுதியில் சானியா

கல்விச்சுடர்

நாளைய உதயனில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் வெளிவரும்.


# போர்க் குற்றங்கள் நடந்தது உண்மை

## 'சனல் 4' வீடியோ ஆதாரத்தில் சந்தேகமில்லை என்கிறது ஐ.நா.

ஜெனீவா, மே 31

இலங்கையில் போர்க் குற்றம் நிகழ்ந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நேற்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டது. கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சுட்டுக்கொல்லப்படும் வீடியோ காட்சிகள் உண்மையானவை, நம்பத்தகுந்தவை என்று மனித உரிமைகள் நிபுணர்கள் அடித்துக்கூறி யிருக் கிறார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 17ஆவது கூட்டத் தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது. கூட்டத்தின் முதலாவது நாளிலேயே இலங்கை விவகாரமும் எடுக்கப்பட்டது. (31 ஆம் பக்கம் பார்க்க)




சனல் - 4 வெளியிட்ட வீடியோ ஆதாரம் உண்மை என நிரூபிப் பதற்கு ஐ.நா. மனித உரிமை சபையில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் இணைக்கப்பட்ட படங்கள்.

# இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையை கண்காணிக்கச் சர்வதேச பொறிமுறை தேவை

## ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் நவநீதம்பிள்ளை வலியுறுத்து

ஜெனிவா, மே 31

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழு அறிக்கையில், இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டியது அந்த நாட்டின் கடமையாகும். இந்த விசாரணையைக் கண்காணிக்க சர்வதேச பொறிமுறை ஒன்று அவசியம்.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலை ஜெனிவாவில்



ஆரம்பமான ஐ.நா. மனித உரிமை பேரவையின் 17ஆவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றினார்.

தனது உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக்கட்ட மோதலில் அரச படைகளும் விடுதலைப் புலிகளும் சர்வதேச சட்டங்களை பரந்த அளவில் மீறியுள்ளதற்கு நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என ஐ.நா. நிபுணர் குழு தனது பொறுப்புக்கூறுவது தொடர்பான அறிக்கையில் முடிவாகத் தெரிவித்துள்ளது.

இக்குற்றச்சாட்டுக்களை விசா (32 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிராக மீண்டும் தீர்மானம்

## சாத்தியங்கள் அதிகரிப்பு

ஜெனீவா, மே 31

இலங்கையில் போர்க் குற்றம் நிகழ்ந்தது என்று 'சனல்-4' வீடியோ ஆதாரத்தைக் கொண்டு ஐ.நா. அதிகாரி உறுதிபடக் கூறியுள்ளதை அடுத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தற்போதைய கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை மீண்டும் கிளறக் கூடிய சூழல் இப்போது திரும்பியுள்ளது என்று ஏபி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அப்போது அரபு நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளின் உறுதியான ஆதரவுடன் இலங்கை அந்தத் தீர்மானத்தைத் தோற்கடித்தது.

42 நாடுகளைக் கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இப்போதும் முஸ்லிம் நாடுகளும் ஆபிரிக்க நாடுகள் பலவும் இலங்கைக்கு ஆதரவாகவே இருக்கின்றன. நேற்றைய அமர்வில், இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின் சார்பில் பேசிய பாகிஸ்தான் தூதர் சமீர் அக்ரம், ''இலங்கையில் அமைதியை வென்றெடுப்பதற்கு அந்நாட்டு அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, ''சரிபார்க்கப்படாத இரண்டாந்தரத் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது'' என்றும் அவர் கூறியிருந்தார்.

இதற்கிடையே இலங்கையின் மனித (31 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளகத் தீர்வு முன்வைக்கப்படும்

கொழும்பு, மே 31

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு நாட்டுக்குள்ளேயே தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும். அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம் பிள்ளை (31 ஆம் பக்கம் பார்க்க)

# சீறுகிறது அரசு

கொழும்பு, மே 31

இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை யின் உயர் ஆணையாளர் நவிப் (நவநீதம்) பிள்ளை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தால், அவரது அலுவலகத்துடன் இனிவரும் காலங்களில் ஆக்கபூர்வமாகப் பணியாற்ற முடியாது என்று சீறியிருக்கிறது இலங்கை அரசு.

போர்க் குற்றங்களை விசாரிக்க உள்நாட்டிலேயே முழுமையான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றும் அதனைக் கண்காணிப்பதற்கு சுயாதீனமான சர்வதேசப் பொறிமுறை ஒன்றும் தேவை என்று நவிப்பிள்ளை நேற்றுத் தெரிவித்திருந்தார்.

இது இலங்கை அரசுக்குக் கடும் சீற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கையை தனது பேச்சின் இடையே இழுத்திருப்பதன் மூலம் மனித உரிமைகள் சபையின் சட்ட திட்டங்களையும் நடைமுறையையும் நவிப்பிள்ளை மீறி இருக்கிறார் என்று வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''முற்கூட்டியே எடுத்துக் கொண்ட தன்னிச்சையான முடிவின் அடிப்படையில் சர்வதேசக் கண்காணிப்புப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் கோரி இருப்பது அவரது தொழில் நேர்த்தியையும் மனித உரிமைகள் சபையின் சுயாதீனத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்கி உள்ளது'' என்று சபைக் கான இலங்கைத் தூதர் சேனுக்கா செனிவிரட்னே சபையிடம் தெரிவித்திருக்கிறார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ)

# ரணில் - கிருஷ்ணா நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, மே 31

இந்திய அரசின் அழைப்பின் பேரில் நேற்றுப் புதுடில்லி சென்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் (31 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் வடக்கில் ஜூலை 23 இல்

கொழும்பு, மே 31

சட்டச்சிக்கல்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜூலை மாதம் 23ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் செயலகம் நேற்று அறிவித்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீள ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் இம்மாதம் 12ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு உத்தரவிட்டது. (31 ஆம் பக்கம் பார்க்க)

# விந்தனுக்கு நேற்று உயிர் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கனகரத்தினம் விந்தனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. பிஸ்டலுடன் இருவர் மோட்டார் சைக்கிளில் துரத்தினர் என்றும் தான் சமயோசிதமாக ஓடித் தப்பி (31 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். தேர்தல் அதிகாரி திடீர் கட்டாய மாற்றம்

## அரசியல் பின்புலம் காரணம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் பிரதித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் கட்டாய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் கட்சி ஒன்று வழங்கிய கடும் அழுத்தத்தைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அவருக்கு கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (31 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை பு யாழ்ப்பாணம்
வைகாசி 30, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7468.41↑
மிலங்கா(MPI) 6866.29↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3.1Bn
பங்குகளின் அளவு(No.) 141.83Mn
வியாபாரம்(No.) 28018
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
மல்ரி பினான்ஸ் 30.50
கெப்பிட்டல் டெவலப்பெண்ர் 707.30
மேகன்ரைல் ஸிப்பிங் 165.70
கொலோனியல் மோட்டர்ஸ் 474.50
சதோசா மோட்டர்ஸ் 368.60
குறைவு(Top 5 losers) - விலை Rs.
எஸ் எம் பி லீசிங் 0.56
சிலோ பினான்ஸ் 28.00
ஆட் கோப் 1100.00
சிலோன் கிண்ட் பொ(F)றின் 10.00
போட்ரெஸ்ர் றிசோட் 31.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# இலங்கையின் வெற்றி அனுபவத்தை புறக்கணித்தன முக்கிய நாடுகள்

கொழும்பு, மே 31

'பயங்கரவாத ஒழிப்பு - இலங்கையின் அனுபவம்' என்ற தொனிப் பொருளில் அரசு நடத்தும் போர் வெற்றி அனுபவப் பகிர்வு மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்ற நிலையில் முக்கிய நாடுகள் பல இதனைப் புறக்கணித்துள்ளன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இலங்கை இராணுவம் மீதும் அரசு மீதும் சுமத்தப்பட்டுள்ளமையே இந்த நாடுகள் மாநாட்டைப் புறக்கணிப்பதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இராணுவம் ஏற்பாடு செய்த இந்த மாநாடு கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் இன்று தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெற உள்ளது.

54 நாடுகளுக்கு இதற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. 42 நாடுகளின் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் தூதரகப் பாதுகாப்பு இணைப்பாளர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஆனால், அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான், சுவிற்சர்லாந்து ஆகியன உட்பட 12 நாடுகள் மாநாட்டைப் புறக்கணித்துள்ளன.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தமாக செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒழிப்பதில் இலங்கை பெற்றுக்கொண்ட அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதே இந்த மாநாட்டின் நோக்கம் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதான உரை ஆற்றுவார்.

இதனைத் தொடர்ந்து வெளிநாட்டைச் சேர்ந்த டாக்டர் டேவிட் கிலேன், டாக்டர் ரொஹான் குணரட்ன, டாக்டர் அஹமட் ஆகியோரும், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உட்பட இராணுவ உயர் அதிகாரிகளும் படைப் பிரிவுகளின் கட்டளைத் தளபதிகளும் உரை நிகழ்த்துவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## துன்னாலை வாசிக்கு ரூ. 12,500 அபராதம்

தென்மராட்சி, மே 31

சாரதிய அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி ஆகியவை இன்றி மது போதையில் வாகனம் செலுத்திய துன்னாலை வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்று 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் மா. கணேசராஜா பிரஸ்தாப நபருக்கு 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன், அபராதத் தொகை செலுத்தத் தவறின் நான்கு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

## கோடரியால் வெட்டி பெண் படுகொலை; தாயும் இரு பெண் பிள்ளைகளும் கைது

கிளிநொச்சி, மே 31

பிரமந்தனாறு பகுதியில் பெண் ஒருவரைக் கைக் கோடரியால் வெட்டிப் படுகொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் குடும்பப் பெண் ஒருவரும் அவரது இரு பெண் பிள்ளைகளும் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பிரதேசத்திலுள்ள பிரமந்தனாறு என்ற இடத்தைச் சேர்ந்த தங்கராஜா மங்களேஸ்வரி (வயது - 36) என்ற பெண்ணுக்கும், வேறொரு குடும்பஸ்தருக்கும் இடையே தகாத உறவு நிலவி வந்துள்ளது. இதனை அறிந்த குறித்த குடும்பஸ்தரின் மனைவி ஆத்திரமேலீட்டால் மங்களேஸ்வரியை கைக்கோடரியால் நேற்று முன்தினம் வெட்டிக் கொலை செய்துள்ளார் என ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்தது.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் செல்வநாதன் லக்ஸ்மி (வயது - 36) என்பவரும் அவரது 18 வயதுக்குட்பட்ட இரு பெண் பிள்ளைகளும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதான மூவரும் கிளிநொச்சி நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். இதன் போது அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீத வான் உத்தரவிட்டார். (ஐ)

## கட்டுநாயக்கா ஆர்ப்பாட்டத்தில் நேற்றுக் களேபரம் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் 9 பொலிஸாரும் காயம்

கொழும்பு, மே 31

தனியார் ஓய்வூதியச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கட்டுநாயக்காவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி விஜயகுணவர்தன உட்பட ஒன்பது பொலிஸார் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் காயமடைந்த 15 ஆர்ப்பாட்டக்காரர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி கூறினார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குள் குண்டுத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களால் தாக்குதல் நடத்தினர் என்றும் அதனைத் தொடர்ந்தே இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.



ஆனால், பொலிஸார் திட்டமிட்டபடி தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று அனைத்து நிறுவனங்களின் ஊழியர்கள் தொழிற் சங்கத்தின் முக்கியஸ்தர் வசந்த சமரசிங்க கூறினார்.

நேற்றைய அசம்பாவிதங்களால் சுதந்திர வர்த்தக வலயம் இன்று மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## காரைநகரில் இலவச யோகாசனப் பயிற்சி

காரைநகர், மே 31

காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தில் இலவசமாக நடை பெற்றுவரும் கலைப்பயிற்சி நெறிகளோடு தியானம், யோகாசனம் ஆகிய புதிய பயிற்சி நெறிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால், அதில் கலந்து பயனடையுமாறு கலாமன்ற நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ)

## குருநகர் படை முகாம் சிப்பாய் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், மே 31

குருநகர் படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தவறுதலான வெடிவிபத்தில் மரணமடைந்ததாகக் கூறி அவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

வெலிகமவைச் சேர்ந்த தர்ம குலசேகர (வயது - 22) என்ற இராணுவச் சிப்பாயே மரணமானவர் ஆவார்.

சிப்பாயின் உடலில் மூன்று ரவைகள் பாய்ந்துள்ளன. நெஞ்சில் இரண்டு ரவைகளும், கையில் ஒரு ரவையும் இருப்பது விசாரணை மூலம் தெரியவந்தது. சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

## இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 31

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஜனநாயகம் ஏற்பட்டு விட்டதாக அரசு கூறுகின்ற போதிலும், அங்கு ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் செயற்படும் மர்ம நபர்களை படையினரால் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை என இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கேள்வி எழுப்பியுள்ளது.

உதயன் அலுவலகச் செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடக சுதந்திரத்தை காக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (மேலதிக செய்திகள் 07ஆம் பக்கத்தில்

# நிகழ்வுகள்

## கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 31

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சுகாதாரத் திணைக்களத்துக்குமான மே மாதத்துக்குரிய மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ஐ.எப்.வின்சென்ட் அறிவித்துள்ளார். (ற)

## முத்தமிழ் விழா

மருதனார்மடம், மே 31

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழ் மன்றத்தால் நடத்தப்படும் முத்தமிழ் விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் செல்வச்சந்திரன் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த முத்தமிழ் வித்தகி பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும் கலந்துகொள்வர்.

கலை நிகழ்வுகளாகப் பேச்சு, கவிதை, நடனம், ஆசிரியர் பு.கணேசராஜாவின் நெறியாள்கையில் உருவான 'மானிலம் பயனுற' நாடகம் என்பவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக தமிழ் நாட்டைச் சேர்ந்த கரகாட்ட வித்தகர் நவராஜ், சாருமதி தம்பதியரின் பாரம்பரிய கலைநிகழ்ச்சியும் இடம்பெறும். (ற-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சென்னை விமான நிலையத்தில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை - இந்திய அரசுகளால் அண்மையில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு பயணமானார்.

இந்த நிலையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

தமிழரின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவென செல்வி ஜெயலலிதா எனக்கு அழைப்பு விடுத்துள்ளமை மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்நிலையில் அவரை நான் விரைவில் சந்திப்பேன்.

இலங்கை பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் விரிவாக பேச்சு நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுகளில் இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை விவகாரம் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் ஆராயப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சு தொடர்பான விவரங்கள் அண்மையில் வெளியிடப்பட்ட இலங்கை - இந்திய கூட்டறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரு தரப்புகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- இப்படி அவர் வலியுறுத்தினார்.

இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட அந்த நாட்டின் முக்கிய அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# குருநகர் கள்ளுத்தவறணை நேற்றுடன் மூடப்பட்டது

வண்ணை, மே 31

குருநகர், பிரதேசத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த கள்ளுத் தவறணை நேற்றுடன் மூடப்பட்டது. இதனால் 'பெரும் குடிமக்கள்' ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பனை தென்னை வள அபிவிருத்திச் சபையில் நிர்வகிக்கப்பட்டு வந்த மேற்படி தவறணை வ[illegible]கை வீடொன்றிலேயே இதுவரை காலமும் இயங்கி வந்தது.

காணிச் சொந்தக்காரர் காணியை விட்டு அகற்றியதை அடுத்தே குருநகர் தவறணை மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-160)

# இலங்கை விமானப்படைக்குப் புதிதாக அதிநவீன ஏவுகணைகள் கொள்வனவு

போர் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இலங்கை அரசு விமானங்களை தாக்கும் மிக நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட புதிய ஏவுகணைத் தொகுதிகளைக் கொள்வனவு செய்துள்ளது

அனைத்துலக மட்டத்தில் ஆச்சரியங்களை தோற்றுவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை (27) இலங்கை அரசு நடத்திய தமிழ் மக்கள் மீதான போரின் வெற்றி நிகழ்வுகளின் போது இந்த ஏவுகணைகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

30,000 அடி உயரத்தில் பறக்கும் விமானங்களையும், ராடர் சாதனங்களின் உதவியுடன் கண்டறியும் இந்த ஏவுகணைகள் அவற்றை தாக்கி அழிக்கும் சக்தி கொண்டவை என இலங்கை வான்படை அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

ஒரே தடவையில் இரு ஏவுகணைகளை செலுத்தும் இந்த கருவிகள் அடங்கிய ஆறு தொகுதிகள் இலங்கை வான்படையினரிடம் உள்ளன. இந்தியா மற்றும் சுவீடன் நாடுகளில் தயாரிக்கப்படும் இந்த ஏவுகணைகளை இந்தியாவே வழங்கியிருக்கலாம் என்ற சந்தேகங்கள் தற்போது எழுந்துள்ளன.

இதனிடையே, போர் நிறைவடைந்த பின்னர் இவற்றை ஏன் இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளது என்ற கேள்விகள் அனைத்துலக மட்டத்தில் ஆச்சரியங்களை தோற்றுவித்துள்ளது.

(அதிர்வு)

# ஹத்துருசிங்கவைக் காப்பாற்றும் கோத்தபாய

யாழ். படைகளின் கட்டளை தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவைக் காப்பாற்றும் முயற்சியில் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்

மஹிந்த ஹத்துருசிங்க, தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து மாதாந்தம் கொடுப்பனவை பெற்று வந்தார் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வெள்ளைக் கொடி வழக்கு விசாரணையின் போது தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை மறுத்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ 30 ஆயிரம் என்ற சிறிய தொகை பணத்துக்காக ஹத்துருசிங்க படையினர் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தகவல்களை வழங்கியிருப்பாரா என்பதை தம்மால் நம்ப முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேஜர் ஹத்துருசிங்க இராணுவ பெண் அதிகாரியை ஒருவரை மணந்துக் கொள்வதாக பொய்க்கூறி, அவர் கர்ப்பமாக காரணமாக இருந்தார்.

அந்தவேளையிலும் கோத்தபாய ராஜபக்ஷ ஹத்துருசிங்கவை காப்பாற்றியதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளதாக தெரிவித்துள்ளது.

(தமிழ்வின்)

# விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்க நடடிக்கை

வனவிலங்குகளிலிருந்து தமது பயிர்ச்களை பாதுகாத்துக் கொள்ளும் முகமாக விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். பயிர்கள் அழிக்கப்படுவதால் விவசாயிகள் பெரும் இழப்பை எதிர்நோக்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பதுளையிலுள்ள ஊவா மாகாண நூல்நிலைய கேட்போர் கூடத்தில் 'திவி நெகும' என்னும் திட்டம் குறித்த கூட்டமொன்று நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்று கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

முதலில் கிராம அலுவலர் பகுதிகளின் அடிப்படையில் துப்பாக்கிகள் வழங்கப்படுமெனவும் இது தொடர்பான சுற்றுநிருபம் பிரதேச செயலாளர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(தமிழ்மிரர்)

இணையச் செய்திகள்

# கொமாண்டோ ஸ்னோவி மரணம்!



விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் கொமாண்டோப் படையினரின் வழிகாட்டியாகச் செயற்பட்ட போது, காயமடைந்திருந்த ஸ்னோவி என்ற நாய் கடந்த 24ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

4ஆவது கொமாண்டோ படைப்பிரிவின் கோப்ரல் சம்பத் இந்த நாயை 2004ஆம் ஆண்டு தொடக்கம் பயிற்சி கொடுத்துப் பராமரித்து வந்தார்.



சிறிலங்கா இராணுவத்தில் எஸ்-080 என்ற இலக்கம் வழங்கப்பட்டிருந்த இந்த நாய் வெலிஓயா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலிகளின் மறைவிடங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தது.

2008 மார்ச் 15ஆம் நாள் கெம்பிலிஓயா காட்டுப் பகுதியில் நடந்த மோதல் ஒன்றின்போது கொல்லப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் உடையின் ஒரு பகுதியை இந்த நாய் எடுத்து வந்து கொண்டிருந்த போது திடீரென எதிர்த்திசையில் இருந்த மற்றொரு புலிகள் இயக்க உறுப்பினர் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் கைக்குண்டை வீசினார்.

கைக்குண்டு வெடிப்புச் சிதறல் ஒன்று ஸ்னோவியின் தலையில் பாய்ந்ததால் நாய் படுகாயமடைந்தது.

உடனடியாக அது உலங்குவானூர்தி மூலம் அனுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பின்னர் அங்கிருந்து பெரதெனியாவில் உள்ள மிருக மருத்துவப் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

மிருக மருத்துவநிபுணர் அசோகாடங்கொல்ல தலைமையிலான மருத்துவ நிபுணர்கள் குழு சத்திரசிகிச்சை மேற்கொண்டு இந்த நாயைக் காப்பாற்றியது.

மிகவும் மோசமான நிலையில் காயமடைந்திருந்த இந்த நாய்க்கு வேறொரு நாயின் குருதியும் ஏற்றப்பட்டது. இந்த நாய் போரின்போது வழங்கிய பங்களிப்புக்காக ரணவிக்கிரம என்ற பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பல வெற்றிகளுக்கு இந்த நாய் காரணமாக இருந்ததாக கொமாண்டோப் படைப்பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

குறிப்பாக வேவு நடவடிக்கைகளுக்காக மறைந்திருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை காடுகளில் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையிலும், ஆழ ஊடுருவும் அணிகளுக்கான வழிகாட்டியாகவும் இந்த நாய் செயற்பட்டுள்ளது.

இந்த நாயின் இழப்பு கொமாண்டோப் படைப் பிரிவின் வழிகாட்டும் குழுக்களுக்கு பேரிழப்பு என்றும் அந்தப் படைப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நாய் கணேமுல்லையில் உள்ள கொமாண்டோ றெஜிமென்ட் தலைமையகத்தில் இராணுவ மரியாதைகளின் பின்னர் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகள் மற்றும் கொமாண்டோ படையினரும் கலந்து கொண்டனர். (தமிழ்ஈஎன்எ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவப் பயிற்சிக்கான காலம் மூன்று மாதங்களாக அதிகரிக்கப்படும்

கொழும்பு, மே 31

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் தலைமைத்துவ பயிற்சிக்கான காலம் போதாமையினால் அடுத்த வருடத்திலிருந்து இப்பயிற்சிக் காலத்தை இரண்டு முதல் மூன்று மாதங்கள் வரை அதிகரிக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் தலைமையில் நேற்று திங்கட்கிழமை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, உயர்கல்வி அமைச்சர் திஸநாயக்க மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிப் பாசறையில் எந்த விதமான இராணுவ பயிற்சிகளும் வழங்கப்படுவதில்லை. அந்த மாணவர்களுக்கு துப்பாக்கி சுடுவதற்கோ, குண்டுகளை வீசுவதற்கோ, யுத்த டாங்கிகளை இயக்குவதற்கோ அங்கு பயிற்சியளிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக மாணவர்களிடம் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த மாணவர்களின் உடுதுணிகளை இன்னும் அவர்களின் தாய்மார்களே கழுவிக் கொடுக்கின்றனர். இவர்கள் சாப்பிட பயன்படுத்தப்படும் கோப்பைகளையும் இவர்களின் தாய்மாரே கழுவுகின்றனர்.

இந்தவகையில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்கள் பூரணமற்ற நிலையிலேயே உள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி அறைகளை நான் பார்த்துள்ளேன். அது அழுக்குப் படிந்தும், துர்நாற்றம் கொண்டதாகவும் காணப்பட்டன. அவர்களின் சாப்பாட்டு எச்சங்கள் அவர்களுடைய கட்டிலின் கீழ் காணப்பட்டன.

எனவே, இந்தப் பிள்ளைகளை நாம் சிறந்தவர்களாக மாற்ற வேண்டும்.

சரியாகப் பார்த்தால், பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 21 நாள்களைக் கொண்ட பயிற்சி நெறி போதாது. அடுத்த மாதம் முதல் இரண்டு முதல் மூன்று மாதமாக இந்தப் பயிற்சி நெறியின் காலத்தை நாம் அதிகரிக்கவுள்ளோம்.- என்றார்.

இந்த நிகழ்வில் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் ஆஸாத் சாலி மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி பீடங்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம)

## ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, மே 31

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹான் சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை வெகுஜன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் காலை கையளித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதார சிறப்புப் பட்டம் பெற்ற மொஹான் சமரநாயக்க, ஊடகவியலாளராக தொழில்புரிய ஆரம்பித்து, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்திப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதம செய்தி ஆசிரியர், செய்திப் பணிப்பாளர், நடப்பு விவகாரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தனியார் ஓய்வூதியத் திட்டத்தில் சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கு விலக்கு

கொழும்பு, மே 31

தனியார்துறை ஊழியர்களுக்கான உத்தேச ஓய்வூதியத் திட்டத்திலிருந்து சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக மேல் மாகாணசபை அமைச்சர் நிமல் லான்ஸா தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்தத் தீர்மானத்தை அறிவித்ததாக நிமல் லான்ஸா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் தனியார் ஓய்வூதிய சட்ட மூலத்துக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே, மேல் மாகாண சபை அமைச்சர் லான்ஸா ஆகியோர் அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றின் போது இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி னர். (ம)

## இந்து மாமன்றத்தால் உதவிகள்

யாழ்ப்பாணம்,மே31

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் சமூக சேவைகள் பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் பெண்களின் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு அண்மையில் உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் மூன்று பெண்களுக்கு தையல் இயந்திரங்களும், இரண்டு பெண்களுக்கு பசுமாடுகள் வளர்ப்பதற்கான ரூபா 40 ஆயிரம் பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டன. (ம-313)

## கஞ்சா விற்றவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,மே31

கஞ்சா விற்பனை செய்த நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

கொக்குவில் மேற்கு, தாவடிப் பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கைது செய்யப்பட்டுள்ளவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் நேற்று யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது வழக்கை விசாரித்த நீதிவான், 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-14)

## வீதியைப் புனரமைக்க நடவடிக்கை

வரணி, மே31

வடமராட்சி கிழக்கு-தென்மராட்சிப் பிரதேச இணைப்பு வீதியான வரணி-குடத்தனை பிரதான வீதியின் ஒரு பகுதி தற்சமயம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த வீதியின் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதி சுமார் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக உள்ளது.

போக்குவரத்தின் போது மாரி காலத்தில் வாகனங்கள், பயணிகள் என்போர் பலத்த சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த வீதியைப் புனரமைக்கும்படி பொது அமைப்புக்கள் பல வீதி அபிவிருத்தி அதிகார சபையை பல தடவைகள் கோரி இருந்தன.

தற்சமயம் இந்த வீதியின் ஒரு பகுதியைப் புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-122)

## பலாப்பழ 'சீசன்' ஆரம்பம்

வடமராட்சி,மே31

பலாப்பழ சீசன் ஆரம்பமானதைத் தொடர்ந்து கொடிகாமம்,சாவகச்சேரி சந்தைகளிலிருந்து தினமும் வடமராட்சிக்கு பலாப்பழங்கள் எடுத்துவரப்படுகின்றன.

இந்தப் பலாப்பழங்கள் பருத்தித்துறை, நெல்லியடி,மந்திகை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி சந்தைகளில் வியாபாரிகளால் விற்கப்பட்டு வருகின்றன. (ம-236)

### மணமகன் தேவை

யாழ் இந்துகௌரவகுடும்பம் 1977ம் ஆண்டு செவ்வாய் தோஷமற்ற அரச உயர் பதவி வகிக்கும் பெண்ணுக்கு பட்டதாரி தரத்துடன் கூடிய தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு: 0772844179

### மரண அறிவித்தல்

### பரஞ்சோதி அன்னம்மா



செல்வாபுரம், கரணவாய், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி அன்னம்மா 29.05.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-சிவகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும், பத்மாவதி, புனிதவதி, அசோதரன் (சுவிஸ்), கோமதி (சுவிஸ்), சுமதி (பிரதேச சபை, நல்லூர்), யசோதா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ் சென்ற பெருமாள் மற்றும் தியாகராஜா, பொன்னம்மா, ஜெயமலர், இராசம்மா, ஜெயராணி, அழகம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரி யும் சிறிதரன், நடராஜா, மணிமாறன், அகிலன், மேனகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வெல்லங்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வாபுரம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
தொ.பே:-0776272114.

தகவல்: [illegible]

(இ/282)

### கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் க.தங்கவடிவேல் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி கந்தன் வள்ளிப்பிள்ளை**

அவர்கள் 29.05.2011 இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

பிரதேச செலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

(47289)

### SLEAS விசேட கருத்தரங்கு வெள்ளவத்தையில்

★வியாழன் (2/6) பி.ப.3 மணி தொடக்கம் 8மணி வரை
★வெள்ளி (3/6) பி.ப.1.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை
தொ.பே-: 0776006311 தொடர்பு கொண்டு பதியவும்.
3092/1, GALLE ROAD, WELLAWATTE
(பூபாலசிங்கம் புத்தகசாலை அருகே).

### பேட்டுக்கோழிகள் விற்பனைக்கு

No 1, லேயர் பேட்டுக் கோழிகள் முட்டை யிடும் பருவத்தில் விற்பனைக்குண்டு.
தொ.பே:- 0789139954,
48, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு.

### கார் விற்பனைக்கு

14 ஸ்ரீ XXXXதொடரிலக்கமுடைய சகல வசதிகளுடன் கூடிய கம்யூண்டா கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772964946

### உடனடித் தேவை

பெண்கள் கணினி பயிற்சி மையம் ஒன்றுக்கு கணினி கற்பிக்கத் தகைமை வாய்ந்த பெண்கள் உடன் தேவை.
தொடர்புகளுக்கு:-
நவமங்கை நிவாசம்,
இராசபாதை வீதி, கோப்பாய் வடக்கு.
0778021801

### மேசன் வேலையாள்கள் தேவை

மானிப்பாய், ஆனைக்கோட்டை,
நவாலியைச் சேர்ந்த
மேசன் வேலையாள்கள்
உடன் தேவை.
தொடர்பு: 0212255090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமைச்சர் அதாவுல்லாவின் ஆதங்கம்

மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு இப்போது உள்ள அதிகாரங்கள் போதாது. அதனால் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முயலும் போது பல தடைகள் எழுகின்றன. அவற்றை அகற்றும் வகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

இதனைச் சுட்டிக்காட்டியிருப்பவர் வேறு எவருமல்லர். உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எஸ். எம். அதாவுல்லாவே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கிராமங்களின், அங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முற்படும்போது எழுகின்ற தடைகளை அகற்றும் வகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான உரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

மாகாண சபை நிர்வாக முறை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர், உள்ளூராட்சி சபைகளுக்கு இருந்த அதிகாரங்கள் பலவும் பறிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் குறைப்படுகிறார்.

கிராமங்களே பட்டினங்களாகவும், பட்டினங்களே பின்னர் நகரங்களாகவும், அவை மாநகரங்களாகவும் மாறின. மக்கள் ஆட்சி அங்கேயே அரும்பியது. காலவோட்டத்தில், மத்தியில், பெருந்தலை நகரில் நாடாளுமன்ற ஆட்சி முறை உருவானது. மாகாண சபை ஆட்சி முறை இடையில் வந்து புகுந்துகொண்டது.

இவற்றில் ஒன்றுக்கு ஒன்று, நிர்வாக அதிகாரங்கள் மற்றும் வரி அறவிடும் அதிகாரங்கள், அபிவிருத்திப் பணிகள் என்பவற்றில் ஒப்பீட்டளவில் குறைந்தும், கூடியும் மிகமிக உயர்ந்தும் என்று வேறுபாடுகள் இருந்து வந்தன. இப்போதும் உள்ளன.

இத்தகைய ஆட்சிக் கட்டமைப்பில் மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பைக் கருதியும், அவர்களின் பெருகிவரும் தேவைகளை மனதில் கொண்டும் நாடாளுமன்ற ஆட்சிக்கான உப கூறுகளாக உள்ளூராட்சி சபைகள் முன்சொன்ன வடிவமைப்பில் தோற்றம் கண்டன.

நாடு முழுவதிலும் வாழும் மக்களின் நலன்களையும் அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தையும், தேசம் முழுவதினதும் அபிவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்படும் பங்கும் பணியும் மத்திய அரசிடமே அதிகளவில் செறிந்துள்ளது. அதேவேளை, மேற்குறிப்பிட்ட மாநகர சபைகள் முதல் பிரதேச சபைகள் வரையான உள்ளூராட்சி சபைகளிடம், அந்தந்தப் பகுதிகளின் மக்கள் நலன்களும் அபிவிருத்திக்குமான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள் வழங்கப்பட்டுள்ளன.

இடைக்காலத்தில், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாச காலத்தில், கிராமோதய சபைகள் இயங்கியதும் ஞாபகம்.

ஆட்சிக் கட்டமைப்பில் காலத்துக்குக் காலம், மக்கள் நலன் நாடி மாற்றங்களும் திருத்தங்களும் காண்பது இயல்பு.

மாகாண சபை முறை நடைமுறைக்கு வந்த பின்னர், மாநகர சபைகள் முதற்கொண்டு பிரதேச சபைகள் வரையான உள்ளூராட்சி சபைகளின் செயற்றிறன் தேய்ந்துவிட்டது; அதற்குக் காரணம் அவற்றின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, மாகாண சபைகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டதே என்று அமைச்சர் அதாவுல்லா தெரிவித்திருப்பது சரியானதே. கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே.

உலக நாடுகள் பலவற்றிலும் மன்னர் ஆட்சிகள் மறைந்து, மக்கள் ஆட்சி மலர்ந்து ஆட்சி அதிகாரம் புதிய வடிவெடுத்து, மக்கள் தம்மைத்தாமே ஆளும் நிலை உருவாகியது. ஜனநாயகத்தின் வளர்ச்சியின் முதற்படி கிராம ஆட்சியே.

கிராம சபை ஆட்சி முறை பரிணாம வளர்சி பெற்று, நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு உயர்ந்து விட்ட போதிலும், உலகளாவியரீதியில் ஆரம்பப் புள்ளிக்கு உள்ள அதிகாரங்கள் பெருமளவில் வெட்டிக் குறைக்கப்படவில்லை, குறைக்கப்படுவதும் மிக அரிது. வெளிநாடுகளில் குறிப்பாக ஜனநாயகத்தின் பிதாமகர்கள் என்று கருதப்படும் மேலை நாடுகளில், அடிமட்ட ஆட்சி மன்றங்களின் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை; இப்போதும் குறைக்கப்படுவதில்லை. மக்கள் தமது சகல தேவைகளையும் உள்ளூராட்சி சபைகளிலேயே பூர்த்தி செய்கின்றனர். தொழிற்சாலைகளை நிறுவி மக்களுக்கு வேலை வாய்ப்புத் தொடக்கம் சகல துறை வளர்ச்சித் திட்டங்களையும் மத்திய அரசின் மிதமான தலையீடின்றி உள்ளூராட்சி சபைகள் தொடர்கின்றன.

மத்திய அரசுகளும் மாநில அரசுகளும் உள்ளூராட்சி அரசுகளும் ஒன்றுக்கு மற்றது சமாந்தரமாகத் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தத்தமது பிரதேச வளங்களைப் பெருக்கி முன்னேற்றம் காண்கின்றன. அனேக நாடுகளில் இரண்டு ஆட்சிக் கட்டமைப்புக்களும் ஒன்றுக்கு மற்றது பக்கத் துணையாகச் செயற்பட்டு சமஷ்டி முறையில் ஆட்சி நடத்தி வளர்ச்சி கண்டு வருகின்றன.

ஆனால் எங்கள் நாட்டிலோ எல்லாம் தலைகீழ். நாடாளுமன்றத்தின் ஆட்சிக் கட்டில் உல்லாசம் கிடைத்ததும், சர்வ அதிகாரங்களையும் தமதாக்கி, உள்ளூர் ஆட்சிக்குள்ள வலுவையும் சக்தியையும் குறைத்துவிடும் அனுமந்த புத்தி அவர்களிடம் தலைவிரித்தாடத் தொடங்கிவிடும்.

அதற்கு ஓர் நல்ல உதாரணமே, ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவது ஒவ்வாதது, பொருந்தாதது என்று அரசு விடாப்பிடியாக நிற்பதாகும்.

இத்தகைய ஒரு சூழலில் உள்ளூராட்சி சபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்க வேண்டும் என்பது அமைச்சர் அதாவுல்லாவின் கருத்து. அது அவரது தனிப்பட்ட, சொந்த ஆதங்கமாக மட்டும் இருக்குமேயன்றி, அரசின் காதில் ஏறும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

ஆனால் சமஷ்டி என்றால் இந்த நாட்டின் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு வேப்பம் காயாகக் கசக்கிறது. சமஷ்டி என்றால் நாட்டைத் தமிழர்களுக்குத் தாரை வார்ப்பது என்று துவேசம் கக்கி தமிழர்களுக்குரிய ஆட்சி உரிமையைப் பறித்து வைக்க முனைகிறார்கள்.

தாங்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்பதால், தமிழர்களை அடக்குமுறையின் கீழ் வைத்து, அற்ப சொற்பங்களைக் கொடுத்து இந்தத் தேசத்தை இன்னும் சில தசாப்தங்களில் தனிச் சிங்கள நாடாக்குவதற்கு அத்திபாரம் போடுகிறார்கள். ஒரே நாடு ஒரே மக்கள் என்ற மகுட வாசகமும் அதன் அரிச்சுவடே.

இந்தியா என்ன, அமெரிக்கா என்ன, ஐ.நா. என்ன எந்தக் கொம்பன் சொன்னாலும் நாம் கேட்கப்போவதில்லை என்று கொடி உயர்த்தி நிற்கிறார்கள்!

## வெலிக்கடையில் ஆங்கிலேயர்களால்

# 1884 ஆம் ஆண்டு பொருத்தப்பட்ட தூக்குமரத்தின் விசைப் பலகை மாயம்

கொழும்பு, மே 31

வெலிக்கடைச் சிறைச்சாலையின் தூக்கு மரத்துக்குப் பொருத்தப்பட்டிருந்த வரலாற்றுப் பெறுமதி கொண்ட விசைப் பலகை காணாமற்போயுள்ளதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விசைப்பலகை 1884ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் பொருத்தப்பட்டதாகும்.

மிகவும் பெறுமதி வாய்ந்ததான இந்த விசைப்பலகை இதுவரை காலமும் சிறைச்சாலையில் பாதுகாக்கப்பட்டு வந்தது.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் சப்பல் வார்ட்டில் அமைந்துள்ள 'சீ-3' சிறைக்கூடங்களை அண்மித்ததாக உள்ள தூக்கு மரத்தின் கீழ் தண்டனைக்குரிய கைதி நிற்பதற்கென இந்தப் பலகை பொருத்தப்பட்டிருந்தது.

அத்தோடு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உடல் நிலத்தில் விழும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பெறுமதி கொண்ட - உயர் ரக மரப் பலகைகளால் ஆன வேலித் தொகுதியும் காணமற்போயுள்ளமை சிறைச்சாலை வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:- 1976 ஆம் ஆண்டின் பின்னர் தூக்குமரம் செயலற்றுப் போனது.

இந்த விசைப் பலகை மற்றும் மரப்பலகை வேலியைப் புதுப்பிக்கும் வகையில் சிறைச்சாலையின் உயரதிகாரியொருவரால் அது அங்கிருந்து வெளியே எடுத்துச்செல்லப்பட்டது.

பின்னர் பெறுமதி மிக்க அந்தத் தளபாடங்கள் தச்சுவேலை செய்யும் இடமொன்றில் ஒப்படைக்கப்பட்டிருந்தது எனவும் பின்னர் வேறு தளபாடங்களுடன் அவை வெளியே கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அவற்றுக்குப் பதிலாக பின்னர் தரமற்ற மரப்பலகையும் பலகை வேலியும் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-22)

# 4 மாதங்களுக்குள் 53 பேருக்கு மரண தண்டனை

கொழும்பு, மே 31

இந்த ஆண்டின் கடந்த நான்கு மாதங்களுக்குள் மரண தண்டனை விதிக்கப்பட்ட 53 பேர் வெலிக்கடை மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுள் ஒரு பெண்ணும் அடங்குவர்.

இதனை விட -

இதுவரை மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள 356 பேர் வெலிக்கடை மற்றும் போகம்பரைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் நான்கு பெண்களும் அடங்குவர்.

மரண தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ள கைதிகளின் எண்ணிக்கை 330 பேர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு மேன்முறையீடு செய்துள்ளவர்களில் ஒன்பது பேர் பெண்கள்.

மேலும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடங்களில் இட நெருக்கடியும் நிலவுகிறது எனவும், ஒரு சிறைக் கூடத்தினுள் ஏழு முதல் எட்டுப் பேர் வரை தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (த-22)

# தனியார் ஓய்வூதியச் சட்டமூலம் பின்தள்ளிப் போகும் சாத்தியம்

கொழும்பு, மே 31

உத்தேச தனியார்துறை ஓய்வூதியச் சம்பளத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதைப் பின்தள்ளி வைக்க நேரலாம் என்று அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி யோசனைத் திட்டத்துக்கு பல்வேறு தரப்புகளிடமிருந்து எழுந்துள்ள கடும் எதிர்ப்புகளின் காரணமாக அதை நடைமுறைப்படுத்துவது சிரமமானதாக இருக்கும் எனவும் அத்தகவல் மார்க்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சட்டவிதிகள், நியம ஒழுங்குகள் உள்ளடங்கியுள்ள ஓய்வூதியச் சம்பளப் பலாபலன் நிதியச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டும். அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது மேலும் பின்தள்ளிச் செல்லக் கூடுமெனவும் அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரை அதை நாடாளுமன்ற விவாதத்துக்கு விடுவதும் சாத்தியமற்றதாகவே உள்ளது.

இதனிடையே அந்த யோசனைத்திட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதுடன் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் இதுபற்றிப் பேச்சு நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு தொழில் தொடர்புகள் அமைச்சர் காமினி லொக்குகேக்கு ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் மேற்படி அமைச்சின் உயரதிகாரியொருவர் கொழும்பில் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (த-22)

# பாடசாலை மாணவருக்கான சீருடை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி

கொழும்பு, மே 31

அரச பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைத் துணித் தொகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய தேவையின் ஐம்பது வீதமான சீருடைத் துணிகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தும், எஞ்சிய ஐம்பது வீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவிக்கிறது.

இது தொடர்பாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரச பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைத் துணிகளை வழங்க ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் மீற்றர் வரையிலான துணி தேவைப்படுவதுடன் இதுவரை முழுத் துணியும் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்தே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்த ஆண்டில் தேவையான துணியை உள்ளூர் உற்பத்தியாளர்களால் குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் விநியோகிக்க இயலாது போனதன் காரணமாக மாணவர்களுக்குச் சீருடைத் துணிகளை வழங்குவது சில மாதங்களால் தாமதமாகியுள்ளது.

இந்தச் சிக்கலான நிலைப்பாடு குறித்து கவனம் செலுத்தப்பட்டதையடுத்தே சீருடைத்துணிகளை வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்காவில் புத்தர் சிலையை திறந்து வைத்தார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, மே 31
சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு கட்டுநாயக்க சர்வதேச விமானத்தள வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்த பகவானின் சிலை ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.

விமானத் தளத்துக்கு வரும் உள்ளூர், வெளியூர் பயணிகளின் முதல் பார்வையாக குறித்த சிலை அமைந்திருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலைக்கு அருகில் உள்ள பெயர் பலகையைத் திறந்து வைத்த பின்னர், ஜனாதிபதி புத்த பகவானுக்கு மலர் தூவி பிரார்த்தனை செய்தார் எனவும், ஜனாதிபதி செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்பின்னர் சமய பிரார்த்தனைகளும் இடம்பெற்றுள்ளன. (சி)

# தலைமைத்துவப் பயிற்சியின்போது காயமுற்ற மாணவி திலினி வைத்தியசாலையில்

கொழும்பு, மே 31
தலைமைத்துவப் பயிற்சிக்கு சென்ற பல்கலைக்கழக மாணவி பயிற்சியின் போது தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலி - கெட்டவல பொலிஸ் இராணுவ முகாமில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

காலி -கெட்டவல பொலிஸ் இராணுவ முகாமில் ஒரு தொகுதி பல்கலைக்கழக மாணவர் களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தபோது திலினி என்ற மாணவியின் தலையில் தடி ஒன்று தவறுதலாக எறியப் பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மாணவி எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மாணவியின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதால் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும் என வைத்தியர் கூறியுள்ளார்.

இதனை நிராகரித்த முகாம் அதிகாரிகள் மாணவிக்கு தற்காலிக சிகிச்சை அளிக்குமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு மறுகணமே மீண்டும் அந்த மாணவி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

குறித்த மாணவி மத்துகம - புளத்சிங்கள பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# தென்மராட்சிப் பிரதேச மாணவருக்கு கற்றல் உபகரணங்கள், சைக்கிள்கள்

தென்மராட்சி, மே 31
தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குச் சாவகச்சேரி சிவன் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலை, கலாசார மன்றத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப் பினர்களான மு.சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார், மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பு உறுப்பினர் ஆ.ரகுநாதன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் அலெக்சாண்டர் சூசைமுத்து ஆகியோர் கலந்து கொள்வர். (ம-207)




யாழ்ப்பாணம், மே 31
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை புதன் கிழமை மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள குழந்தை இயேசு கெபியில் வழிபாடு இடம்பெறும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பாஷையூர் கடலின் நடுவே அமைந்துள்ள புனித அந்தோனியார் கெபியில் வழிபாடுகள் நடைபெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை முதல் தினமும் மாலை 5 மணிக்கு புனித அந்தோனியாரின் நவநாள் வழிபாடுகள் இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணைத் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுத் தொடர்ந்து நற்கருணைப் பவனி இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை முதலாவது திருப்பலி காலை 5.15 மணிக்கும் திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்குப் புனிதரின் திருச்சொரூப பவனி இடம்பெறும். (ற-23-135-26)

* * *

வடமராட்சி, மே 31
அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேக தின விழா எதிர்வரும் 12 ஆம் திகதி-ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 6 மணிக்குப் பாற்குட பவனியும் அதனைத் தொடர்ந்து 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகளாகத் திருவூஞ்சல், மணவாளக் கோல உற்சவம் ஆகியன இடம் பெறும். (ற-236)

* * *

நீர்வேலி அரச சேகரிப்பிள்ளையார் ஆலயத்தின் திருக்குட முழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழாவும் மஹாகும்பாபிஷேகமும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இதன் ஆரம்பக் கிரியை வழிபாடுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை முதல் நடைபெறும்.

கிரியை வழிபாடுகளைப் பிரதிஷ்ர குரு சிவஸ்ரீ கார்த்திகேய சாம்ப சதாசிவ சோமதேவக் குருக்கள் நிகழ்த்துவார். (ற)

* * *

யாழ்ப்பாணம், மே 31
கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்பக்கிரியை வழிபாடுகள் நாளை புதன்கிழமை முதல் நடைபெறும் கிரியை வழிபாடுகளை பிரதிஷ்ட பிரதம குரு சிவஸ்ரீ தா.அரிகரசுப்பிரமணியக் குருக்கள் நிகழ்த்துவார்.

இதன் போது ஆசியுரைகளை நல்லைக்குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். (ற-313)

* * *

நவாலி, மே 31
ஆனைக்கோட்டை சாவற்கட்டு அந்திக்குழி ஞானவைரவர் காளி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ற-100)


## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 231 | சீட்டிழுப்புத் திகதி 29.05.2011

வெற்றி இலக்கங்கள்: 14 47 49 54 | சுப்பர் இலக்கம்: 08

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 6,239,810/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 106563 | ரூ 20/= | ரூ 2,131,260 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 9657 | ரூ 40/= | ரூ 386,280 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8264 | ரூ 100/= | ரூ 826,400 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 788 | ரூ 200/= | ரூ 157,600 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 194 | ரூ 1,500/= | ரூ 291,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 13 | ரூ 3,000/= | ரூ 39,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | - | ரூ 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ 6,239,810/= | |
| மொத்த எண்ணிக்கை | 125479 | | ரூ 3,831,540/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 6,563,600/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, சுகாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk



## மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2399
திகதி 29.05.2011

வெற்றி எழுத்து: B | வெற்றி எண்கள்: 2 8 6 8 7 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B 2 8 6 8 7 3 | ரூபா. 12,935,586/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | 2 8 6 8 7 3 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | 8 6 8 7 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 06 |
| 3ம் பரிசுகள் | 6 8 7 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 73 |
| 4ம் பரிசுகள் | 8 7 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 778 |
| 5ம் பரிசுகள் | 7 3 | ரூபா. 100/= | பரிசுகள் 7,601 |
| 6ம் பரிசுகள் | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 75,318 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | 2 8 6 8 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 06 |
| 8ம் பரிசுகள் | 2 8 6 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 70 |
| 9ம் பரிசுகள் | 2 8 6 | ரூபா. 100/= | பரிசுகள் 771 |
| 10ம் பரிசுகள் | 2 8 | ரூபா. 50/= | பரிசுகள் 7,522 |
| 11ம் பரிசுகள் | B | ரூபா. 20/= | பரிசுகள் 30,109 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 13,299,008.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா 7,559,840.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk




# பிறந்தநாள் வாழ்த்து

ஆவது 21






## செல்வி நாகேந்திரம் மதுவந்தி

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்வி மதுவந்தி நாகேந்திரம் தனது 21 ஆவது பிறந்த நாளை இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் குடும்பத்தினருடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.



இவரை வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா,
அண்ணா (பிரதாப்)
அக்காமார், அத்தான்மார்,
பெறாமக்கள்
(நிவேஸ், நிதிதா, பவிஸ்)
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

ச.நாகேந்திரம்
பொற்பதி வீதி, கொக்குவில். (4419)(48.27.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போர்க்களத்தில் நின்ற படையினரின் வாக்குமூலங்களுடன் அறிக்கை தயாராகின்றது

## இராணுவத் தளபதியின் ஏற்பாட்டில் மும்முரம்

கொழும்பு, மே 31

வன்னியில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் முன்னணி நிலைகளிலிருந்து போராடிய படையினரின் வாக்குமூலங்கள், சாட்சியங்கள் பெறப்பட்டு வரும் நிலையில் அவை அடங்கிய போர்ச்செயற்பாடுகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை இலங்கை இராணுவத்தினர் தயாரித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இராணுவம் மனித உரிமை மீறல்களை செய்துள்ளது என்று எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு இந்த அறிக்கையை அரசு பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்று இறுதிக்கட்டப் போரின் போது முன்னணி நிலைகளில் இருந்து போர் புரிந்தவரான இராணுவ சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியாவால் நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இந்த அறிக்கையைத் தயாரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

போர் முனையில் இராணுவத்தினர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் இறுதிக்கட்ட போர் நடவடிக்கைகளின் போது சிக்கிக் கொண்ட பொதுமக்கள் கைப்பற்றப்பட்டமை போன்ற விடயங்களும் அறிக்கையில் சேர்க்கப்படும் என்று தெரிய வருகிறது. இந்தக் குழு ஏற்கனவே வன்னி, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு முனைகளில் இருந்து போராடிய சிரேஷ்ட அதிகாரிகள் பலரது வாக்குமூலங்களைப் பதிந்துள்ளது.

அதேவேளை பயங்கரவாதத்தைத் தோற்கடித்த இலங்கையின் அனுபவம் என்ற தொனிப்பொருளினால் ஆன கருத்தரங்கு இன்றிலிருந்து மூன்று நாள்களுக்கு கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. 42 நாடுகளிலிருந்து சுமார் 300 பேராளர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

# தமிழ்க் கைதிகளின் விடுதலையில் அக்கறை கொண்டவர் சரவணபவன்

## அமைச்சர் - கஜதீர

யாழ்ப்பாணம், மே 31

''தமிழ் சிறைக் கைதிகளின் விடுதலை தொடர்பாக மிகவும் அக்கறை கொண்டவர் நண்பர் சரவணபவன்'' எனச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறினார்.

நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுகளை வழங்கும் நிகழ்வின் போதே இதைக் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நண்பர் சரவணபவன் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருப்பார். இன்று நடைபெறும் இந்த நிகழ்விலும் கலந்து கொள்ள ஆர்வமுடன் இருந்தார்.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் சமுகமளிக்க முடியவில்லை எனவும் நிகழ்வுக்கு வாழ்த்துக்களையும் தொலை பேசி ஊடாக அறிவித்ததோடு அவரின் பிரதிநிதி ஒருவரையும் அனுப்பி வைத்துள்ளார். அவருக்கும் நன்றி என்று அமைச்சர் கஜதீர கூறினார். (ம-02)



நவாலி- சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழாவில் சுவாமி வீதியுலா வருகிறார். (ம-302)

# காங்கேசன்துறை வரையான ரயில் பாதை பணிகள் விரைவில்

## இந்திய உதவியுடன் 2 வருடங்களில் பூர்த்தியாகும்

கொழும்பு, மே 31

காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவைகளை மீளவும் ஆரம்பிக்கும் வகையில் ரயில் பாதைகளை செப்பனிடும் பணிகள் மும்முரமாக்கப்படவிருக்கின்றன. அதன்படி இன்னும் இரண்டு வருட காலத்துக்குள் இந்தப் பணிகள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். ஓமந்தை ரயில்வே நிலையத்தைத் திறந்து வைக்கும் முகமாக நடைபெற்ற வைபவமொன்றில் உரை நிகழ்த்திய அமைச்சர் ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையை செப்பனிடும் பணி இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் என்று கூறினார்.

தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரையான் ரயில்வே பாதையும் ஓமந்தை ரயில் நிலையமும் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. இந்த வைபவத்தில் பிரதிப் போக்குவரத்து அமைச்சர் ரோகன திஸாநாயக்க மற்றும் மாவட்ட செயலர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோரும் பங்குபற்றினார்கள். (ப)

# உதயன் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கு அரசியல் கட்சிகள் பலவும் கண்டனம்

உதயன் அலுவலகச் செய்தியாளர் செ.கவிதரன் சனிக்கிழமை காலை இனம்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ள சம்பவத்துக்குப் பல்வேறு அரசியல் கட்சிகளும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

### ஜே.வி.பி.

உதயன் ஊடகவியலாளர் செ.கவிதரன் மீதான தாக்குதலை மிக வன்மையாகக் கண்டித்துள்ள ஜே.வி.பி., வடக்கின் சிவில் சமூக வாழ்க்கைக்கு இது குந்தகம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

ஊடக சுதந்திரம் தொடர்பில் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கும் அரசு தற்போது நாளுக்கு நாள் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை நடத்துவது, கைது செய்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

அத்துடன் ஊடக நிறுவனங்களுக்குத் தீ மூட்டுவது மற்றும் அச்சுறுத்துவது போன்ற சம்பவங்களும் அதிகரித்துச் செல்கின்றன.

மக்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான உரிமையை இல்லாது செய்துள்ள அரசு வடக்கிலும் தெற்கிலும் குண்டர் குழுக்களை ஏவிவிட்டு ஊடக அடக்குமுறைகளை மேற் கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ள இந்த ஊடகவியலாளர் மீதான தாக்குதல் சிவில் சமூகத்தினரின் வாழ்வுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அரசால் உருவாக்கப்பட்டுள்ளமை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான மனிதாபிமானம் அற்ற செயற்பாடுகளைக் கண்டிப்பதுடன் ஊடக சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கை கோர்க்குமாறு ஜனநாயகத்தை மதிக்கும் சகலரிடமும் கோருகின்றோம் என்றுள்ளது.

### இலங்கை தமிழரசுக் கட்சி

உதயன் அலுவலக செய்தியாளர் செ.கவிதரன் கடந்த சனிக்கிழமை தாக்கப்பட்ட சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று இலங்கை தமிழரசுக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது பிரதேச மக்களது வாழ்வுரிமை, ஜனநாயக உரிமை பற்றியும் அவற்றைப் புறக்கணித்து அடக்கி ஒடுக்கும் நிகழ்வுகள் பற்றியும் பிரசித்தப்படுத்தும் பணியிலே எமது பிரதேச பத்திரிகைகள் செய்கின்றன. அவ்வாறான ஜனநாயக விழுமியம் சார்ந்த செய்திகளை உதயன் தவறாது வெளியிடுவது பற்றி பொறுத்துக் கொள்ள முடியாதவர்களது செயற்பாடாகவே இந்தத் தாக்குதலைப் பார்க்கலாம்.

கருத்தை கருத்தால் எதிர்கொள்வதே ஜனநாயக வழிமுறை. அதைவிடுத்து அடிதடியிலும், அச்சுறுத்தல்களிலும், தனிமனித தாக்குதல்களிலும் ஈடுபடுவது நாகரிகமான செயல் அல்ல.

ஊடகவியலாளர் என்ற முறையில் தனது பணியை செய்யும் ஒருவரை உடல் ரீதியாகத் தாக்குவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறான நிகழ்வுகள் இனிமேலும் இடம்பெறாதிருக்க சட்ட ஒழுங்கு அமுலாக்க அமைப்புக்கள் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர்களது கடமையும் பொறுப்புமாகும்- என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### அடைக்கலநாதன் எம்.பி.

உதயன் அலுவலகச் செய்தியாளர் செ.கவிதரன் கடந்த சனிக்கிழமை காலை இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டிக்கும் முகமாக அவர் தெரிவிக்கையில்:

நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படும் ஊடகவியலாளர்கள் தற்போது சட்டத்துக்கு மாறாகத் தாக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் வருகின்றார்கள். நீதியான முறையில் மக்களுக்காக சேவை செய்து வரும் ஊடகவியலாளர் மதிக்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால் தற்போதைய காலத்தை எடுத்துக் கொண்டால் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் தொடர்கதையாகிவிட்டது.

யுத்த காலத்தில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். பலர் தாக்கப்பட்டுள்ளனர். பலர் உயிரச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் தற்போது யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசு தெரிவிக்கின்ற போதும் யுத்தகாலத்தில் கொலை செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் மரணம் தொடர்பில் அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் உதயன் அலுவலகச் செய்தியாளர் செ.கவிதரன் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்- என்று தெரிவித்துள்ளார்.

### சர்வதேச இந்துமத பீடம்

உதயன் பத்திரிகையின் ஊடகவியலாளரான கவிதரன தாக்கப்பட்டமைக்குச் சர்வதேச இந்துமத பீட செயலாளரும் ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளருமான பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகள் எப்பொழுதும மக்களுக்குச் செய்திகளை வழங்குவதில் பின்னின்றதில்லை. இந்தச் செய்திகள் சில சந்தர்ப்பங்களில் சிலரை விமர்சனம் செய்வதாகவும் அமைகின்றன. எப்பொழுதும் விமர்சனங்கள் ஒருவரை நல்வழிப்படுத்தி அவர்கள் சேர்வுக்கு உதவும் செயலாகவே அமைகின்றன. கஷ்டங்கள், சிரமங்கள் நிறைந்த காலத்திலும் பத்திரியாளர்கள் தமது கடமைகளைச் செய்து வந்துள்ளனர். இந்தச் சிறந்த பணிக்கு உதவி வரும் ஊடகவியலாளர்களைத் துன்புறுத்தக் கூடாது, அச்சுறுத்தவும் கூடாது- என்று அவர் கண்டனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்தப்பட்ட நிவாரணம் இவ்வார இறுதி முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,மே31

கடந்த 5 மாத காலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள உலருணவு நிவாரணம் மீண்டும் இந்த வார இறுதியில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டு வந்த உலருணவு நிவாரணம் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களால் மாவட்டத்துக்கு உள்ளேயே இடம் பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிவாரணம் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து திடீரென இடை நிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக மக்களால் பல்வேறு முறைப்பாடுகள் அரச அதிபருக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இந்த வார இறுதியில் மீளவும் அது வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய 3 மாதங்களுக்கான நிவாரணமே வழங்கப்படவுள்ளது.

இந்த நிவாரணங்களை முன்னர் பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-15)

# தீவகத்தில் உணவகங்களில் சுகாதாரப் பகுதியினர் சோதனை

யாழ்ப்பாணம், மே 31

தீவகப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கைகளைச் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள கடைகள், தேநீர்ச் சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றுக்குத் திடீரெனச் செல்லும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது காலாவதியான பொருள்கள் பல கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன் உணவகங்கள், தேநீர்க் கடைகள் என்பவற்றின் சுகாதார நடைமுறைகள் பார்வையிடப்பட்டதுடன் சுகாதார மற்ற முறையில் இயங்கிய உணவகங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

உணவகங்களில் உணவு வகைகள் யாவும் மூடிய கண்ணாடிப் பெட்டியில் வைத்தே விற்பனை செய்யப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

(த-26)

## எப்போது கவனிப்பர்...



*எதிர்பார்ப்புடன்: பாஷையூர் கடற்கரையில் அணைக்கட்டு மற்றும் இறங்குதுறை ஆகியவற்றை நிறுவும் பணிகள் ஆரம்பமாகி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை அங்கு உருப்படியான வேலைகள் எதுவும் நடைபெற்றதாக இல்லை. இந்தப் பணிகளுக்காக வீதியோரத்தில் போடப்பட்டுள்ள கற்குவியல்களால் போக்குவரத்துக்கு இடையூறு உள்ளதாக அந்தப் பகுதி மீனவர்கள் குறைபட்டுக்கொள்கின்றனர். உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா? (த-26)*

# சிங்கள வகுப்பில் பங்குபற்ற 40 பேருக்கு மட்டுமே அனுமதி

## ஏனையோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

வலி.வடக்கு, மே 31

வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனம் யாழ்.மாவட்ட அரச ஊழியர்களுக்காக நடத்தும் சிங்களப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்வதற்காக சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு தரங்களைச் சேர்ந்த அரச ஊழியர்கள் நேற்று முன்தினம் ஒன்று கூடினார்கள்.

எனினும் சிங்கள வகுப்புக்களில் ஒரு நிலையத்தில் ஆகக் கூடியது நாற்பது பேர் மட்டுமே இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமையால் பலரும் ஏமாற்றமடைந்ததுடன் அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர்.

வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் எந்தவகையான நிபந்தனைகள் அறிவுறுத்தல்களும் இன்றி யாழ். மாவட்ட அரச திணைக்களங்களுக்குக் குறிப்பாக பிரதேச செயலகங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களுக்கும் சிங்கள வகுப்புத் தொடர்பான சுற்று நிருபத்தை அனுப்பிவைத்தது.

அதில் - கடந்த சனிக்கிழமை 28 ஆம் திகதி இந்த வகுப்பு ஆரம்பமாகவுள்ள தால் இதில் ஊழியர்களைக் கலந்துகொள்ளும் படி அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

இதனால் அரச உத்தியோகத்தில் பல்வேறு தரங்களிலும் கடமையாற்றும் அலுவலர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை நான்கு இடங்களில் இடம்பெற்ற வகுப்புக்களுக்கும் ஒரு இடத்தில் 200 இற்கு மேற்பட்டோர் என்ற அடிப்படையில் 1000 இற்கும் மேற்பட்டோர் வந்திருந்தனர்.

ஆனால் ஏற்பாட்டாளர்கள் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டவர்களைக் கூட்டமாக மண்டபத்தில் வைத்துப் படம் பிடித்து விட்டு இறுதியில் 2011 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களாக நியமனம் பெற்றவர்கள் உட்படப் பிந்திய காலத்தில் நியமனம் பெற்ற 40 பேருக்கு மட்டுமே இடம் வழங்கப்படும் எனவும், ஏனையவர்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தமையால் நூற்றுக் கணக்கானவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்ததுடன் அதிருப்தியும் வெளியிட்டனர்.

சரியான திட்டமிடல் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக் காரணமாக தாம் வீண் சிரமங்களை எதிர்நோக்கியதாக இதில் கலந்து கொள்ளமுடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

(த-86)

# தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தினமும் கடத்தப்படும் கால்நடைகள்

வரணி, மே 31

தென்மராட்சி கிழக்குப் பிரதேசங்களான மிருசுவில், குடமியன், கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சிப் பிரதேச உள் வீதிகள் ஊடாகத் தினமும் கால் நடைகள் இறைச்சிக்காகக் கடத்தப்பட்டு வடமராட்சிப் பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

கூலிக்கு அமர்த்தப்பட்ட அப்பாவிகள் சிலரே இவற்றைக் கொண்டு செல்வதாகக் கூறப்படுகிறது. இவற்றை செயற்படுத்துபவர்கள் தாம் பொலிஸாரிடம் பிடிபடாமல் இருக்க மோட்டார் சைக்கிளில் ஆங்காங்கே ஓடி பொலிஸாரின் நடமாட்டத்தை அவதானித்து அவ்வப்போது மாடுகள் கொண்டு செல்பவர்களுக்குத் தகவல் கொடுக்கின்றனர். இதனால் கால்நடைகள் பாதுகாப்பாகக் கடத்தப்படுகின்றன.

இவ்வாறு கொண்டு செல்லப்படும் கால்நடைகள் வரணிப் பிரதேசத்தின் வடக்கு எல்லையில் உள்ள சதுப்பு நிலக் காட்டின் ஊடாகக் காவல்துறையினரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு வடமராட்சிப் பகுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இவற்றை அடிக்கடி வரணிப் பிரதேச உள்வீதிகளில் காணக் கூடியதாக உள்ளது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (த-122)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மருத்துவ உபகரணங்கள்

தென்மராட்சி, மே 31

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விடுதிகளுக்கு இரண்டு கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் தளபாடங்களும் வழங்கப்படவுள்ளன.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைக்கப்பட்டு வரும் சத்திர சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவப் பிரிவு விடுதிகளுக்கான உபகரணங்களையும் தளபாடங்களையும் இந்த நிறுவனம் வழங்க முன்வந்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் ஜப்பானிய நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட குழந்தைகள் விடுதிக்கு அந்த நிறுவனத்தினரால் வைத்திய உபகரணங்களும் தளபாடங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-207)

# வலி. வடக்கில் கிணறுகள் துப்புரவு செய்ய இருபது நீர் இறைக்கும் இயந்திரங்கள்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், மே 31

வலி.வடக்கில் மக்கள் புதிதாக மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் உள்ள கிணறுகளைத் துப்புரவு செய்வதற்கான வேலைத் திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் உள்ள கிணறுகளைத் துப்புரவு செய்வதற்கென 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கிணற்றினைத் துப்புரவு செய்ய விரும்புகின்ற மக்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழம் குறைந்த கிணற்றை துப்புரவு செய்வதற்கு 3 ஆயிரம் ரூபாவும் ஆழம் கூடிய கிணற்றை துப்புரவு செய்வதற்கு 5 ஆயிரம் ரூபாவும் நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு எரிபொருளும் பிரதேசசபையினூடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படுகின்றன.

மேலும் மக்கள் இவ்வாறு கிணற்றைத் துப்புரவு செய்த பின்னர் சுகாதாரப் பரிசோதகர் மூலம் கிணற்று நீரைப் பரிசோதனை செய்த பின்னரே அவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர். அத்துடன் மக்கள் மீளக்குடியேறிய பிரதேசங்களில் அவர்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிராம சேவகர் பிரிவுகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-15)

# காரைநகரில் பிரதான வீதிகளை ஆக்கிரமிக்கும் கால்நடைகள்

காரைநகர், மே 31.

காரைநகரில் வர்த்தக நிலையங்களையும், வீதிகளையும் இரவு வேளைகளில் ஆக்கிரமிக்கும் கால்நடைகளினால் வர்த்தகர்களும் வீதியில் வாகனம் செலுத்துவோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பயன் கிடைக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கால்நடைகள் வீதிகளை ஆக்கிரமிப்பதன் காரணமாக அப்பகுதிகளில் அடிக்கடி வீதி விபத்துக்களும் இடம்பெற்று வருவதாகப் பொதுமக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்.

காரைநகர் புதுவீதிச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையங்களையும் வீதிகளையும் ஆக்கிரமித்து இருக்கும் கால்நடைகளால் அந்தப் பகுதியில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டு; உரிய நடவடிக்கைகளை மேற்கொள்க

## இந்து மாமன்றத்திடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள இந்து ஆலயங்களில் அண்மைக்காலமாக பெறுமதி வாய்ந்த விக்கிரகங்கள் களவாடப்படுகின்றமை தொடர்பாக இந்து மாமன்றத்தின் தலைமைப்பீடம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் இடம்பெற்ற அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிவதொண்டர் மாநாட்டில் கலந்துகொண்ட இந்து மாமன்றத்தின் பிரதிநிதிகளிடம் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

யாழ்.மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் 50 விக்கிரகங்கள் காணாமல் போயுள்ளன. அத்துடன் கடந்த வாரம் மட்டும் 6 விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்வு செய்யப்பட்டு வரும் வலி.வடக்கு பிரதேசங்களின் ஆலயங்களில் விக்கிரகங்கள் இல்லாமல் ஆலயங்களும் இடிபாடுகளுடன் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே இது தொடர்பாக இந்து மதம் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் மன்றங்கள் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி பண்பாட்டு விழுமியச் சொத்துக்களான ஆலய விக்கிரகங்களைப் பாதுகாக்க வேண்டும் - என்று ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்தார். (த-313)

# சாவற்கட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவிகள் இல்லை

நவாலி, மே 31

வன்னியிலிருந்து வந்து சாவற்கட்டு கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு இதுவரை எவ்விதமான உதவிகளும் கிடைக்கவில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல்தொழில் செய்யும் இந்தக் குடும்பங்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வன்னியில் தங்கி மீண்டும் இங்கு மீளக் குடியமர்ந்துள்ளனர். இவர்கள் தமது தொழிலைச் செய்வதற்கு வலைகள், வள்ளங்கள் மற்றும் உப கரணங்கள் இல்லை. சிலரது வீடுகள் சேதமடைந்தும் அவைகளைத் திருத்த முடியாத நிலையில் உள்ளன. இன்னும் சிலருக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை விட தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் உதவியும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இவர்களின் நிலையைக் கவனத்தில் எடுத்து உதவி செய்வதற்கு உரியவர்கள் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-100)

# நடமாடும் மருத்துவ சேவை

யாழ்ப்பாணம், மே 31

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் நடமாடும் மருத்துவ சேவை யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் ஆயுர்வேத வைத்திய சேவை வழங்கப்படவுள்ளது.

இதற்காக தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள பரம்பரை வைத்தியர்களை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொண்டு வருகின்றது. (த-313)

## நல்லுள்ளத்துடன்...



எதிர்கால சந்ததிக்காக: ஆனைக்கோட்டை விநாயகர் முன்பள்ளி மாணவர்கள் தரையில் அமர்ந்திருந்து தமது கல்வியைத் தொடர்வதாக அண்மையில் உதயனில் செய்தி வெளியாகியது. இதனையடுத்து யாழ். டீசல் என்ஜினியர்ஸ் உரிமையாளர் ராசா வாமதேவன் 50 கதிரைகளை முன்பள்ளி ஆசிரியர்களிடம் அன்பளிப்பாக வழங்குகிறார். (த-100)

# வடிகால்கள் திருத்தியமைப்பு

யாழ்ப்பாணம், மே 31

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள வடிகால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தூர்ந்து போய் சேதமுற்றுக் காணப்பட்ட இந்த வடிகால்கள் ஊடாகக் கழிவுநீர் ஒழுங்காக வெளியேற முடியாத நிலை காணப்பட்டது.

தற்போது இந்த வடிகால்களைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இதேவேளை, பாஷையூர் குறுக்கு வீதிகளில் உள்ள கழிவு நீர் ஓடும் வடிகால்கள் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் கழிவு நீர் கடலுக்குள் வடிந்து செல்வதும் தடைப்பட்டுள்ளது . (த-26)

# வலி.கிழக்குப் பகுதியில் 8 வீதிகளுக்கு விரைவில் தார்

யாழ்ப்பாணம், மே 31

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட 8 வீதிகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்வி கோரப்பட்டுள்ளன.

இருபாலை கற்பகப் பிள்ளையார் வீதி, கோப்பாய் பழைய பொலிஸ் நிலைய வீதி, உரும்பிராய் உப அலுவலக ஒழுங்கை, உரும்பிராய் பலாலி வீதி முதலாம் ஒழுங்கை, நீர்வேலி மோதிரக் கேணி இணைப்பு வீதி, புத்தூர் விஷ்ணு வித்தியாலய வீதி, அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி பெரியதம்பிரான் வீதி ஆகியவையே தார் ஊற்றிப் புனரமைக்கப்படவுள்ளன. (த-26)

# வரணிப் பிரதேசத்தில் சட்டவிரோத மண்அகழ்வு

வரணி, மே 31

வரணிப் பிரதேசத்தில்தற்சமயம் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்றுவருவதுடன் டிராக்டர் பெட்டிகளில் இந்த மண் தினமும் ஏற்றப்பட்டு குறுக்கு வீதிகள் ஊடாக வெளியிடங்களுக்குக்கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

டிராக்டர் பெட்டிகளில் மண் ஏற்றப்பட்டு அதன்மேல் தென்னை ஓலைகளைப் போட்டு மூடிப் பின்னர் அதன்மேல் விறகுகளை ஏற்றிப் பொலிஸாரின் கண்ணில் படாமல் கன கச்சிதமாக இந்த மண் கொண்டு செல்லப்படுகின்றது.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைக்குக் கைத்தொலைபேசிகளுடன் சிலர் சந்திக்குச் சந்தி நின்று பொலிஸாரின் நடமாட்டம் பற்றித் தகவல் கொடுக்கின்றனர்.

இதனால் பொலிஸாரிடம் பிடிபடாமல் சட்டவிரோதமாக மண் தினமும் கடத்தப்படுகின்றது.

வரணிப் பிரதேசத்தில் இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி பிரதேசங்களில் இந்தச் சட்ட விரோத [illegible] (த-122)

# யாழ்.பிரதேச செயலர் பிரிவில் 100 வீடுகளில் தோட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 31

10 லட்சம் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 100 வீடுகளில் தோட்டங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தச் செயற்றிட்டத்தில் மூலிகைத் தோட்டங்களை அமைப்பதற்காக விசேட மூலிகைச் செடிகள் பிரதேச செயலகத்தால் உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ். பிரதேச செயலக வளாகத்துக்குள் மூலிகைத் தோட்டத்தை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-313)

# கோட்டை அகழியின் புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். கோட்டையைச் சுற்றி உள்ள அகழியின் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் யாழ். கோட்டைப் புனரமைப்புப் பணிகள் கடந்த ஆண்டு ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

கோட்டையின் மதில் முன்னர் இடம்பெற்ற யுத்தம் காரணமாகப் பல இடங்களில் மோசமாகச் சேதமடைந்து சிதைந்து காணப்பட்டது. இந்த மதிலை புனரமைப்புச் செய்யும் பணிகள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தன. இந்தப் பணிகள் ஓரளவு நிறைவடையும் நிலையை எட்டியுள்ளன.

கோட்டைக்குள் உள்ள கட்டடங்களைப் புனரமைப்புச் செய்யும் பணிகளும் துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது அகழியைப் புனரமைப்புச் செய்யும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்காக அகழியில் இருக்கும் நீர் பாரிய பம்பிகள் மூலம் வெளியேற்றப்பட்டு கடலுக்குள் விடப்படுகின்றது. கடந்த சில தினங்களாக இந்தப் பணி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. (த-26)

# சுயமாக பஸ் சேவைகளை நடத்துவதற்கு இடையூறு

## வடமராட்சி சங்கம் குற்றச்சாட்டு

வடமராட்சி, மே 31

சுயமான முறையில் தனியார் பஸ்சேவைகளை நடத்துவதற்கு யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் தடையாக இருப்பதாக வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் தனியார் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் சேவைகளை நடத்தவோ அதற்கான நேரசூசிகளை வகுக்கவோ இணையம் தடையாக இருக்கின்றது. இதனால் சுயமாக எம்மால் சேவைகளை நடத்த தடை ஏற்பட்டுள்ளதென சங்கத்தின் பிரதிநிதிகள் வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் மீது இணையம் ஆதிக்கம் எதனையும் செலுத்தக்கூடாது. சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள் இருக்கும் போது இணையம் எதற்கு எனவும் அங்கு கேள்வி எழுப்பிய பிரதிநிதிகள் இணையத்தின் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, கல்லாறு கிராமத்தின் பேரவலம்

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகக் காணப்படும் கல்லாற்றுக் கிராமத்தில் வாழும் மக்கள் என்றுமில்லாதவாறு நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களைக் குடியேற்றும் நோக்கில் பல திட்டங்கள் முன்மொழியப்பட்டு ஒரு நவீன வசதிகளைக் கொண்ட கிராமமாக இதனை மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போது போர் காரணமாக இந்தத் திட்டங்கள் இடைநடுவில் நின்றுபோயிருந்தன.

தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் இந்தக் கிராமத்தின் நிலை மிகவும் பரிதாபகரமாகவே உள்ளது. கிளிநொச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவின்கீழ் உள்ள பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் அடங்கும் இந்தக் கிராமத்தில் 240 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 700 இற்கும் மேற்பட்ட மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால் இவர்களுக்கான அடிப்படை வசதிகள்கூட இன்னமும் முழுமையாகக் கிடைக்கவில்லை. குறிப்பாக குடிதண்ணீர் கூட வேறு இடத்தில் இருந்து தான் பெறவேண்டும். மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் பவுசர் மூலம் நீர் விநியோகம் இடம்பெற்றாலும் தேவைக்குப் போதுமான அளவு கிடைப்பதில்லை. அவர்களுடைய ஒருநாள் பொழுதில் குடிதண்ணீரைப் பெறுவதற்கு அதிக நேரத்தைச் செலவிடுவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

**கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகக் காணப்படும் கல்லாறுக் கிராமத்தில் வாழும் மக்கள் என்றுமில்லாதவாறு பல இன்னல்களைச் சந்திக்கின்றனர். இதனால் கல்வி, குடிதண்ணீர் போன்ற பல பிரச்சினைகளை இவர்கள் எதிர் கொண்டுள்ளனர். அங்கு பாடசாலை கல்வி சீரில்லை. ரியூசன் வசதிகளும் இவர்களுக்கு இல்லை இவர்களின் தண்ணீர் பிரச்சினை எப்போது தான் தீரும்?**

ஏ-35 பரந்தன் - முல்லை வீதியின் சுண்டிக்குளம் சந்தியில் இருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் அமைந்துள்ள இந்தக் கிராமத்துக்கு உரிய போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லை.

புழுதிபடிந்த பெரிய குண்டும் குழியுமான பாதைவழியே பயணித்து தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதிகமான மக்கள் கடற்றொழிலையே வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டிருக்கின்றபோதிலும் அவர்களுக்கான தொழில் அனுமதிகள் இதுவரை உரிய முறையில் கிடைக்கவில்லை. ஆனால் கடற்றொழில் தவிர்ந்த ஏனைய தொழில் எதுவும் இந்த மக்களுக்குத் தெரியாது. இதனால் இவர்களது வாழ்வாதாரம் நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றது.

இது ஒரு புறமிருக்க இந்தக் கிராமத்தில் இயங்கிவரும் பாடசாலையான கல்லாறு தமிழ் வித்தியாலயத்தின் நிலையும் பரிதாபகரமாகவே உள்ளது.

இந்தப் பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரையான வகுப்புகள் உள்ளன. சுமார் 212 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் வகுப்பறைகளுக்கான போதியவசதிகள் இன்றி மரநிழல்களின்கீழ் வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

அத்துடன் இந்தப் பாடசாலையில் அதிபர் உட்பட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்கள் வெளியிடங்களில் இருந்து தினமும் பாடசாலைக்கு வந்து செல்கின்றனர். பல ஆசிரியர்கள் முழுமனதுடன் பாடசாலைக்குச் செல்வதில்லை. இதற்குக் காரணம் ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் எதுவும் இங்கு இல்லை. அத்துடன் குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. போக்குவரத்துக்கள் சீராக இல்லை. இதனால் ஆசிரியர்களின் அதிக நேரம் போக்குவரத்தில் செலவாகின்றது.

இதனைவிட பின்தங்கிய பாடசாலைகளில் சேவைபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அதிகஷ்டப் பிரதேச வாழ்க்கைப்படி இப்பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் ஏனைய பிரதான வீதியில் உள்ள பாடசாலைகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது எனவும் கல்விச் சமூகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இது இவ்வாறு இருக்க, பாடசாலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மாணவர் குழு ஒன்றைச் சந்தித்து அவர்களுடன் சிறிது நேரம் உரையாடிய போது; நாங்கள் பிறந்தது முதல் கல்லாறில் தான் இருந்தோம். பின்னர் இடம்பெயர்ந்துபோய் இப்போது திரும்பி வந்திருக்கின்றோம். ஆரம்பத்தில் இந்தப் பாடசாலையில்தான் படித்தோம். இப்போதும் இதில்தான் படிக்கின்றோம்.

வீட்டிலுள்ளவர்கள் தொழில் ஒன்றுக்கும் போவதில்லை. இன்னமும் தொழிலுக்கு அனுமதிக் கவில்லை. இதனால் வீட்டில் கஷ்ட நிலைதான். நாங்கள் காலையில் எதுவும் சாப்பிடாமல் பள்ளிக்கூடம் வருகின்றோம். பள்ளிக்கூடம் போனாலும் அங்கே ஆசிரியர்களும் ஒழுங்காக வரமாட்டார்கள். அவர்கள் வருவதற்கு ஒன்பது, பத்து மணியாகும். பின்னர் பஸ்ஸுக்குப் போக வேணும் என்று கூறி வேளைக்குப் போய் விடுவார்கள். ரியூசன் வசதி ஒன்றும் இல்லை. வீட்டிலும் படிக்கக் கூடியமாதிரி வசதிகள் இல்லை. தெரியாத பாடங்களைக் கேட்டுப் படிக்கக்கூடிய நிலையும் இல்லை. இதனால் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றோம் என அவர்கள் தெரிவித்தனர்.

இப்படி அடிப்படை வசதிகள் இன்றியும் அபிவிருத்திகள் இன்றியும் எத்தனையோ கிராமங்கள் இருண்டு கிடக்கின்றன. இதனால் ஒரு சமுதாயம் பின்னோக்கித் தள்ளப்படுவதுடன் அவர்களின் வாழ்வியலும் பாதிக்கப்பட்டு போசாக்கு, கல்வி, பொருளாதார வசதி எதுவுமற்ற ஒரு சமூகத்தையே எதிர்காலத்தில் காணமுடியும்.

பா. துவாரகன்

# மரண அறிவித்தல்



## மரியநாயகம் திருச்செல்வநாயகம்

மாதகலைப் பிறப்பிடமாக வும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் திருச்செல்வநாயகம் 22.05.2011 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - காணிக்கை முத்து தம்பதியரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா சரோசா தேவி தம்பதியரின் அன்புமிகு மருமகனும் சாந்தியின் அன்புக் கணவரும் சங்கீதா, விமலறூபன் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் விமலாதேவி (இந்தியா), வயிலற், ராணி, யஸ்ரின் (கனடா), அருள்நாயகம் (கனடா), ஜெக நாதன் (சிவராதா, நியூசிவராதா, நியூலிற்றில் இந்தியன் உரிமையாளர்), காலஞ்சென்றவர்களான அன்ரன், குலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.06.2011) புதன்கிழமை மு.ப.11.30 மணிக்கு லண்டனில் உள்ள CHRIST THE KING CHURCH இல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு லண்டனில் நல்லடக்கம் செய்யப்படும். அன்றைய தினம் 01.06.2011 புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு மாதகல் புனித தோமையார் தேவாலயத்தில் இவரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அன்பர் கள் அனைவரையும் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப் பாற்றிற்காக வேண்டுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரன் ம.ஜெகநாதன்
(சிவராதா, நியூசிவராதா,
நியூ லிற்றில் இந்தியன் - உரிமையாளர்),

மாதகல் (48,19,25)

# தண்டப் பணம் விதிப்பு

கிளிநொச்சி நகரில் சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத நிலையில் வீதியோரத்தில் குளிர்பானம் தயாரித்து வைத்து விற்பனை செய்த ஒருவருக்கு 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப் பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத வகையில் வீதியோரத்தில் குளிர்பானம் தயாரித்து விற்பனை செய்து வந்த ஒருவர் பொதுச் சுகாதார சேவையின் ஆய்வுகளின்மூலம் இனங்காணப்பட்டு குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இதனை விசாரித்த மாவட்ட நீதிவான் குறித்த நபருக்கு 500 ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் எச்சரிக்கை செய்தும் அவரை விடுவித்தார்.

(க-6)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## வைத்தீஸ்வர ஐயர் வெங்கடகிருஷ்ண சர்மா (குட்டி ஐயா)



தோற்றம்
26.09.1957

மறைவு
26.05.2006

திதி: கரவருடப் சதுர்த்தசி

அப்பா!
ஐந்து ஆண்டுகளானாலும் இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் உங்கள் நினைவுகளோடும் கண்ணீரோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் எங்களை விட்டுச் செல்ல எப்படி மனம் வந்தது ஐயா

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (4716)

என்றும் உம் பிரிவால் வாடித் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
02.03.1937

விண்ணில்
27.05.2010



## அமரர் நாகன் சின்னப்பொடியன்

திதி:31.05.2011

வாழ்க்கையில் நாம் உயர
நல்ல ஏணியாய் நீயிருந்தாய்
நாம் உயர்ந்த வேளை
நீ ஏன் மறைந்தாய் தெய்வமே!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் மனம்
மீண்டும் நீ வரவேண்டும்
அது வரை நாம் வழிமேல் விழி வைத்துக்
காத்திருப்போம் எம் தெய்வமே!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இராஜபுரி,
கைதடி கிழக்கு. (27) (4720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச புகைத்தல் தினத்தையொட்டி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு

வவுனியா, மே 31

இன்று கொண்டாடப்படும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் வவுனியா மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வினாடிவினாப் போட்டிகள் நடைபெற்றுள்ளதாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

தற்போது புகைத்தல், மது பாவனை மற்றும் போதை வஸ்துப் பாவனை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் ஊடாக எமக்குத் தெரிய வருகிறது. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் இதன் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கும் கருத்தரங்குகள் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

எனவே இந்த வருடம் இவ்வகையான போட்டிகளை ஏற்படுத்தி அவர்களுக்குப் பரிசில்களை வழங்கும் செயற்பாடுகள்ஊடாக இவற்றை ஓரளவு தவிர்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த வருட சர்வதேச புகைத்தல் தினத்தையொட்டி கடந்தவார இறுதியில் இருதினங்கள் நடைபெற்ற வினாடிவினாப் போட்டிகள் வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றன. சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட உயர்தர மாணவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமான இன்று செவ்வாய்க்கிழமை பிராந்திய சுகாதார சேவை அலுவலகத்தில் நடைபெறும் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-501)

# போலி தேன் உற்பத்தி நிலையத்தை நடத்தியவர் வவுனியாவில் கைது

வவுனியா, மே 31

வவுனியா - நெளுக்குளத்தில் இயங்கும் போலி தேன் உற்பத்தி நிலையம் கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியாப் பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனிப்பாணியைப் போத்தல்களில் இட்டு அதன் மேலாகத் தேனடைத் துண்டங்களைப் போட்டுத் தயாரிக்கப்படும் போலி தேன் போத்தலொன்று 200 ரூபா வீதம் தென்பகுதிக்கு எடுத்துச் சென்று இந்த நிலையத்தால் விற்பனை செய்யப்படுகிறது.

வவுனியாப் பொலிஸ் நிலையத்தின் சுற்றாடல் பொலிஸ் பிரிவு மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், நகரசபை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் மேற்படி போலி தேன் உற்பத்தி நிலையத்தை நடத்திவருபவரெனக் கருதப்படும் பெண்மணியொருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனியைக் காய்ச்சிப் பாணி தயாரித்து போத்தலொன்றின் முக்கால் பகுதிவரை சீனிப் பாணியை நிரப்பி எஞ்சிய கால்பகுதியில் சுத்தமான தேன் மற்றும் தேனடைத் துண்டங்களை இட்டு விற்பனைக்குத் தயார்படுத்தப்பட்டிருந்த 800 லீற்றர் வரையிலான போலித் தேனும் அக்குழுவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-க-22)

## கடற்றொழிலாளர் சமாசக் கூட்டம்

பூநகரி, மே 31

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வினாசியோடை அ.த.க.பாடசாலை மண்டபத்தில் சமாசத்தின் செயலாளர் ந.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சென்ற கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படுவதுடன் முக்கிய உரைகள் சிலவும் இடம்பெறவுள்ளன.

மேலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு சமாசத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.(க-406)

## வெற்றிப் பாதையில்...



திறமைக்குப் பரிசு: கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இல. 2, அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இரத்தினகுமார் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார். (410)

## மாந்தை கிழக்கில் 150 நிரந்தர வீடுகள்

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வன்னிவிளாங்குளம், மூன்றுமுறிப்பு ஆகிய பகுதிகளில் யு.என்.கபிராட் நிறுவனத்தினால் 150 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வன்னிவிளாங்குளம், மூன்றுமுறிப்பு ஆகியபகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கான நிரந்தரவீடுகளை அமைக்கும் பணிகளை யு. என். கபிராட் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் வன்னிவிளாங்குளம் பகுதியில் 33 வீடுகளையும் மூன்று முறிப்பு பகுதியில் 117 வீடுகளையும் அமைத்து வருகின்றது. (க-6)

# ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு

கிளிநொச்சி, மே 31

தேசிய கல்வி நிறுவகத்தினால் தரம் 10,11 வகுப்புக்களுக்கு முயற்சியாண்மைக் கல்வியை கற்பிக்கும், கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு ஒன்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடைபெறும்.

இந்தச் செயலமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு ஆகிய ஏழு கல்வி வலயங்களைச் சேர்ந்த பொருத்தமான ஆசிரியர்களும், வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி வலயங்களுக்கு இந்தச் செயலமர்வுக்குரிய ஆசிரியர்களையும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களையும் அனுப்பிவைக்குமாறு தேசிய கல்வி நிறுவக வணிகக் கல்வித்துறைப் பணிப்பாளர் கலாநிதி அ.சிவநேசராஜா அறிவித்துள்ளார்.

(க-405)

# சொந்தக்காணி இல்லாததால் உதவிகளை இழந்துநிற்கும் பன்னங்கண்டி மக்கள்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி, பன்னங்கண்டி கிராமத்தில் உள்ள சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக்காணிகள் இன்றி இருந்து வருவதனால் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை இழக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கேஎன்/ 25 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பசுபதி கமம், சரஸ்வதி கமம் மற்றும் பன்னங்கண்டி ஆற்றினை அண்டிய பகுதி என்பவற்றில் கடந்த பல ஆண்டுகளுக்கும் மேலாக சுமார் 325 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதில் 47 குடும்பங்களுக்கு மட்டுமே சொந்தக்காணிகள் உள்ளன. ஏனைய குடும்பங்கள் சொந்தக்காணிகள் இன்றியே வாழ்ந்து வருகின்றன. இதனால் இங்குள்ள இந்தக் குடும்பங்களுக்கு நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார உதவிகள் எவையும் கிடைப்பதில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

சொந்தக் காணி இல்லாத காரணத்தால் தமக்கான உதவித்திட்டங்கள் மறு[illegible]ப்படுவதாகவும் பாதிக்கப்ப[illegible] மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# கசிப்பு விற்பனையாளர் இருவர் தண்டமாக ரூ. 27 ஆயிரம் செலுத்தினர்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி, குமாரசுவாமிபுரம் அக்கராயன் ஆகிய பகுதிகளில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்தவர்களிடமிருந்து 27 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் ஐந்து போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவர் அக்கராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 25 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் பெ. சிவகுமார் குறித்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் எச்சரிக்கை செய்து விடுவித்தார்.

இதேவேளை குமாரசுவாமிபுரம் பகுதியில் இரண்டு போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு 7 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக விதிக்கப்பட்டது. (க-6)

# கஷ்டப் பிரதேசத்துக்கான கொடுப்பனவில் பாகுபாடு

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேசங்களுக்கு வழங்கப்படும் படிகள் வழங்கப்படுவதில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர் நியமனங்களின் போது பின் தங்கிய கிராமப் புறங்களில் சேவைக்கு அமர்த்தப்படுகின்ற பாடசாலை ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவாக அவர்களின் வேதனத்தைவிட இரண்டாயிரம் ரூபா வழங்கப்படுவது வழக்கம்.

ஆனால் மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகள் குறைந்த கிளிநொச்சி, கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இந்தப் படிகள் வழங்கப்படுவதில்லை. ஆனால் ஏ-35 பரந்தன் - முல்லை வீதியில் உள்ள பல பாடசாலைகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றபோதும்ஏ-35 வீதியில் இருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள இந்தப் பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமையானது ஆசிரியர்களின் செயற்பாடுகளைப் பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## கால்நடைகள் கொண்டு செல்லத்தடை

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கால்நடைகளை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வது தற்காலிகம[illegible]க நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை[illegible]யுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முன்னர் கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு உரிமையாளர்கள் தங்களது உரிமையை உறுதிப்படுத்தியே அனுமதிகள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது தடைகள் விதிக்கப்பட்டதாகவும் அதற்[illegible]ணங்கள் இருக்கலாம் [illegible] தெரிவிக்கப்பட்டுள்[illegible]. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 மே 2011 செவ்வாய்க்கிழமை

# பல்கலைக்குச் சென்ற அமைச்சருக்கு மாணவர்கள் கூச்சலிட்டு எதிர்ப்பு

அம்பாறை,மே 31

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தென் கிழக்கு பல்கலைக்கழகத்துக்குச் நேற்று திங்கட்கிழமை சென்றபோது பல்கலைக்கழக மாணவர்கள் கூச்சலிட்டு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்கு உயர் கல்வி அமைச்சர் வருகை தந்தபோதே மாணவர்கள் இவ்வாறு கூச்சலிட்டுள்ளனர்.

மாணவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அமைச்சர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

அமைச்சரின் பாதுகாப்புக்காக வந்த பொலிஸாரினால் எதிர்ப்புத் தெரிவித்த சில மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

உயர் கல்வி அமைச்சர் பேராதனை மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழங்களுக்கு முன்பு சென்றபோது பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு வழிகளில் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சங்கமன் கிராமத்தில் குடிதண்ணீர் வசதி இல்லை; நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

அம்பாறை,மே 31

திருக்கோவில் பிரதேசசபைக்குட்பட்ட சங்கமன் கிராம மக்கள் தமது குடிதண்ணீர் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு நாளாந்தம் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றினைப் பெற்றுத்தரும் பொருட்டு, இந்தப்பகுதிக்கு குடிதண்ணீர் இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சங்கமன் கிராமத்தில் தற்போது 272 குடும்பங்களைச் சேர்ந்த 1084 பேர் வசித்து வருகின்றனர்.

குடிதண்ணீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் இந்தக் கிராமத்தின் பல பகுதிகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை. இதனால், தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாளாந்தம் முகங்கொடுத்து வருவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிகின்றனர்.

எனவே, தமது குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக நீர்வழங்கல் அதிகார சபை மூலம் குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுத் தருவதற்கு பொறுப்புமிக்க அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொழிற்சங்கத்தின் மூலம் தீர்க்கலாம்

## ம.தொ.மு.பொதுச் செயலாளர் கூறுகிறார்

நுவரெலியா, மே 31

தோட்டக்கமிட்டித் தலைவர்கள் தமது தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி தோட்ட முகாமையாளர்களுடன் தொழிற்சங்கப் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதை விடவும் தொழிற்சங்க அலுவலகத்தின் ஊடாக அவற்றைத் தீர்த்துக் கொள்ளும் போதே தொழிற்சங்கத்தின் பலமும் அங்கீகாரமும் அதிகரிக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் மலையகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க. சுப்பிரமணியம்.

முன்னணியின் அலுவலக உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தொழிற்சங்கங்கள், தொழில் ஆணையாளர் திணைக்களங்கள், தோட்ட நிர்வாகங்கள் இவை அனைத்தின்செயற்பாடுகளும் தொழில் திணைக்கள ஒழுங்கு அல்லது கூட்டு ஒப்பந்த விதி முறைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனிப்பட்ட முறையில் நிர்வாகத்தில் பிணக்குகள் தீர்த்துக் கொள்ளப்படுவது இலகுவாக இருந்தாலும் கூட, பின்னர் எப்போதாவது பிரச்சினைகள் ஏற்படும் போது அதனைக் கையாள்வதில் பல சிக்கல்கள் தோன்றுவதோடு இதன் முழுப் பாதிப்பும் தொழிலாளரையே சேருகின்றது- என்றார். (ச)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள மீளாய்வுப் பேச்சு ஒத்திவைப்பு

நுவரெலியா,மே 31

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள மீளாய்வு குறித்து நேற்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த பேச்சு இன்று செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள மீளாய்வு தொடர்பாக கூட்டொப்பந்தத் தொழிற்சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டமைப்பு என்பனவற்றின் பிரதிநிதிகளும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ள போதும் இந்தப் பேச்சுத் தொடர்பான விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 500 ரூபா வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கூட்டொப்பந்தம் சாரா தொழிற்சங்கங்கள் மலையகப் பகுதிகளில் பல்வேறு கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**யோகரட்ணம் கீதன்**



நண்பா!
உன் கல்லறையில்
கண்ணீர் அஞ்சலி செலுத்த
நான் விரும்பவில்லை
அதுபோல்
வேறுயாரும் செலுத்த
நான் விடவில்லை
ஆம்
நீ என்னில் வாழ்கிறாய்
வேண்டுமெனில்
என் கல்லறையில்
உனக்குக் கண்ணீர் அஞ்சலி
செலுத்தட்டும்
நண்பா...!!!

தோற்றம்
04.06.1980

மறைவு
31.05.2008

நண்பர்கள் (1999),
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி/566)


# புறாத்தீவு சரணாலயத்தைப் பார்வையிட்டனர் 25 ஆண்டுகளுக்குப்பின் சுற்றுலாப் பயணிகள்

இலங்கையில் உள்ள இரண்டு தேசிய கடல் பூங்காக்களில் ஒன்றான திருகோணமலை புறாத்தீவு தேசிய வனவிலங்குகள் பூங்கா சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

1974ஆம் ஆண்டில் புறாத்தீவில் 5 ஏக்கர் பகுதி சரணாலயமாக பிரகடனம் செய்யப்பட்டது. பின்னர் 2003 செப்ரெம்பர் 24ஆம் திகதி 471.43 ஹெக்ரெயர் பரப்பளவுள்ள புறாத்தீவு தேசிய வனவிலங்குகள் பூங்காவாகச் சிறப்பு வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தத் தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் பவளப் பாறைகள், இலங்கையின் பறவைகள், புலம்பெயர் பறவைகள் போன்றவற்றை கண்டுகளிக்கலாம்.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக புறாத்தீவுக்கு பொது மக்கள் செல்வதற்கு இலங்கைக் கடற்படையினர் தடைவிதித்திருந்தனர்.

நிலாவெளி கடற்கரையிலிருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தத் தீவுக்குப் படகுகளில் செல்லும் உள்ளூர்ச் சுற்றுலாப் பயணிகளிடம் பெரியவர்களுக்கு 40 ரூபாவும் சிறியவர்களுக்கு 20 ரூபாவும் அறவிடப்படுகிறது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குப் 10 டொலர் கட்டணமாக அறவிடப்படுகிறது.

இந்தத் தீவில் சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுக்கும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)


## மரண அறிவித்தல்

**ஆறுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (தம்புராசா)**



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (30.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் புஸ்பராணி, விமலராஜா, யோகராஜா, ஆனந்தராணி, விஜயராணி, கமலராணி, அம்பிகை, தவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுந்தரம், இந்திராணி, சுசீலா ரஞ்சன், நாதன், கோகுலராஜா, உதயகுமார், பாலஜீவா ஆகியோரின் அன்பு மாமனும் கனகசபாபதி (J.P.)யின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்: மருமகன்- ரஞ்சன்
(Ranjan Hardware Stores)

(சி/276)(30)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
07.05.1951

மறைவு
23.05.2009



அமரர் சின்னத்துரை சதாசிவம்

திதி: சதுர்த்தசி

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய்
எங்களின் குடும்ப ஒளிவிளக்காய் வாழ்ந்த தந்தையே!
எம்மை இந் நிலைக்குயர்த்தி முன்மாதிரியாய் வாழ்க்கையை
வாழ்ந்து வந்தீர்- காலன் செய்த வேலையினால்
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டாலும் நிலைத்து விட்ட
உன் அன்பால் ஆண்டிரண்டு என்ன
பலநூறு கழிந்தாலும் எங்கள் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள் என்றும் மறையாதிருக்கும்.

519,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(4722)


# பொதுமக்கள் மீது அதிரடிப்படை தாக்கு

திருகோணமலை,மே 31

திருகோணமலை, 5ஆம் கட்டைப் பகுதியில் நான்கு பொதுமக்களை விசேட அதிரடிப் படையினர் கடந்த சனிக்கிழமை தாக்கியதாக உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்கப்பட்டு காயத்துக்குள்ளானவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)


## உதவியாளர் தேவை

சுழிபுரத்தில், நோயாளியான பெண்ணொருவருக்கு வீட்டில் முழு நேரம் இருந்து பார்ப்பதற்கு உதவியாளர் தேவை. நல்ல உடற் பலமும் சகல வேலைகளையும் செய்யும் விருப்பம் கொண்டவராகவும், 45 - 50 வயதுக் குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு: சி.கனகசிங்கம்
கண்டாமை, தொல்புரம், சுழிபுரம்.

(4721)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகர சபைக்கு நவீன கட்டடத் தொகுதி தேவை

## முதல்வர் மசூர் மௌலானா வலியுறுத்து

அம்பாறை, மே 31

கல்முனை மாநகர சபைக்கு சகல வசதிகளும் கொண்ட நவீன கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்பட வேண்டும்.இது மிகவும் அவசியமாகும் என மாநகராட்சி முதல்வர் எஸ். இஸட். எம். மசூர் மௌலானா தெரிவித்தார்.

மாநகராட்சி மன்றத்தின் மாதாந்த சபை அமர்வு அண்மையில் நடைபெற்றது. இதற்குத் தலைமை வகித்த முதல்வர், புதிய கட்டடம் தொடர்பான பிரேரணையை முன்மொழிந்து உரை நிகழ்த்துகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மிகவும் பெரிய நிறுவனமான எமது மாநகரசபை அறுபது வருடங்கள் பழைமை வாய்ந்த கட்டடத்தில் பெரும் இடநெருக்கடிக்கு மத்தியிலேயே இயங்கி வருகின்றது. இதனால் அதிகாரிகளும் ஊழியர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழை பெய்தால் எனது அலுவலக அறையிலும் நீர் ஒழுகுகின்றது. ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோருக்கும் வசதியான அலுவலகங்கள் இல்லை. இக்குறைகள் யாவும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

அதற்காக சகல வசதிகளும் கொண்ட கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட வேண்டும்.

அதற்கான முயற்சிகளில் எமது மாநகர ஆணையாளர் ஈடுபட்டுள்ளார்.அதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இந்தப் புதிய கட்டடத்தொகுதியை எங்கு அமைப்பது என நாம் முதலில் தீர்மானிக்க வேண்டும் -என்றார்.

இதனைத்தொடர்ந்து இந்த விடயம் குறித்து உறுப்பினர்களும் கருத்துகளை வெளியிட்டனர்.தற்போது மாநகரசபைக் கட்டடம் அமைந்துள்ள இடத்திலேயே புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ச)

# வவுணதீவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்க விசேட திட்டம்

மட்டக்களப்பு, மே 31

வவுணதீவு பிரதேசத்தில் இயங்கும் முன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்காமையினால் முன்பள்ளிகளின் செயற்பாடு பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

அவற்றைச் சீர்படுத்தி முன்பள்ளி மாணவர்களின் கல்வியினை சிறப்பாக முன்னெடுக்க மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனம் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து விசேட திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.


தெரிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளி அமைந்துள்ள கிராமத்துக்கு சுய தொழிலுக்கான கடன்திட்டத்தினைச் செயற்படுத்தி அதனூடாகப் பெறப்படும் வட்டிப் பணத்தினூடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டத்தினை பரீட்சார்த்தமாக ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வும் கடன் வழங்கும் திட்டமும் வவுணதீவுப் பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ரி.மதிராஜ் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேசசெயலர் என்.வில்வரத்தினம், கரித்தாஸ் எகெட் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை சிறிதரன் சில்வஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்டு ஒவ்வொரு முன்பள்ளிக்கும் தலா மூன்று லட்சம் ரூபா நிதியினை வழங்கியுள்ளனர்.

(ச)

திறப்பு.......



திருகோணமலை, வெருகல் துவாரகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டு இந்தக் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைக்கின்றார். (ச)

# அட்டாளைச்சேனைப் பிரதேச அபிவிருத்திக்கு 9.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு,மே31

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 9.9 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளதாக அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல்.எம்.நசீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சந்தைக் கட்டட நிர்மாண நடவடிக்கைகளுக்கான முதற்கட்ட நிதியாக 80 லட்சம் ரூபாவும், வீதி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 60 லட்சம் ரூபாவும் தற்போது வடக்கு,கிழக்கு உள்ளூர் சேவைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சுற்றுப்புற வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதோடு, ஒலுவில் - பாலமுனை பிரதேசங்களுக்குத் தேவையான வடிகான்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தவிசாளர் நசீர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

# இரத்தினக்கல் அகழ்வு; ஐந்து பேர் கைது

நோர்வூட்,மே 31

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் பொலிஸ் விசேட பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து இரத்தினக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் பொருள்களுடன் நோர்வூட் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(ச)

## குழந்தையின் மரணம் தொடர்பாக

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் திடீர் முற்றுகைக் குழு விசாரணை

அம்பாறை, மே 31

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த குழந்தை ஒன்றின் மரணம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மரணித்த குழந்தையின் தாயார், சுகாதார அமைச்சின் திடீர் முற்றுகை விசாரணைப் பிரிவுக்கு அனுப்பிய முறைப்பாட்டுக் கடிதத்தைத் தொடர்ந்தே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் சுகாதார அமைச்சின் திடீர் முற்றுகை விசாரணைக் குழுவொன்று அண்மையில் இந்த வைத்தியசாலைக்குச் சென்று விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாள்கள் இங்கு முகாமிட்டு பாதிக்கப்பட்டவர்களிடமும் வைத்தியசாலைத் தரப்பிடமிருந்தும் இக் குழு வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

தனது குழந்தையின் மரணத்துக்கு வைத்தியசாலைத் தரப்பினரின் உதாசீனப் போக்கே காரணம் எனத் தெரிவித்து எட்டு குற்றச்சாட்டுகள் அடங்கிய முறைப்பாட்டுக் கடிதமொன்றை சாய்ந்தமருதைச் சேர்ந்த எஸ். மாஹிறா என்பவர் சுகாதார அமைச்சுக்கு அனுப்பியிருந்தார்.

இந்தக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து சிறுவர் வைத்திய நிபுணர்களைக் கொண்ட விசேட குழுவொன்று அங்கு சென்று அடுத்த கட்ட விசாரணைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஓய்வூதிய எதிர்ப்புப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களும் இணைவர்

## மனோ கணேசன் கூறுகிறார்

நுவரெலியா,மே 31

தனியார் ஓய்வூதியச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தென்னிலங்கையிலுள்ள தொழிற் சங்கங்கள் மேற்கொள்ளவுள்ள அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர். இதுதொடர்பான பேச்சுகளை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தற்போது மேற் கொண்டு வருகின்றது என்று அதன் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் ஓய்வூதியச் சட்டமூலத்தினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் என்றால் அது தோட்டத் தொழிலாளர்களே. இதற்கு காரணம் தோட்டப் புறங்களிலுள்ள பெரும்பாலான தொழிற் சங்கங்கள் அரசுக்கு சார்பானவையாக இருப்பதே.

தோட்டப்புற மக்களின் நலன்களைக் கருத்திற் கொள்ளும் தொழிற்சங்கங்கள் அங்கு இல்லை. கடந்த காலங்களில் சுதந்திர வர்த்தகவலய தொழிற்சங்கங்கள் மற்றும் வங்கி ஊழியர் தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்காவில் 25 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தோட்டத் தொழிலாளர்களும் முன்னெடுக்க வேண்டும்- என்றார். (ச)

# நீதிமன்ற வளாகத்திலிருந்த மீன்களைக் காணவில்லை

கண்டி,மே 31

கண்டி நீதிமன்ற வளாகத்திலுள்ள நீர்த்தொட்டியில் வளர்க்கப்பட்ட அலங்கார மீன்கள் காணாமல் போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நீர்த்தொட்டியில் கோல்ட் மற்றும் விலைஉயர்ந்த கார்ப் ரக மீன்கள் வளர்க்கப்பட்டு வந்தன என்றும், தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று 24 மணித்தியாலங்களும் இக்கட்டடத் தொகுதிக்கு பாதுகாப்பு வழங்கி வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலங்கார மீன்களை சட்டத்தரணிகள் இருவர் வழங்கியுள்ளனர். ஓய்வுநேரங்களில் அந்த மீன்களுக்குத் தீனி கொடுப்பதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால் அண்மையில் அந்த மீன்கள் காணாமல் போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்திய கூட்டறிக்கைத் தீர்மானம் உடன் முன்னெடுக்கப்படவேண்டும் - ரணில்

கொழும்பு,மே 31

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் இலங்கை - இந்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கூட்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தீர்மானங்களை முன்னெடுத்துச் செல்ல உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள அவர், சென்னை விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்காக தம்மை சந்திக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அழைப்பு விடுத்திருந்தார். அவர் அவ்வாறானதொரு அழைப்பு விடுத்துள்ளமை மகிழ்ச்சி தருகிறது. விரைவில் அவரைச் சந்திப்பேன்.

இலங்கைப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் விரிவாக பேச்சு நடத்தியுள்ளார். இலங்கைத் தமிழர் விவகாரம் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் அப்போது விவாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பேச்சு தொடர்பான விவரங்கள் இரு நாடுகளினாலும் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையிலும் இடம்பெற்றுள்ளன. இந்தநிலையில் இரு தரப்புக்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும்- என்றார். (ச)



# சீரற்ற காலநிலையால் 17 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, மே 31

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் சுமார் 16,956 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்திலேயே அதிக இடம் பெயர்ந்தோர் தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

பல பிரதேசங்களில் மண் சரிவு அபாயம் காணப்படுவதால் சாரதிகளை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச)

## யானையாலும் இந்தக்கதி..........



திருகோணமலை, மொரவெளிப் பிரதேசத்தில் உட்புகுந்த யானையொன்று அங்குள்ள வீடொன்றை சேதப்படுத்துகின்றது. (ச)

# இலங்கையில் உயர்கல்வி வழங்க அனுமதி கோரும் 15 நிறுவங்கள்

கொழும்பு,மே 31

இலங்கையில் உயர்கல்வியை வழங்குவதற்கு மேலும் 15 தனியார் நிறுவனங்கள் அனுமதி கோரியுள்ளன என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி காமினி சமர நாயக்க தெரிவித்தார்.

இந்த விண்ணப்பங்கள் சுமார் ஆறு மாதங்கள் பரீட்சிக்கப்பட்டு தகுதிவாய்ந்தவை என உறுதிப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஏற்கனவே இலங்கையில் தனியார் உயர் கல்வி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு எட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தனியார் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக விளக்கப் புத்தகம் விரைவில் வெளிவரும்

கொழும்பு, மே 31

உத்தேச தனியார் ஓய்வூதியத்திட்டம் பற்றிய பூரண விவரங்களைக் கொண்ட விளக்கப் புத்தகமொன்று அச்சடிக்கப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்படும் என நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

தனியார் ஓய்வூதியத்திட்டத்தின் நோக்கம், அது நடை முறைப்படுத்தப்படும் விதம், சட்டமூல சுருக்கப் பிரேரணை உட்பட்ட பல்வேறு விவரங்களுக்கு இந்தப்புத்தகத்தில் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தப் புத்தகத்தை அச்சேற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன என்றும், விரைவில் அது பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# வாடகை வான்களில் கப்பம்; கண்டியில் இருவர் சிக்கினர்

கொழும்பு, மே 31

கண்டி நகரில் சேவையிலீடுபடும் தனியார் வான்களில் கப்பம் வசூலித்து வந்தனர் என்ற சந்தேகத்தின்பேரில் கண்டி விசேட நடவடிக்கை பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொரு வானிலும் வாராந்தம் நிரந்தரக் கட்டணமாக 800 ரூபாவையும், அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பயணத்துக்கு தலா நூறு ரூபாவும் வசூலித்து வந்துள்ளனர் என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட வான் சாரதிகள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும், இவர்களது கும்பலைச் சேர்ந்த மேலும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் கூறி னர்.

கைதான இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். கண்டி விசேட பொலிஸ் நடவடிக்கைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரத்ன பண்டா தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

# பொன்சேகா விடயத்தில் இந்தியா தலையிடும் என்கிறார் மங்கள

கொழும்பு,மே 31

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது சிறையிலுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் நல்லதொரு முடிவு கிடைக்கும் என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு இலங்கை அரசிடம் இந்தியா கோருமென்று நாங்கள் நம்புகிறோம்என்று ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்தின் நிகழ்ச்சி நிரலில் சரத் பொன்சேகாவின் விடயமும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வன விலங்குகளால் அச்சுறுத்தல்; விவசாயிகளுக்குத் துப்பாக்கிகள்

கொழும்பு,மே 31

வனவிலங்குகளிலிருந்து தமது பயிர்ச்செய்கைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் முகமாக விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். பயிர்கள் அழிக்கப்படுவதால் விவசாயிகள் அதிக இழப்பை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பதுளையிலுள்ள ஊவா மாகாண நூல்நிலைய கேட்போர் கூடத்தில்நேற்று திங்கட்கிழமை கூட்டம் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது: முதலில் கிராம அலுவலர் பகுதிகளின் அடிப்படையில் துப்பாக்கிகள் வழங்கப்படும். இது தொடர்பான சுற்றுநிரூபம் பிரதேச செயலாளர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.யால மற்றும் வில்பத்து சரணாலயங்களில் பணியாற்றுவர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை வன திணைக்களம் எடுக்கவுள்ளது என்றார். (ச)

# போலியான 'சீல்' ஆவணங்களுடன் பன்னிப்பிட்டியில் சிக்கினார் ஆசாமி

## தரம்-1 மாணவர் அனுமதியில் கைவரிசை

கொழும்பு,மே 31

கொட்டாவ,பன்னிப்பிட்டிப் பிரதேசத்தில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்குத் தேவையான ஆவணங்களைப் போலியாகத் தயாரித்து வந்த வீடொன்றைச் சுற்றிவளைத்த நுகேகொட பொலிஸார் அங்கிருந்து ஏராளமான ஆவணங்களைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த வீட்டை வாடகைக்கு அமர்த்தியிருந்த 55 வயதுடைய ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது அரச நிறுவனங்களின் இலச்சினையுடன் போலியாகத் தயாரிக்கப்பட்டிருந்த சுமார் 348 இறப்பர் முத்திரைகளும் மற்றும் வீட்டு உறுதிப்பத்திரம், பிறப்புச் சான்றிதழ், பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்கள், கிராம சேவையாளர் அத்தாட்சிப் பத்திரங்கள் என ஏறக்குறைய 400 வகையான ஆவணங்களும், தேசிய அடையாள அட்டைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட இறப்பர் முத்திரைகளில் கல்வியமைச்சு, வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், மாவட்டச் செயலாளர்கள், காணி, விவாக, மரணப் பதிவாளர்கள் ஆகியோரது இறப்பர் முத்திரைகளும் அடங்குகின்றன என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் உள்ள பிரபல பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்குத் தேவையான ஆவணங்களைப் போலியாகத் தயாரித்து வழங்கி வந்துள்ளார் . இதற்காக இவர் சம்பந்தப்பட்டவகளிடம் இரண்டாயிரம் ரூபா முதல் பத்தாயிரம் ரூபா வரை கட்டணமாக அறவிட்டு வந்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம்தொடர்பில் நுகேகொடப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன் கிரிக்கெட் கொண்டாட்டத்தில் வெற்றி பெற்ற ஏழாலையைச் சேர்ந்த ம.சுருத்திகாவுக்கான பரிசில்களை யு.கே.ஈ. பிரைவேட் லிமிட்டட் முகாமையார் ஏ.நாகேந்திரன் வழங்குகிறார். அருகில் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில் நாதன், விளம்பரப் பிரிவு அதிகாரி ஆர்.ராதாகிருஷ்ணன், உதயன் கணக்காளர் எ.கனகசபை, மக்கள் தொடர்பு முகாமையாளர் திருமதி என்.தங்கராசா ஆகியோர் உள்ளனர்.

# இந்து மதத்துக்கு யாழ்ப்பாணம்தான்; மாற்றுக்கருத்துக்கு இதில் இடமில்லை

## தமிழ் நாடு பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன்



யாழ்ப்பாணம், மே 31

இந்து மதத்துக்குரிய இடம் யாழ்ப்பாணம் தான். யாழ்ப்பாணம் இந்துக்களின் நாடு. இதில் இரு வேறுபட்ட கருத்துக்ளுக்குஇடமே இல்லை.

புத்த மதத்துக்கு ஜப்பான், சீனா,இலங்கை போன்ற நாடுகள் உள்ள இஸ்லாம மதத்துக்கு அரபு நாடுகளும் கிறிஸ்தவ மதத்துக்கு இங்கிலாந்து போன்ற சாம்ராஜ்யங்கள் உள்ளன.

இந்து மதத்துக்கு நேபாளம் முன்னர் பெயர் பெற்றி ருந்தது ஆனால் இந்து மதத்துக்கு யாழ்ப்பாணம் தான் நாடு.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் நாடு பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிவதொண்டர் மாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்ற சுவாமி விபுலானந்தர்அரங்கு நிகழ்வின் ஆய்வரங்கத்தில் நிறைவுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

சுவாமி விபுலானந்தர் கூறியது போல் 'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க' என்று நல்ல காரியங்களைச் செய்யும் முன் னர் இறைவன் அருள்வேண்டி நிற்கின்றோம்.

இதுபோல் தமிழகத்துக்கும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கான நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தித்தந்தவர் சுவாமி விபுலானந்தர். அவருடைய இந்த அரங்கில் எனக்கும் பேச வாய்ப்புக் கிடைத்தது. 'இறைவனது அருள்தான் இறை பணி நிற்க' எனும் தலைப்' பில் உரை நிகழ்த்தும் போது இறைவனுக்கு எவ்வாறு தொண்டுகள் செய்யவேண்டும் எனும் கருத்தை விளக்கி இருந்தார்கள்.

இதனைத்தான் 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்று கூறியுள்ளனர். ஆலயத்துக்காகச் சேவை வழங்கும் போதும் மக்களுக்குச் சேவை வழங்கும்போதும் பலனை எதிர் பார்க்கக்கூடாது

அத்துடன் ஆறுமுக நாவலர் போன்ற நாயன்மார்கள் பலர் அதன் வழி தமது தொண்டுகளைப் புரிந்தவர்கள்.

அத்துடன் இந்து மதம் மட்டும் தான் 'இல்லற வாழ்க்கையை சிறந்ததாக வாழ்பவன் மோட்சத்தை அடைவான்' எனவும் கூறியுள்ளது. இத்தகைய தனிச் சிறப்புக்களைக் கொண்டமைந்தது இந்து மதம்.

இதனை நிலைநாட்டுவதற்கு இவ்வாறான மாநாடுகள் இடம் பெறுவது மகிழ்ச்சியாக உள்ளது.

இதனை எதிர்காலச் சந்ததியினரும் பின்பற்ற வேண்டும். நல்ல கருத்துக்களையும் செயல்களையும் உள்வாங்குவதன் மூலம் சிறந்த வாழ்க்கையை உருவாக்க வேண்டும். - என்றார். (ம-313)

# மதுபோதையில் ஏற்படும் விபத்துக்கள் தற்போதைய சூழலில் அதிகரித்துள்ளன

## நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலியரத்ன தேரர்

யாழ்ப்பாணம், மே 31

தற்போதைய சூழ்நிலைகளில் மதுபோதையில் இடம் பெறும் விபத்துக்களால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற சமூகச் சீர்கேடுகள், தவிர்க்க முடியாத இறப்புக்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு யாரும் முன்வருவது கிடையாது.

இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவே யாழ். மாவட்டத்தில் இந்து - பௌத்த கலாசாரப் பேரவை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியரத்ன தேரர்.

யாழ்.கந்தர்மடம் பழம் வீதியில் அண்மையில் இடம்பெற்ற இந்து - பௌத்த சங்கப் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் வரலாற்று ரீதியாக நீண்ட தொடர்புகள் இருந்தன.

தற்போது நிலவும் சமாதானச் சூழலில் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு மருந்தாக இந்து - பௌத்த சங்கப் பேரவை தனது செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

கலாசாரத்தைப் பேணுவதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் நாம் ஒன்று மையாகச் செயற்படவேண்டியது அவசியம்.

இதற்குப் பொருளாதாரப் பிரச்சினையும் ஒரு காரணமாக தடையாக உள்ளது.

கடந்த காலங்களில் யாழ். மாவட்ட விவசாயிகள் விவசாயத்தால் அதிகளவு இலாபம் பெற்று வந்தனர். ஆனால் தற்போது பெரும் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளனர்.

துறை ரீதியாக முன்னேற்றம் காண வேண்டுமானால் அதற்கான உந்துதல்கள் கட்டாயம் தேவை.

நாம் மதரீதியாகவோ இனரீதியாகவோ வேறுபாடு காட்டுவதால் வெற்றியை அடைய முடியாது.

யுத்தத்தை வெற்றிபெற்று சமாதானத்தைப் பெற்றாலும் தமிழ் மக்களின் மனதையும் வெற்றிகொள்ளவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். - என்றார். (ம-313)

# வலிகாமம் வலய கணித வினாவிடைப் போட்டி முடிவுகள்

வலிகாமம், மே 31

வலிகாமம் வலய மட்டத்தில் நடைபெற்ற கணித வினா விடைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**தரம் 6**

த.கீர்த்தனா (விக்ரோறியாக் கல்லூரி), விதுர்சனா இராஜேஸ்வரன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), மதிவதனன் மேருஜன் (அருணோதயாக் கல்லூரி).

**தரம் - 7**

தர்மராசா சஜீபன் (மகாஜனாக்கல்லூரி), நுர்மிலா துஸ்யந்தன் ( வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), கிருத்திகா ரவிதாஸ் ( சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**தரம் - 8**

விஜியகுமார் சங்கீத் (மகாஜனாக்கல்லூரி), லோகிதா ரவிக்குமார் ( ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), இரவிச்சந்திரன் இரஜிவர்ணன் (மகாஜனாக்கல்லூரி).

**தரம்-9**

தனபாலசிங்கம் சாரங்கன் (மகாஜனாக் கல்லூரி), குணரட்ணம் காருண்யா (உடுவில் மகளிர் கல்லூரி), அமிர்தலிங்கம் அமிர்தவர்த்தினி ( மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**தரம் - 10**

தனுஷிகா சின்னராசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), விஷ்ணுகா கிருபாகரன் (மகாஜனாக் கல்லூரி), பிரகுலதேவன் பிரசாந் (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.).

**தரம்- 11**

கேதீஸ்வரன் கௌசிகன் (மகாஜனக் கல்லூரி), தே.ராகுலன் (யூனியன் கல்லூரி), பி.வைஸ்ணவன் (யாழ்ப்பாணக் கல்லூரி). (ம-38)

## நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி, மே 31

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபையின் 67 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சபா.ரவீந்திரன், செயலாளராக கா.புஸ்பராசா, பொருளாளராக இ.கணேசநாதன், கணக்குப் பரிசோதகராக ஜெ.ஜெயரஞ்சன், வெளிநாட்டு இணைப்பாளராக பா.ரவீந்திரன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக க.சற்குணம், கு.குமாரதாசன், த.கஜன், பா.சச்சிதானந்தம் ஆகியோர் தெரிவாகினர். (ம-236)

* * *

யாழ்ப்பாணம்,மே 31

வலி.வடக்குப் பிரதேசத்தின் மாவட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் யூட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக டாக்டர் நா.சக்திவேல், உப தலைவராக வ.நடராசா, செயலாளராக சோ.செல்வரத்தினம், உதவிச்செயலாளராக ச.செல்லக்காந்தன், பொருளாளராக க.துரைசிங்கம் ஆகியோரும் -

நிர்வாக சபை உறுப்பினர்களாக க.சோதிலிங்கம், சி.யோகராசா, மு.வேல்லையா, தி.பிரபாகரன், க.இராசரத்தினம், திருமதி பு.வரதலட்சுமி, திருமதி ஆர்.விஜிதவேணி, செல்வி எம்.சுந்தர்யா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போசகராக ஜீ.எஸ்.ஞானச்செல்வமும் கணக்காய்வாளராக சி.தியாகராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-207)

## வலய மட்டத்தில் 2 ஆம் தவணைப் பரீட்சை

பருத்தித்துறை, மே 31

வடமராட்சி கல்வி வயப் பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சையை வலய மட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

இதற்கமைய மாணவர்களின் விவரங்களை வகுப்பு, பாட ரீதியாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் சமர்ப்பிக்கு மாறு பாடசாலை அதிபர்கள் கேட்டுக்கப்பட்டுள்ளார்கள்.(ம-190)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 31

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த அதிபர்களுடனான கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தந்திரமாகச் செயற்பட்டு சில காரியங்களை சுலபமாக முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கலாம். பிள்ளைகள் மீதான பாசம் கூடும்.

**இடபம்:**
பதற்றம், படபடப்புடன் செயற்படுவீர்கள். செய்ய மறந்த காரியம் ஒன்றால் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளை குறுக்கு வழிகளில் முடிக்க முற்படுவீர் கள். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காமல் நிதானமாகச் செயற்பட வேண்டும். சில வேலைகளுக்காக கடுமையாக அலையலாம். சலிப்பு உண்டாகும்.வி கேட்கலாம் அல்லது நீங்கள் பிறரிடம் கடன் கேட்கலாம்.

**மிதுனம்:**
தயக்கம், கலக்கம் விலகி சந்தோஷம் குடிகொள்ளும் நாள். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் ஒருவரை சந்திக் கலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். சிக்கலில் இருக்கும் நண்பர் ஒருவருக்கு அவசர உதவி செய்யலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை நண்பர்கள் கொடுக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணம் அணிவீர்கள்.

**கடகம்:**
கவலைகளை மறந்து எதிலும் உற்சாகமாகச் செயற்படும் நாள். திடீர் செலவு ஒன்றுக்காக பிறரிடம் பணம் கடன் வாங்கலாம். கற்பனையாக இருந்த சில விடயங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம்.

**சிங்கம்:**
உடல் நலன் தொடர்பான கவலைகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். ஒரு வகையில் வந்த பணத்திற்கு மற்றொரு வகையில் செலவு ஏற்படும். மற்றவர்களின் செயற்பாடுகளைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். ஆறுதல் அனுபவம் பெறலாம்.

**கன்னி:**
சிலருடன் கடும் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். வெளியூரில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலைக்கு அதிகமாக செலவாகலாம்.

**துலாம்:**
முடியுமோ முடியாதோ என, சந்தேகத்தில் இருந்த வேலை ஒன்று நல்ல விதமாக முடிவுக்கு வரும். வீட்டுச்செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும்.விகள் கிடைத்து விடலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**விருச்சிகம்:**
ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். குடும்பத்தினரின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். உங்களின் புத்திசாலித்தனமான செயற்பாடுகளைக் கண்டு மற்றவர்கள் வியப்படைவர். உறவினர்களின் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறும். புதிய அனுபவம் பெறலாம். பல நாள்களாக சந்திக்காத ஒருவரைச் சந்திப்பீர்கள்.

**தனுசு:**
மாமன், மைத்துனர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு நீங்கி பாசம் அதிகரிக்கும். ஒருவரிடம் சவால் விட்டு சில காரியங்களைச் செய்வீர்கள். சங்கடம் அல்லது சந்தோஷம் தரும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். ஆலய வழிபாடுகளுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் பயப்படுவீர்கள்.

**மகரம்:**
வேகத்தை குறைத்து எதிலும் விவேகமாகச் செயற்பட வேண்டிய நாள். மற்றவர்கள் சிக்கலாக நினைக்கும் விடயம் ஒன்றை நீங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வீர்கள். விருந்தினர்கள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். தவறான சில காரியங்களைச் செய்ய முற்பட்டு, அதனால், பதற்றம், குழப்பம் அடையலாம். அலைச்சல் உண்டு.

**கும்பம்:**
நீண்டநாள்களாக வராத கடன் மிகுதி ஒன்று திடீரென வசூலாகும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். நண்பர்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். ஒருவரின் உதவியுடன் சில பொருள்களை சகாய விலையில் வாங்குவீர்கள். உறவுப் பெண்கள் வழியில் சில செலவுகள் ஏற்படலாம். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:**
மனக் குழப்பங்களுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவதால், எரிச்சல் அடையலாம். பணிபுரிவோர் திடீரென விடுப்பு எடுக்கலாம். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வேலை ஒன்றை முடிக்க வேண்டிய கட்டாயம் உருவாகலாம். சிலரின் வார்த்தைகளை மீற முடியாமல் கட்டுப்பட்டு நடக்கலாம்.

# நிபுணர் குழு அறிக்கையை குற்றஞ்சாட்டுவதால் நாட்டுக்குப் பங்கமே!

**நிபுணர் குழு அறிக்கை குற்றச்சாட்டுக்கள் என்று நம்பக்கூடியவைகளையே ஆவணப்படுத்தியுள்ளது. மனித உரிமை மீறல் உண்மையிலேயே நடந்துள்ளனவா என்பதை உறுதி செய்யும் வகையில் விசாரணை நடத்தும்படி பரிந்துரைத்துள்ளது. இந்த நிலையில் நிபுணர் குழு ஒருதலைப்பட்சமானது; சதித்திட்டம் தீட்டுகிறது என்று குற்றம் சாட்டுவதும் அதன் நடைமுறைகள் பற்றிய பிரச்சினை கிளப்புவதும் நாட்டுக்கு எந்தவித நன்மையும் கொண்டு வரப்போவதில்லை. இவ்வாறு 'வெள்ளிக்கிழமை ஒன்றுகூடல்' என்ற அமைப்பின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜயந்த தனபால இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளார். அதன் முழு வடிவம் இங்கு பிரசுரமாகிறது**

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை ஒரு சச்சரவு ஆவணமாக உருவாகியுள்ளது. அரச இறைமையைப் பேணுதல் மற்றும் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தில் தேசத்திற்குள்ள பொறுப்பைப் பின்பற்றுவதற்கான தேவைப்பாட்டின் காரணமாக ஏற்பட்டுள்ள புரிந்துகொள்ளப்படக்கூடிய பதற்றத்தின் விளைவாக அறிக்கை குறித்து அநேகரின் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். 'வெள்ளிக்கிழமை ஒன்றுகூடல்' அமைப்பின் அங்கத்தவர்கள் முழு அறிக்கையையும் வாசித்து ஒரு பதிலை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்யும் என எண்ணி தேசிய நலன் கருதி பொது சனங்களின் முன் தமது கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றனர்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட நிகழ்வுகளை நுண்ணாய்வு செய்ய இலங்கையை நியாயமற்ற முறையில் ஐ.நா. பொதுச் செயலாளர் தமது அறிக்கையில் தனிமைப்படுத்தியுள்ளார் என தொடர்ச்சியான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மற்றும் இதர சர்வதேச அமைப்புக்களில் பொறுப்புக்கூறும் தன்மை குறித்த விடயங்கள் ஆராயப்படும்போது உலகளாவிய அரசியல் செல்வாக்கு சில வேளைகளில் ஆதிக்கம் செலுத்துவது குறித்து நாம் முரண்படவில்லை. எனினும், பொறுப்புக் கூறும் தன்மை அரசுகளில் இருந்து சுயாதீனமாக இயங்கும் தேசிய நிறுவனங்களான சட்டவாக்க குழுக்கள் மற்றும் ஊடகத்துறை போன்ற அமைப்புகளின் நுண்ணாய்வுகளுக்கு உட்பட்டுள்ளன. பிராந்திய அமைப்புக்களான ஐரோப்பிய நீதிமன்றம் மற்றும் அமெரிக்க நீதிமன்றம் போன்றவை பொறுப்புக் கூறும் தன்மை குறித்து பிரத்தியேக களத்தை வழங்குகின்றன. இதற்கு மேலாக, பல்வேறு உலகளாவிய மனித உரிமைகள் சாசனங்களை ஏற்றுக்கொண்ட அரசாங்கங்கள் அனைத்தும் இந்த நெறி முறைகளுக்கமைவாக நடக்கின்றதா என்ற அறிக்கையைக் காலத்துக்குக் காலம் வழங்கவேண்டும் என்பதுடன், இந்த அறிக்கைகள் அனைத்துத் தேசங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுசன அங்கத்தவர்களுக்குத் திறந்துள்ள அந்தந்த அமைப்புக்களின் குறிக்கோள்களின் பிரகாரம் நுண்ஆய்வுக்கு ஈடுபடுத்தப் படுகின்றது. இலங்கையும், இதர நாடுகளைப் போன்று சமாதானத்தின் காலங்களிலும் உள்நாட்டு ஆயுதப் பிரச்சினைகளின் காலங்களிலும் தமது சொந்த அரசமைப்பு நெறிமுறைகளுக்கும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களின் சர்வதேச தராதரங்களுக்கும் கீழ்ப்படியும் பொறுப்பைக் கொண்டுள்ளது. ஆகையால், உலக அதிகார அரசியலின் இரண்டகத் தன்மை என்ற வாதம் இங்கையின் நிகழ்வுகள் குறித்து சர்வதேச நுண்ஆய்வைத் தடை செய்ய முடியாது.

இலங்கையர் சிலர் குழுவின் அறிக்கையுடன் முரண்பட்டாலும், ஐ.நா. பொதுச்செயலாளர், குழுவின் அங்கத்தவர் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றையவர்கள் மீதான தனிப்பட்ட தாக்குதல்கள் தேவையற்றவை என்பதுடன் விமர்சனத்துக்கு இலங்கையின் பதிலில் எதிர்மறையான தோற்றத்தை மீள் வலியுறுத்துவதாக மட்டுமே காணப்படும். அறிக்கையின் 8ஆம் பக்கத்தில் பாவிக்கப்பட்டுள்ள ஒரு வாசகம் புறம்பாக எடுக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சாதகமான விதத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளது என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணம் அது எடுக்கப்பட்ட பந்தியில் இருந்து பிரதிபலிக்கப்படவில்லை. இந்த அறிக்கை, தேசசார் பற்ற தொழிற்பாடுகளின் பொறுப்பை ஏற்றுக்கொள்வதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபினமான சட்டத்தின் அத்து மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விபரணம் பகுதி 4இல் விவரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களை வழி தவறவைக்கும் மறுமொழிகளைத் தவிர்த்து, அறிக்கை குறித்த உள் நோக்கம் மற்றும் நியாயமான கருத்தினை தெரிவிக்கு மாறு நாம் கோரிக்கையிடுகின்றோம். அத்தகைய உள்நோக்கக் கலந்துரையாடல்கள் சில விமர்சகர்களால் அவர்கள் வெளியிடுவதை விட பிற கருத்துக்களே நம்பிக்கைத் துரோகம் என்றும் தேசத்துரோகம் என்றும் முத்திரையிடும் அவலத்தை அறிந்து வருத்தப்படுகின்றோம்.

### நம்பத் தகுந்த குற்றச்சாட்டுகள்

இந்தக் குழு எமது அபிப்பிராயத்தின் படி, மோதலின் இறுதிக்கட்டங்களில் இலங்கை அரசாங்கத்தின் மீதோ தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதோ வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எந்தவித கண்டுபிடிப்புக்களையோ விசாரணைகளையோ மேற்கொள்ளவில்லை.

இதுதாம் அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் இருவரின் மீதும் ''குற்றச்சாட்டுக்களாக நம்பக்கூடியவை'' எனக் கருதியவற்றையே ஆவணப்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் உண்மையிலேயே நடந்துள்ளனவா என்பதை உறுதிசெய்யும் நோக்குடன் ஒரு விசாரணையை சிபார்சு செய்துள்ளது. வழமையான விசாரணை செயற்பாடுகளில், பொலிஸ் அல்லது நிறைவேற்று அதிகாரிகள் மெய்த்தகவல் கண்டுபிடிப்பு மற்றும் விசாரணைக்கு முன்னர் குற்றச்சாட்டுக்கள் நம்பத்தகுந்தவையா எனக் கண்டறிவர்.

நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை ஆவணப்படுத்துவதற்கும் மெய்த்தகவல் கண்டறியும் ஈடுபாட்டுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் குறித்துக்கொள்வது அவசியமாகும். இதனால் நம்பத் தகுந்த முறைப்பாடுகள் குறித்து சாட்சியின் நீதித் தராதரத்தில் உள்ள குறைபாடுகளை கலந்துரையாடுவது தேவையற்றதும் முதிராத முடிவாகும்.

இலங்கையின் யுத்த காலப் பகுதியில், குறிப்பாக இறுதிக் கட்டங்களில், தமது மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு உரிமைக் கட்டளைகளை செயற்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகள் குறித்த மீளாய்வு பற்றிய குழுவின் சிபார்சு பற்றி சாதகமாகப் பதிலளிக்க உள்ளதாக பொதுச் செயலாளரின் அறிக்கையிலிருந்தும் அதைத் தொடர்ந்ததான அறிக்கைகளில் இருந்தும் தெளிவாகத் தெரிகின்றது. சர்வதேச விசாரணை பொறி அமைப்பு நிறுவுதல் பற்றிய சிபார்சில் சம்பந்த நாட்டின் ஒப்புதல் அல்லது பொருத்தமான சர்வதேச அரசாங்கங்களின் அமைப்பின் ஊடாக அங்கத்துவ நாடுகளின் தீர்மானம் ஒன்று தேவைப்படும் என பொதுச் செயலாளர் கூறுகின்றார். அங்கத்துவரான சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் இலங்கை, சர்வதேச சமூகத்தினருடன் அறிக்கை குறித்து பயனுள்ளதும் எதிர்க்காததுமான பதிலில் ஈடுபடுவது மிகவும் முக்கியமென நாம் நினைக்கின்றோம். இத்தகைய பதிலானது நம்பத் தகுந்த குற்றச்சாட்டுக்கள் என விவரிக்கும் குழுவின் அக்கறை களுக்கு

'வெள்ளிக்கிழமை ஒன்றுகூடல்' அமைப்பில் ஜயந்த தனபால, உயர் அருள் பேராயர் டுலிப் டி சிக்கேரா, திருமதி மனோரி முத்தெட்டுவேகம, பேராசிரியர் அர்ஜுன அலுவிகார, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, திருமதி சூர்யா விக்கிரமசிங்க, அகிலன் கதிர்காமர், லங்கா நேசையா, து.வெலியமுன, கலாநிதி ஏ.சி.விஸ்வலிங்கம், கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, கலாநிதி கமீனா குணரத்ன, கலாநிதி தீபிகா உடகம, திருமதி சித்தி திருச்செல்வம், திருமதி சாந்தி டயஸ், கலாநிதி செல்வி திருச்சந்திரன், பேராசிரியர் சிறி ஹெட்டிகே, கலாநிதி தேவநேசன் நேசையா, கலாநிதி உச்வத்த ஆராச்சி, இரன்சித் பெர்னாண்டோ, டனேசன் காசிச் செட்டி, சி.ஜெயரட்ண ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகங்கொடுக்க உதவியாக இருக்கும். வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடு மற்றும் அதனைத் தொடர்ந்ததான எமது நாட்டு மக்கள் மீது சுமத்தப்படும் சுமைகள் போன்ற அறிக்கையால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளை நிவர்த்தி செய்ய வும் முடியும். வெறுமனே செயல் முறை மற்றும்படி முறைகள் மற்றும் குழுவின் மீது சூழ்ச்சி மற்றும் பக்கச்சார்பு குறித்து குற்றச்சாட்டை முன்வைப்பது தேசிய நலனுக்கு உதவாது.

இதற்கு மேலாக அரசு, உடனடி நடவடிக்கையாக, குறிப்பாக அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள நல்லர சாட்சியின் விடயங்கள் குறித்து நடவடிக்கை கள் மேற்கொள்ளவேண்டும். இந்த விடயங்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவுக்குக் கொண்டு வந்த உள்நாட்டு ஆயுதப் பிரச்சினையின் பின் ஒப்பு ரவு, மீள்குடியேற்றம், நீதிநிலைநாட்டல் மற்றும் நிலையான சமாதானத்தை உருவாக்குதல் குறித்த நெருக்கடி நிலைகளில் நாட்டில் அடிக்கடி எழுப்பப்பட்டு வந்துள்ளன.

**உள்நாட்டு விசாரணை பொறிமுறை ஒன்றை நிறுவவேண்டும்**

குறிப்பாக, பின்வருவனவற்றில் ஈடுபட அரசுக்கு அழைப்பு விடுகின்றோம்.

1) வடக்கு - கிழக்கு ஆயுதப் பிரச்சினையின் போது மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமன சட்டமீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறும் தன்மை குறித்து விரிவாக ஆராயப் போதுமான அதிகாரமும் வழங்கலையும் கொண்ட நம்பகமிக்க உள்நாட்டு பொறிமுறை ஒன்றை நிறுவுதல் வேண்டும். அத்தகைய பொறுப்புக் கூறும் தன்மை கொண்ட பொறிமுறைக்கு தேசிய மற்றும் தேசியம் சாராத தொழிற்பாடுகளின் மீதுள்ள உரிமைக் கட்டளை தெளிவாக விவரணப்படுத்தப்படல் வேண்டும். பொறிமுறையின் அமைப்பும் தொழிற்பாடும், மாறாக பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களை அதிகரித்த, முன்னிருந்த விசாரணை ஆணைக்குழுக்களின் தவறுதல்களை முக்கியமாகத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக, பொறுப்புக் கூறும் தன்மை பொறிமுறையை, சுதந்திரம், தகுதியாற்றல், தெளிவு மற்றும் சாட்சிப் பாதுகாப்பு போன்வற்றுக்கு முக்கியத்துவம் வழங்கி சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆகிய இரண்டு தராதரங்களுக்கு அமைவாக நம்பத்தகுந்த விதத்தில் அமைப்பது அத்தியாவசியமாகும். அதன் அங்கத்தவர்கள் அரசியல் ஆதிக்கத்திலிருந்து சுயாதீனமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துதல் மட்டுமல்லாது விசாரணையாளர்களும் வழக்காளர்களும் அத்தகைய வரையறைகளில் இருந்து கட்டாயமாகச் சுயாதீனமாய் இயங்கவேண்டும். அதன் நடைமுறைகளும் அறிக்கைகளும் பொது மக்களுக்கு எப்போதும் தெரியக்கூடியதாய் இருத்தல் வேண்டும். வெளிப்படையாக இருத்தல் மற்றும் பொதுமக்களின் தெரிந்துகொள்ளுதலுக்கான உரிமையின் பேரில் முன்னைய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளை பிரசுரிக்குமாறு நாம் அரசை வற்புறுத்துகின்றோம்.

ஏற்கனவே நிறுவப்பட்ட கற்ற பாடங்கள் மற்றும் நல் இணக்க ஆணைக்குழு தனது தற்போதைய வரையறைக்குள்ளான உரிமைக் கட்டளையின் பிரகாரம் தனது பணியினை நிறைவு செய்து தமது அறிக்கையினை பொதுமக்கள் பெற வழிவகை செய்ய வேண்டும். இந்த நிலையில் அது நாம் பரிந்துரை செய்த பொறுப்புக்கூறும் பொறிமுறையின் வகையாக உருமாற்றப்படக் கூடாது. எனினும், புதிய பொறி முறையானது இதனால் கொண்டுவரப்பட்ட பொறுப்புத் தன்மை விடயங்களுக்கு விசாரணையையும் வழக்கையும் வேண்டி நிற்கும்.

02) சிறுபான்மை சமூகத்தினரின் விசேட அக்கறைகளுக்குப் பதிலளிக்கும் அதேவேளை அனைத்து இலங்கையர்களதும் நல்லாட்சி, சமத்துவம் மற்றும் நீதி அபிலாசைகளை சந்திக்கும் முகமாக அரசியலமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தும் தெளிவான வழிகாட்டியையும் நேர அட்டவணையையும் விருத்தி செய்யும் அரசியல் செயற்பாட்டுக்கு அர்ப்பணிப்புச் செய்யவேண்டும்.

**வடக்கு கிழக்கில் ஆயுதக் கலாசாரம் வேண்டாம்**

03) பொது பாதுகாப்பு சட்ட மூலத்தின் கீழ் அவசர சட்ட திட்டங்களின் ஊடாக நாட்டினை ஆட்சி செய்வதை நிறுத்தி வன்முறை நிவர்த்தி சட்டத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும். வடக்கு-கிழக்கு ஆயுத கலாச்சாரத்தை அகற்றி பொதுமக்கள் அதிகாரிகளுக்கு நிறைவேற்று அதிகாரங்களை உடனடியாக மாற்றுவதை உறுதி செய்வதுடன் இணைத்து குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான தீங்கு மற்றும் மனித உரிமை வன்முறைகளை விலக்கும் அதேவேளை நாடு முழுவதும் சட்ட ஆட்சியை நிலை நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்

04) சர்வதேச நிறுவனங்களும் தேசிய சிவில் சமூகத்தினரின் உதவியுடன் மீள்குடியேற்ற நிகழ்வுகளின் ஒருபடி முன்நோக்கி யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் உளவியல் சமூக ஆலோசனை மற்றும் பராமரிப்பை வழங்கக் கவனம் செலுத்த வேண்டும். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது ஜனாதிபதி சிறப்புப் பணிக்குழு விதித்துள்ள தடைகள் உள்ளடங்கலாக, வடக்கில் இடப்பெயர்வுக்குள்ள சுயாதீனத்தின் தடைகள் யாவும் முடிவுக்குக் கொண்டு வருதல் முக்கியமாகும். அறிந்த வகையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட வடக்கு, கிழக்கின் பாகங்களுக்கு சுயாதீனமாய் அணுக தடை விதிக்கப்பட்டுள்ளது.

05) இராணுவப் படைத்தளத்திலோ அல்லது வேறும் இடங்களிலோ, இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து நபர்களதும் பெயர் மற்றும் இதர விடயங்களை தெரியப்படுத்துவதோடு குற்றப் பத்திரிகை வழங்கப்படாதவர்களை விடுதலை செய்யவும் வேண்டும். யுத்தத்தில் மரித்தவர்கள் என தெரிந்த அனைவருக்கும் உடனடியாக மரண அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

06) ஒப்பரவுக்கான உடனடித் தேவைப்பாடு என்ற அடிப்படையில் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் யுத்தத்துக்குப் பின்னரான மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை உறுதி செய்யவேண்டும். அனைத்து சமூகத்தினரையும், குறிப்பாக பல்வேறு காரணங்களுக்காக புறந்தள்ளப்பட்டவர்களும், தமது பிரதேசங்களின் அபிவிருத்திக்குக் குரலெழுப்புவதற்கான நீதியான உரிமையினை வழங்கக் கூடிய வகையில் இந்தச் செயற்பாடு உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, உறையுள் மற்றும் வீடு, சுகாதார பராமரிப்புக்கான அணுகு முறையில் முன்னேற்றம், கல்வி மற்றும் தகைமை அபிவிருத்தி, வாழ்வாதார முயற்சிகளுக்கான ஏற்பாடு போன்றவைக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

07) நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்டவியல் கோட்பாடுகளுக்கு அமைவாக, ஊடக சுதந்திரம் மற்றும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் மற்றும் தகவல் அறிவதற்கான சுதந்திரம் போன்றவற்றுக்கான குறைபாடு குறித்த விமர்சனங்களுக்கு பயனுள்ள பதிலளிக்க வேண்டும். மிரட்டல் மற்றும் வன்முறையிலிருந்து ஊடகவியலாளர்கள் பராமரிக்கப் படல்வேண்டும். சமத்துவ அபிவிருத்தி மற்றும் இலங்கையை ''ஆசியாவின் அறிவூட்டல் மையமாக'' ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் செய்யத் தேவையான பொது அக்கறை கொண்ட விடயங்கள் சுதந்திரமாக கலந்துரையாடப்பட்டு விவாதிப்பதற்கு ஏதுவாக பல்வேறுபட்ட கருத்துக்கள் உருவாக்க இடமளிக்க வேண்டும். அதே போன்று, நிபுணர் குழுவின் அறிக்கை தமிழிலும் சிங்களத்திலும் சரியாக மொழிப்பெயர்க்கப் பட்டு அனைத்து இலங்கையர்களும் அதன் உள்ளடக்கம் தெ[illegible] வகையில் ஊடகத்தினருக்கும் பொது மக்களுக்கும் வழங்கவேண்டும்.

## கணக்கில் அடங்காத கருணை வேகம்



பயணம் செய்கிறபோது வேகத்தைக் குறிப்பிடும் போது மணிக்கு 100 கி.மீ இருந்திருக்கும் இப்படிக் கூறுவார்கள் வேகத்தின் கடுமையை விளக்க இலக்கிய இதிகாசப் புலவர்கள் மனோ வேகம், வாயுவேகம் என்று மிகைப் படுத்தும் வழக்கம் உண்டு. வாயு வேகம் என்பது காற்றின் வேகம். காற்று புயலாக வீசுவதை வானிலை ஆய்வாளர்கள் அறிவிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆனால் மனம் வாயுவை விட வேகமானது. எப்படித் தெரியுமா? வானில் பறக்கும் விமானம் ஆயிரம் மைல்களை எட்டு மணித்தியாலயத்தில் செல்லவேண்டிய இடத்தைச் சென்றடைந்தால் மனம் நினைத்த அடுத்த நிமிடமே சென்றுவிடும். எனவே மனோ வேகத்தை விஞ்சும் வேகம் உலகில் கிடையாது.

ஆனால் மனோ வேகத்தையும் விஞ்சிய வேகம் உண்டு. அதுதான் கடவுளின் கருணை வேகம் என்று ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளினார். இறைவன் உயிர்களைக் காக்க ஓடி வருகின்ற வேகம் மிக மிக அதிகம்.

தனது கோழிக் குஞ்சுகளைப் பருந்து பசியாறப் பாயும் போது எங்கிருந்தோ தாய்க்கோழி தலைதெறிக்க ஓடிவந்து குஞ்சுகளைக் காப்பாற்றும். அதுதான் கருணை வேகம். இந்தக் கருணை வேகத்திற்கு நிகர் சொல்ல எந்த வேகமும் இல்லை.

கஜேந்திர மோட்சம் கதையில் யானைகளின் தலைவனாகிய கஜேந்திரன் தாமரைக் குளத்தில் அழகிய தாமரை மலரைக் கண்டதும் அண்ணல் நாராயணனுக்கு அர்ப்பணிக்க எண்ணித் தும்பிக்கையால் பறிக்கிறான். முதலை வடிவில் இருந்த சபிக்கப்பட்ட கந்தர்வன் கஜேந்திரனை நீருள் இழுக்க அவனோ கரையேற முயற்சி செய்ய கடும் போராட்டம் நடக்கிறது. பல்லாண்டுகள் போராட்டம் நடந்ததாம். ஆனால் கஜேந்திரனோ பகவானுக்கு என்று பறித்த தாமரைப்பூ கீழே விழாதபடி உயர்த்தி அதனைப் பிடித்துக் கொண்டானாம்.

பிறவிப் பெருங்கடலே அந்த நீர் நிலை. ஆன்மாவே கஜேந்திரன். முதலையே உலக இன்பம். ஆன்மாவை உலக இன்பத்தில் ஆழ்த்தும் போர் எப்போதும் நடக்கிறது. கஜேந்திரனோ பகவானுக்கு அந்தத் தாமரையை உயர்த்திப் பிடித்து அதே கவனத்துடன் கரையேறப் போராடுகிறான். இதற்கு என்ன பொருள்? பக்தன் இதயமாகிய தாமரையைப் பகவானுக்கு அர்ப்பணித்து சம்சாரசாகரத்தில் இருந்து கரையேறக் கடுமையாகப் போராட வேண்டி இருக்கிறது.

இந்தக் கஜேந்திர மோட்சக் கதையில் வேகத்தைக் கருணை வேகம் என்று சாதிப்பார்கள். பெருமாள் யானையைக் காப்பாற்றப் புறப்பட்டபோது தன்மீது ஏறிப் புறப்படுவார் என்று கருடன் குறுக்கே வந்தாராம். "இவன் வேகம் போதாதே.... இவன் வேறு குறுக்கே வருகிறானே'' என்று கவலையில் கருடனைக் கையில் எடுத்துக் கொண்டு பகவான் புறப்பட்டார் என்று கதை கூறுபவர்கள் அனுபவித்துச் சொல்வார்கள்.

ஆந்திர தேசத்தில் போதனா என்ற பரம பக்தர் இந்தக் கதையைக் கூறும்போது நயனத்துடன் கூறினார். அவசரமாக வெளியில் செல்லும் ஆண்கள் அவசரத்திலும் அங்கவஸ்திரம் என்னும் மேல்துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு போவது வழக்கம். பெருமாளும் அப்படிப் புறப்பட்ட அவசரத்தில் லஷ்சுமி தேவியின் மேலாடையைப் உருவித் தான் மீது போர்த்திக் கொண்டு புறப்பட்டார் என்று கற்பனை செய்தார்.

முதலை காலைக் கவ்வியதால் ஏற்பட்ட வலியில் துடித்துக் கொண்டிருந்த கஜேந்திரன் திருமாலின் மீது லக்ஷிமி தேவியின் மேலாடையைப் பார்த்ததும் வலியை மறந்து சிரித்தானாம் என்றும் எழுதியுள்ளார்.

போதனா இந்தக் காட்சியைப் பாடி விளக்கியபோது அங்கிருந்த அரண்மனைப் புலவர் இந்தக் கருத்துக்கு ஆட்சேபனை தெரிவித்தார். ''பகவான் இப்படி எல்லாம் வரமாட்டார்; அவர் அந்தஸ்து, கௌரவம் என்ன. அவர் கிரீடம், குண்டலம், சங்கு, சக்கரம், வஸ்திரம் படை சூழ வந்தார் என்றுதானே பாட வேண்டும் அரண்மனைப் புலவராகிய நானே பொன், பட்டு, என் சீடர் புடை சூழ வந்திருக்கிறேன். எங்கு போனாலும் இப்படித்தான் போவேன். எனவே பகவானும் அப்படித்தான் வருவார் என்றும் போதனா எழுதியது தவறு என்றும் கூறிவிட்டு எழுந்து போய்விட்டார்.

மறுநாள் காலை போதனா அரண்மனைப் புலவர் வீட்டுக்குப் போனார். அங்கு ஆடை, ஆபரணம் இல்லாமல் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்த புலவரிடம் ''உங்கள் பேரக் குழந்தை கிணற்றில் விழுந்துவிட்டது; யாராலும் காப்பாற்ற முடியவில்லை என்றார்.

அடுத்த கண[illegible] எண்ணெய் பூசிய உடம்புடன் அரண்மனைப் புலவர் தெருவில் இறங்கி ஓடிவந்து கிணற்றை எட்டிப் பார்த்துக் கதறினார். சிறிது நேரத்தில் போதனா புலவரின் பேரனைக் கையில் ஏந்தியபடி அங்கு வந்தார். ''ஏன் பொய் சொன்னீர்கள்?'' என்று புலவர் கோபித்தார்.

போதனா சிரித்தபடி ''எப்போதும் எங்கு போனாலும் பட்டுப் பீதாம்பரம் அணிந்து சீடர் புடை சூழப் போகும் தாங்கள் இப்படி வரவில்லையே? பேரனுக்குத் துன்பம் என்றவுடன் ஒன்றும் அணியாமல் தாங்கள் வரும்போது; பக்தனுக்குத் துன்பம் என்றால் பகவான் லட்சுமியின் மேலாடையுடன் வந்தார் என்று நான் கூறுவது மட்டும் எப்படித் தவறாகும்? இதைப் புரிந்து கொண்டால் சரி என்று கூறி பேரனை ஒப்படைத்துவிட்டு புறப்பட்டார்.

புலவரின் கண் கலங்கியது. கர்வம் ஒடுங்கியது. உண்மையில் கருணையின் வேகம் கணக்கிட முடியாதது. கடவுளின் காருண்ய வேகம் எத்தனை மகத்தானது என்பதைப் புரிந்து கொண்டார் புலவர்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 மே 2011 செவ்வாய்க்கிழமை

# குழந்தைகளின் அறிவை வளர்க்கக்கூடிய இணைய உலவி



இணையத்தில் தீய விடயங்களைத் தவிர்த்து உங்கள் சுட்டிக் குழந்தைகளுக்கு நல்ல பயனுள்ள பல தகவல்கள் மற்றும் விளையாட்டுக்களைத் தருவதற்காக ஒரு இணைய உலவி உள்ளது.

அதன் பெயர் TWEENS BROWSER. மேலும் ஒரு பாதுகாப்பான இணைய உலவியாகவும் திகழ்கிறது. குழந்தைகளை மிகவும் கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த இணைய உலவியில் காட்டூன் மற்றும் புகைப்படங்களுடன் ஏராளமான பயனுள்ள இணையத் தளங்களைத் தொகுத்து வைத்துள்ளார்கள்.

இந்தப் பிரவுசரில் செய்திகள், கண்டுபிடிப்புக்கள், விலங்குகள் பற்றிய விவரங்கள், விளையாட்டுக்கள், பாடல்கள், கல்வி கற்பதற்கான தளங்கள், விளையாட்டுச் செய்திகள், திரைப்படங்கள் எனப் பல தலைப்புகளில் குழந்தைகளுக்கான இணையத் தளங்களைத் தருகிறது இந்த உலவி.



எனவே உங்கள் குழந்தைகள் கல்வியிலும் அறிவிலும் சிறந்து விளங்க இந்த இணைய உலவி உதவும்.

இணையத்தள முகவரி
**http://www.tweensbrowser.com/**

# உங்கள் கணினியின் இணைய வேகத்தை அதிகரிக்க



இணையம் என்னும் கடலில் நீந்துவதற்கு எமக்கு பயன்படுவது இணைய உலவிகளாகும். இந்த இணைய உலவிகளில் பெரும்பாலானவர்கள் உபயோகிப்பது IE, Chrome, Firefox போன்ற உலவிகளாகும்.

இதற்கு அடுத்ததாக அனைவராலும் விரும்பி உபயோகப்படுத்தப்படுவது Opera என்ற என்ற உலவியாகும். இந்த உலவியிலும் வசதிகள் மிக அதிகம். குறிப்பாக இந்தப் பிரவுசரில் இணைய வேகம் மிகவும் ஏராளமாக உள்ளது. வேகம் குறைவான இணைய இணைப்பு வைத்து இருந்தாலும் இந்த உலவி மூலம் வேகமாக இணையத்தைப் பயன்படுத்தலாம்.

பயன்கள்:

1. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய Fastest Java Script engine கொண்டுள்ளது.
2. இணையத்தில் உலவும் போதும் எமது கணினிக்கு மிகவும் பாதிப்பு ஏற்படாத வகையில் மிகவும் பாதுகாப்பாக இருக்கும்.
3. டேப் வசதிகள் இதில் உள்ளது.
4. அட்ரஸ் பாரில் இருந்தே தேடும் வசதி.
5. குறைந்த இணைய இணைப்பு உள்ள கணினிகளாலும் வேகமாக உலவ முடியும்.
6. ஹைலைட் செய்தால் நேரடியாக கூகுளில் தேடிக் கொள்ளும் வசதி.
7. HTML5 சப்போர்ட் செய்யும் உலவி.
8. பார்ப்பதற்கு அழகான தோற்றத்தோடு காணப்படும்.
9. எழுத்துப் பிழைகளை கண்டறியும் வசதி.

இவ்வாறு மேலும் பல அரிய வசதிகள் இந்த உலவியில் உள்ளது.

# Goosh கூகுளின் புதிய தேடல் தளம்




கூகுளின் தேடல் தளம் தான் உலகிலேயே அதிகமானோரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இணையத்தில் நுழைந்ததும் கூகுளில் தான் அனைவரும் தேடலைத் தொடங்குவார்கள்.

எந்த விடயமானாலும் அள்ளித்தரும் கூகுளை யார் தான் விரும்பமாட்டார்கள்? ஆனால் கூகுளின் தேடல் தளத்தையே வித்தியாசமான முறையில் ஒருவர் அமைத்திருக்கிறார்.

கூகுளின் தேடல் நிரல்களைக் கொண்டு புதிய முறையில் உருவாக்கிய அவரின் பெயர் ஸ்டீபன். யூனிக்ஸில் கூகுள் தேடலைப் பயன்படுத்தினால் எப்படியிருக்கும் என்ற கற்பனைக்கு தளத்தை உருவாக்கியிருக்கிறார்.

யூனிக்ஸ் (Unix OS) தெரியுமா உங்களுக்கு? உலகின் முன்னோடியாக இருந்த இயங்குதளம். இப்போது பலவிதங்களில் வந்து கொண்டிருக்கும் லினக்ஸ் பதிப்புகளின் ஆதாரம் யூனிக்ஸ் இயங்குதளமாகும்.

லினக்ஸை வடிவமைத்த லினஸ் டோர்வால்ட்ஸ்(Linus Torvalds) யூனிக்ஸின் முக்கிய நிரல்களைக் கொண்டுதான் லினக்ஸை உருவாக்கினார். யூனிக்ஸில் எல்லாமே தட்டச்சிடுகிற கட்டளைகளைக்(Input commands) கொண்டு தான் வேலையே செய்ய முடியும்.

கட்டளைகள் மூலம் யூனிக்ஸ் இயங்குதளத்தில் வேலை செய்தால் எப்படி இருக்குமோ அப்படி கூகுள் தேடலை Goosh.org என்ற இணையத்தளமாக உருவாக்கியுள்ளார். கூகுளின் இடைமுகம்(Google Interface) யூனிக்ஸில் உள்ளதைப் போல இருக்கிறது.


நீங்கள் தேட வேண்டிய தகவலை இத்தளத்தில் யூனிக்ஸ் கமாண்ட் போல அடிக்க வேண்டும். பின்னர் 5 முடிவுகள் மட்டும் காட்டப்படும். மேலும் அதிக தகவல்கள் வேண்டுமெனில் m அல்லது more என்ற கட்டளையை அடிக்க வேண்டும்.

மேலும் உதவிக்கு h அல்லது help என்று அடித்தால் இந்தத்தளத்தில் பயன்படுத்தக்கூடிய கமாண்டுகளின் பட்டியல் விவரம் தெரியும். பயன்படுத்திப்பார்த்தால் உங்களுக்கு அந்தக் கால நினைவுகள் வரும்.

இவரின் தளம் கூகுளின் மூலநிரல்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டது. ஆனால் கூகுளுக்கும் இவரின் தளத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை. இத்தளம் திறந்த மூலநிரல்(Open Source) அடிப்படையில் இதனுடைய நிரல்களை வழங்குகிறது. இதனை இங்கு தரவிறக்கிக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி **http://goosh.org/** என்பதாகும்.

# மின் சக்தித் தேவையைப் பூர்த்தி செய்யும் சூரிய சக்தி



இனிவரும் ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த மின் தேவையில் சூரிய சக்தி மூலம் பெறப்படும் மின்சக்தி மிகப் பெரிய பங்கு வங்கு வகிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கேபி.எம்ஜி அமைப்பின் தலைவர் அரவிந் மகாஜன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது: வரும் 2021-22-ஆம் ஆண்டுகளில் நாட்டின் மின் தேவைப்பாட்டில் இவை 7 சதவீத அளவுக்குப் பூர்த்தி செய்யும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

சூரிய சக்தி மின் பயன்பாட்டால் 30 சதவீதம் அளவிற்கு நிலக்கரியின் பயன்பாடு குறைக்க முடியும் இதன்மூலம் சுற்றுப்புறம் மாசுபடுவதைத் தடுக்க முடியும்.தற்போது சோலர் பயன்பாடு என்பது மக்களிடையே விழிப்புணர்வு குறைவாகக் காணப்படுகிறது.

காரணம் தற்போது வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு யூனிட்டிற்கு 5 முதல் 5.50 வரையில் செலவாகிறது. அதேசமயம் சூரிய சக்தியின் மூலம் பெறப்படும் செலவு யூனிட்டிற்கு 11-13 வரையில் செலவாகிறது. இருப்பினும் அடுத்த பத்தாண்டுகளில் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சார உற்பத்திக்கான செலவு 4முதல் 5 சதவீதம் வரையில் கூடுதலாகச் செலவு அதிகரிக்கும்.

அச்சமயத்தில் சோலரின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் எனவும், இனிவரும் 2017-19 ஆண்டுகளில் தற்போது மின்சாரம் தயாரிக்கும் முறைக்கும் சோலர் மின் தயாரிப்பு முறைக்குமான செலவு சரிசமமாக இருக்கும். வரும் 2022-ஆம் ஆண்டில் விவசாயத்திற்கான மின்தேவைப்பயன்பாடு 16 ஆயிரம் மெகாவோல்ட் ஆகவும் அதிகரிக்க கூடும். அதேபோல் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கான டவர்களை இயக்குவதற்கு செலவிடப்படும் டீசலுக்கான தொகையில் சுமார் 6 ஆயிரத்து 440 கோடி வரை சேமிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# அனைத்து வகையான வீடியோக்களையும் பார்வையிடுவதற்கு

சாதாரண புல் முதல் அமெரிக்க அதிபர் ஒபாமாவரை அனைத்துத் தகவல்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் விக்கியின் புதிய பரிமாணம்தான் Qwiki.

அரிய பல தகவல்களையும் வீடியோக்களையும் கொண்டு நம் கண்களுக்கும் அறிவுக்கும் விருந்தளிக்கும் வகையில் Qwiki உள்ளது.

என்ன தகவல் வேண்டும் அதைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் கொடுப்பதற்காக உள்ள விக்கிப்பீடியாவில் வீடியோக்களை நாம் காண முடியாது. ஆனாலும் தகவல்களை அள்ளிக் கொடுக்கும். இந்தக் குறையைப் போக்கி கண்களுக்கு இனிய வீடியோவைக் கொடுக்க புதிய பரிமாணத்தில் வந்திருக்கும் தளம் தான் Qwiki.

இந்தத் தளத்துக்குச் சென்று Enter Topic என்ற கட்டத்திற்குள் எதைப்பற்றிய தகவல் வேண்டுமோ அதை தட்டச்சுச் செய்து Enter பொத்தானைச் சொடுக்க வேண்டும். அடுத்து வரும் திரையில் நாம் கொடுத்துள்ள தலைப்புக்குத் தகுந்தபடி உள்ள பல வீடியோக்களில் ஒவ்வொன்றாகச் சொடுக்கிப் பார்க்கலாம்.

இந்த Qwiki விக்கியில் மில்லியன் கணக்கில் பல வீடியோக்கள் உள்ளன. இனி நாம் தேடும் பல தகவல்களை **http://www.qwiki.com/** என்னும் இணையத்தளத்தினூடாக வீடியோவுடன் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தா ஆச்சிரம நெறிமுறைகளுக்கமைய அடியவர்களின் பசி தீர்க்கும் சந்நிதியான் ஆச்சிரமம்

(சென்றவாரத் தொடர்ச்சி)


தொண்டைமானாறு சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்துள்ள அன்ன தான மடங்கள் அடியவர்கள் பசி தீர்க்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் 1940 ஆம் ஆண்டு அமரர் மயில்வாகனம் சுவாமிகளால் ஆனந்தா ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டு அன்ன தானப் பணிகள் சிறப்பாக இடம்பெற்று வந்தன.

இவ்வாறு திறம்பட அன்னதானப் பணிகள் இடம் பெற்றுக்கொண்டிருந்தன. 1986 ஆம் ஆண்டு, 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையில் ஆனந்தா ஆச்சிரமம் முற்றாகச் சேதமடைந்தது. இதனால் 45 ஆண்டுகளாக அடியார்களுக்கு அன்னப் பணியாற்றிய ஆனந்தா ஆச்சிரமமும் செயலிழந்தது.

யுத்தம் ஆரம்பமானதும் சந்நிதியான் சூழலில் அன்னதானப் பணிகளும் நின்று விட்டன. பெரும்பாலான மடங்களும் ஷெல் தாக்குதல்களால் முற்றாகச் சேதமடைந்திருந்தன.

இந்த நிலையில், சிறுவயது முதல் ஆனந்தா ஆச்சிரமத்தின் நிர்வாகியாக இருந்த அமரர் மயில்வாகனம் சுவாமிகளுக்கு வலதுகரமாக இருந்து பணி செய்து கொண்டிருந்த சந்நிதியான் ஆச்சிரமத்தின் தற்போதைய நிர்வாகி செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு ''எனது மறைவுக்குப் பின் நீ எங்கும் போக வேண்டாம் முருகன் காலடியிலேயே நின்று இந்த அன்னதானப் பணியை தொடர்ந்து செய்துவா. முருகன் துணை நிற்பான்'' என்று மறைந்த மயில்வாகனம் சுவாமிகள் அடிக்கடி கூறியிருந்தார்.

மயில்வாகனம் சுவாமிகள் அமரரானதும் அன்னப்பணி நின்றுவிடக் கூடாதே என ஆதங்கப்பட்ட மோகனதாஸ் சுவாமிகள் தனது குருநாதரான மயில்வாகனம் சுவாமிகள் சொன்னதையே தாரக மந்திரமாகவும், சுவாமிகளை மானசீகக் குருவாகக் கொண்டும் செல்வச் சந்நிதி முருகன் கோயில் வாசலின் நேர்வீதியில் சிறிது தூரத்தில் இருந்த அரசம்மா மடத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் என்ற பெயரில் 1988 ஆம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று காலஞ்சென்ற கைதடி ரி.வேலாயுதன், கொ.க.ஆ. கந்தையாப்பிள்ளை, கு.சிவசம்பு ஆகியோருடனும் இ.திலகநாதன் போன்றோரின் பூரண ஒத்துழைப்புடனும், உதவியுடனும்அன்னதானப் பணியை ஆரம்பித்தார்.



செல்வச்சந்நிதி சூழலில் மிகப்பிந்திய காலத்தில் அதுவும் போர்ச்சூழலில் ஆரம்பமான சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அன்னதானம் தாராளமாக மயில்வாகனம் சுவாமிகள் நடத்திய ஆனந்தா ஆச்சிரம நெறி முறைகளுக்கு அமைய சிறப்புடன் நடைபெற்று வந்தன. இங்கு நடைபெறும் அன்னதானம் மயில்வாகனம் சுவாமிகளின் பூஜையுடனையே ஆரம்பிக்கப்படும். அக்காலங்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் மாலைவரை சந்நிதியான் ஆச்சிரம மடத்துக்குச் சென்றால் அன்னதானம் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

ஆரம்பகாலத்தில் ஆச்சிரமத்தில் அன்னப்பணிகளை மேற்கொள்வதற்காகத் தானும் தனது உதவியாளர்களும் பட்ட துன்பங்களைப்பற்றி ஆச்சிரமப் பொறுப்பாளர் மோகனதாஸ் சுவாமிகள் இன்றும் அடிக்கடி நினைவு கூறுவார்.

1990 ஆம் ஆண்டு ஆரம்பமானதைத் தொடர்ந்து அன்னதானப் பணியை மேற்கொள்வது பெரும் சோதனையாகவே இருந்தது. வெள்ளிதோறும் இடம் பெற்றுவந்த அன்னப் பணி எங்கே தடைப்பட்டுவிடுமோ என்கிற நிலை கூட இருந்தது. அக்காலங்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் அன்னப் பணியைத் தவறாமல் தங்கு தடையின்றி நடத்த சுவாமிகளும் அவரின் உதவியாளர்களும் தங்களையே அர்ப்பணித்து மிகக் கடுமையாக உழைத்தனர்.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அன்னப் பணி முடிவுற்றதும் மறு நாளான பிரதி சனிக்கிழமை தோறும் காலையில் மோகனதாஸ் சுவாமிகளும் அவரது உதவியாளர்கள் மூன்று நான்கு பேரும் சைக்கிளில் கொம்படி, ஊரியான் பாதைகள் ஊடாக பல சிரமங்களையும், வேதனைகள், சோதனைகளையும் தாண்டிச் சென்று வட்டக்கச்சி இராமநாதபுரம், கண்டாவளை, கனகாம்பிகைக்குளம் போன்ற இடங்களில் விவசாயிகளிடம் நெல்லைப் பெற்று செவ்வாய் அல்லது புதன்கிழமைகளில் ஆச்சிரமம் திரும்புவார்கள்.

இவ்வாறு பெறப்பட்ட அரிசி அடுத்த வெள்ளியன்று அன்னப்பணிக்கு பயன்படும். தொடர்ந்தும் அன்னப் பணிக்காக அரிசி பெறுவதற்கு மீண்டும் அதே சைக்கிள் பயணம் இவ்வாறான பயணங்கள் பல மாதங்கள் தொடர்ந்தன.

இந்தக் காலகட்டங்களில் வர்த்தகப் பிரமுகர்களாகவும், அரிசி ஆலைச் சொந்தக்காரர்களாக இருந்த நெல்லியடி ஐ.சிவநாதன், இ.புவனேந்திரராசா,

**மாலவன்**

த.சண்முகசுந்தரம், நா.தெய்வேந்திரம், மாலிசந்தி த.இராமச்சந்திரன், யாழ். நகரைச் சேர்ந்த க.கு.கந்தையா பிள்ளை ஆகியோரும் அன்னப் பணிக்குப் பெரிதும் உதவிகளை வழங்கியுள்ளனர்.

மிக நெருக்கடி மிகுந்த 1990- 1991 காலப்பகுதியில் யாழ். செயலக திட்டப் பணிப்பாளராக இருந்த செ.பத்மநாதன் வாராவாரம் 25 பேர் பயனடையக் கூடியதாக வழங்கிய நிவாரண உதவியும், பருத்தித்துறை உதவி அரச அதிபராக இருந்த சி.முருகேசம்பிள்ளை வாரா வாரம் 25 பேர் பயனடையக் கூடியதாக வழங்கிய நிவாரண உதவியும் 50 பேருக்கு உணவுப்பசி போக்க உதவியது.

அதேபோல கரவெட்டி உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய செ.ஸ்ரீநிவாசனும் தன்னாலான முழு உதவிகளையும் அன்னதானப் பணிக்கு வழங்கி வந்தார்.

(தொடரும்)

# நெஞ்சில் ஓர் ஆலயம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

பல வளங்களும் கொண்ட தென் பகுதி வைத்தியசாலைகளைப் பின் தள்ளி யுத்த பூமியில் பல்வேறு சோதனைகளைச் சந்தித்தும் தளராது சாதனை படைத்த பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வெள்ளி விருதைப் பெற்றுக் கொண்டது.

தனியார் துறையோடு போட்டிபோடும் அளவுக்குத் தரமான, கனிவான, சுத்தமான, சுகமான பராமரிப்புடனான ஒரு சேவையை வழங்க அரச வைத்திய சாலையாலும் இயலும் என்பதை கனவிலும்கூட நான் கண்டிருக்கவில்லை.

விருது கிடைப்பதற்கு ஏதுவான முயற்சிகள் பற்றியும் அதற்கான பணியாளர்களின் ஒத்துழைப்புப் பற்றியும் பலரும் பேசினார்கள். விருது பெற உழைத்த பலரும் பாராட்டப்பட்டு நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பேசியவர்களில் பலராலும் அகிலன் என்ற பெயர் அடிக்கடி உச்சரிக்கப்பட்டது. ஒவ்வொரு வைத்திய சாலையிலும் ஒவ்வொரு அகிலன் உருவாக வேண்டும் என பிரஸ்தாபிக்கப்பட்டது. நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபரும் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உபதலைவருமான செ.சேதுராஜா ''நீங்கள் அகிலன்களை உருவாக்குங்கள்; ஆனால் எங்கள் அகிலனைக் கேட்டு விடாதீர்கள்'' எனச் சொல்லியது அர்த்தங்கள் பல பொதிந்த நகைச்சுவை ஆகிறது.

எனவே அந்த அகிலனை ஆராய வேண்டிய தேவை எனக்கும் எழுந்தது. யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த அகிலன் வடமராட்சிக்கு உத்தியோகபூர்வமாகவே வந்தவர். வடமராட்சி மண்ணின் மைந்தர்களை மிஞ்சிய அர்ப்பணிப்பு, தலைமைத்துவம், வழிநடத்தல், உற்சாகப்படுத்தல், அனைவரையும் ஓரணியில் திரட்டுதல், வெற்றியை நோக்கி வீறு நடைபோடுதல், இலக்கைள அடையும் வரை தளராமை, எதையும் சவாலாக ஏற்றுக் கொண்டு துணிச்சலாகக் காரியத்தில் இறங்குதல், எதிர்மறையாகச் சிந்திக்காமல் எந்தச் சவாலையும் சாத்தியமாக்குதல் எனப் பல தலைசிறந்த குழுத் தலைமைக்கான சிறப்பியல்புகள் அவரிடத்தில் ஒருங்கே அமையப் பெற்றதுதான் இந்த வைத்தியசாலைக்குக் கிடைத்த முதலாவது அதிஷ்டம் எனலாம்.

அகிலனின் அணியில் மேலும் பல வைத்தியசாலைப் பணியாளர்கள் அல்லும் பகலும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற ஒன்றுதிரண்டமை வைத்தியசாலையை மேலும் பலமடங்கு முன்னிலைக்கு கொண்டுவர உதவியது. பாராட்டுவது சுலபம். ஏன் பாராட்டு விழா நடத்துவதும் சுலபம். பாராட்டைப் பெற உழைப்பதுவும் அதில் வெற்றி பெறுவதும் அதை நோக்கி [illegible]

**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிறந்த சேவைக்காக வெள்ளி விருது கிடைத்தமையை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



போடுவதும் அவ்வளவு சுலபமாக வெளியே இருப்பவர்களால் உணரப்பட இயலாதது.

தமக்கு விதிக்கப்பட்ட பணியையே புறக்கணிப்பவர்கள் மத்தியில் பணிக்கு மேலாக அவர்கள் சிந்திய வியர்வை ஒரு துளியேனும் வீண் போகாமல் அதற்கு உரிய அங்கீகாரம் விருதாகக் கிடைத்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

நிரந்தரமான ஒரு வைத்திய அதிகாரி இல்லாத போதும் அண்மைக் காலங்களில் கூட கணிசமான காலம் வைத்தியசாலையை வழிநடத்திய பதில் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வி.ஜெயராஜா மிகவும் பாராட்டப்பட வேண்டியவர். அவருடைய காலப்பகுதி சவால்கள் மிக்கதாகவே இருந்து வந்துள்ளது. அமைதியான சுபாவமுடைய அவர் எதிர் நீச்சல் போட்டு நிர்வாகத்தைச் சிறப்புற நடத்தி வந்தார். அவரது காலம் விருதை நோக்கிய வீறு நடைப் பயணத்தில் பிரதானமானது.

தற்போது வைத்திய அதிகாரியாக பதவி ஏற்றிருக்கும் வைத்திய கலாநிதி கே. நந்தகுமாரன் அவர்களைக் காணும் போதெல்லாம் தேகம் மயிர்க் கூச்செறிகிறது. அவரது வாழ்க்கையை ஆராய்ந்து ஒரு காவியம் எழுதவேண்டும் என என் உள் உணர்வுகள் துடிப்பதுண்டு.

தனது இரண்டு கைகளிலும் இரண்டு ஊன்றுகோல்களை கால்களாகத் தாங்கியபடி சற்றும் சளைக்காமல் அவர் வைத்தியசாலையை வலம்வரும் காட்சி கண்கொள்ளாதது.

**மு.சிவநேசன்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
08.10.1945

மறைவு:
01.05.2011

## திருமதி கந்தசாமி திரவியம்

கடந்த 01.05.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.01, யாழ்.வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4713)

குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### வைத்திலிங்கம் செல்லக்கணேசன்

எமது சகோதரன் 17.04.2011 அன்று அகால மரணமடைந்த செய்தி அறிந்து தகவல் தந்த உரும்பிராய் கிராம சேவையாளர் அவர்களுக்கும் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் சகல வகையிலும் உதவி புரிந்த நண்பர்களுக்கும் இறுதிக்கிரியை களில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மற்றும் இணையத் தளங்களின் மூலம் தொடர்பு கொண்டு எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

சகோதர, சகோதரிகள்

(40)(4710)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

நவாலி, மே 31

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், கட்டட நிர்மாணம் ஆகிய தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. ஆறு மாதகாலம் வரை நடை பெறும் இந்தப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் படும்.

பயிற்சிகளில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களைப் பொறுப்பதிகாரி இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழிற் பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ம-100)

## கலந்துரையாடல்

வரணி, மே 31

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலக எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடலும் நன்கொடைப் பணம் வழங்கலும் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி உப பணிமனை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-122)

**காணி விற்பனைக்கு**

கந்தர்மடம், பலாலி வீதி, இந்து மகளிர் வீதியில் அமைந்துள்ள 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0773906158

**கடைத்தொகுதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு**

கொழும்புத்துறை மேற்கில், கொழும்புத்துறை வீதி கணக்கர் சந்திக்கருகில் உள்ள 3பரப்பளவுடைய 3 கடைத் தொகுதியும் அதன் பின்னால் நல்ல நிலையிலுள்ள வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779239314

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

நடுப்பூசி ஏற்றப்பட்ட ஊர்க்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. புறொயிலர் குஞ்சு ரூபா 65/=
கோழிப்பண்ணைக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை.
தொடர்பு:- 0777490914, 0217200616

**German , Swiss மொழிகள்**

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. வெளிமாவட்டத்திலிருந்து வருவோர்க்கு தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
10, Palaly Road, Jaffna. T.P: 0771604823

**Vacancy Notice - Walk in Interview**

1. English Lecturer - Full Time/ Part time
2. Office Clerk

Date : 02-06-2011 Time : 11.00am Onwards

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No:15 2/1,Sirampiyadi Lane,Off Stanley Road,Jaffna.
(ஆரியகுளத்துச் சந்திக்கருகில்,கொசிHotel மேல்)
Tel:0212224550 Hotlines :0777222422/0777585913/0714299935

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHRAHA புறொயிலர் குஞ்சுகள் சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 01.06.2011 விநியோகிக்கப்படும்.
★றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ஜென்சி பாம் - பருத்தித்துறை (0773541771)
★துர்க்கா பாம் - சுன்னாகம் (0779346599)

தொ.பே: 0776090926, 021 222 2867

(4584)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி
### இந்திராதேவி சிவஞானேஸ்வரன்



தோற்றம்
27.12.1957

மறைவு
01.05.2011

அம்மா என்று உறவாடயாரும் இல்லையே
அன்புமொழி பேசிவிட நீயும் இல்லையே
ஆயிரம் சொந்தங்கள் தேடி வந்து நின்றாலும்
அன்பான எம் அம்மாவுக்கு நிகராகுமோ

கடந்த 01.05.2011 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கூவில், புலோலி தெற்கு,
புலோலி. (சி/265)

கணவர், பிள்ளைகள்.

(49,20,27)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா புவனேஸ்வரி



அரசடி வீதி, 3 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இல.97, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா புவனேஸ்வரி 28.05.2011 சனிக்கிழமை சிவபதமெய்தி விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் வல்லிக்குட்டி- தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா, செல்வராசா மற்றும் தங்கராணி, தவராசா, ஜெயாதேவி, தங்கவேல் (டோகா), சுசீலாதேவி, நேசராசா (கனடா), மதனராசா (கண்ணன் சைக்கிள் கடை உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயும் பொன்மலர், பாலசுப்பிரமணியம், இராசேஸ்வரி,யனுசியா, ஸ்பம்பதி, வசந்தி, தர்மகுலராஜா (தலைவர், முச்சக்கரவண்டி சங்கம்) மைதிலி, ரசிந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் சிவலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பூலிங்கம், மற்றும் நாகம்மா, சின்னக்கிளி ஆகியோரின் மைத்துனியும், ராஜி, ரஜனி, சுபாஸ்கரன் (டோகா), சுபிதா, காலஞ்சென்ற ராஜ்கபூர் மற்றும் சயமாலினி,பொனிற்றா, டில்குசன், நிறஞ் சன், யாழ்ரா, மீரா, ரிசா, வத்சலா, விஜய்தா, நிஜிலா, நிரோஜா, பர்மி, நவீர், நதீஸ், சகானா,பரீனா ( ஆசிரியை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்) தீபன், ஜென்சன் (லண்டன்), டென் சியா, நிறோஜன் (ஆஸ்திரேலியா), நந்தினி, தர்சனா, சுபராகவி, நேருஜன், மிதுசன், பூஜா, கிருஷாந்தினி, சஸ்மியா, வர்சன், சாருகான், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் உதயகுமார் (நோர்வே), சிவாகர் (லண்டன்) பகீகரன் (டோகா), சயந்தன் (டோகா), ரோகினிதேவி, பிரதீபன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற தனுசா மற்றும் பாரத், தட்சிகா, ரஞ்சித் (நோர்வே), டிலக்சனா, பகீர்சனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.97, பருத்தித்துறைவீதி,
நல்லூர். (4715)

தகவல்:
ஜெயா (மகள்).



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 19.12.1929
மறைவு : 01.05.2011

### கதிரேசு கந்தையா
(ஓய்வு பெற்ற அதிபர்)

வாழ்வு எனும் கொடையை
இவ் வையகத்தில் எமக்குத் தந்து
எம்மைவிட்டு வானகம் சென்றுவிட்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
மறைந்தோடியது நாள்கள்
மறக்கத்தான் முடியுமா?
உங்கள் அன்பு முகம் கண்டு நாள்கள் என்ன
ஆயிரம் ஆண்டுதான் ஆனாலும் அழியாது
உங்கள் அன்பு முகம் எம் இதயத்தில்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுளின் பாதியை இழக்கச் செய்யும் புகைப்பொருள்கள்

உலக புகைப்பொருள் எதிர்ப்புத் தினம் ஒவ்வொரு வருடமும் மே 31 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது. உலக புகையிலை இல்லாத் தினம் (World No Tobacco Day) என்றும் இதனைச் சொல்லலாம். 1987 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தை உலக சுகாதார நிறுவனம் (WHO) பிரகடனப்படுத்தியது.

புகைப் பொருள்களைத் தவிர்ப்பதை ஊக்குவித்து உலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த நாள் 24 மணி நேரமும் பயன்படுத்தப்படும். உலகளாவிய ரீதியிலும் உள்ளூரிலும் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சிகளைக் கண்டு இந்த நாளிலாவது புகைப்பொருள்களைத் தவிர்த்து இனிவரும் நாள்களிலும் அவற்றைத் தொடுவதில்லை என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு இளைஞர்கள் முன்வரவேண்டும்.

சுருட்டு, சிகரெட், பீடி என்பவற்றைப் புகைக்கும் பழக்கம் இன்று இளைஞர்களிடம் குறிப்பாகப் பள்ளி மாணவர்களிடம் மிகத் தீவிரமடைந்து வருகின்றது.

இளைஞர்கள் புகைத்தலை இந்த ஆண்டு புகைப்பொருள் எதிர்ப்புத் தினத்திலிருந்து விட்டுவிட வேண்டும். புகைப்பொருள்களை இளைஞர்கள், மாணவர்கள் தொடக்கூடாது.

இளவயதில் புகைப்பதற்கான எண்ணம் எழுவதற்கு இரண்டு முக்கிய காரணிகளைக் கூறலாம்.

* பெற்றோரில் ஒருவரோ அல்லது இருவருமே புகைப்பிடிப்பவர்களாக இருத்தல்.
* நண்பர்கள்- சமவயதுக் குழுவினரின் தூண்டுதல்.

சிகரெட் புகையில் பல நச்சுப்பொருள்கள் இருக்கின்றன. புகையிலையைப் பதனிடும் போது மேலும் பல நச்சுப் பொருள்கள் சேர்ந்து விடுகின்றன. சிகரெட்டைப் புகைக்கும் போது புகையிலையில் அடங்கியுள்ள வெவ் வேறு இரசாயனப் பொருள்களிடையே வெப்பத்தின் காரணமாக நிகழும் இடைத்தாக்கங்கள் மூலம் மேலும் பல புதிய நச்சுப் பதார்த்தங்கள் உருவாகின்றன.

குறிப்பாக நிக்கொட்டின், ஐதரசன், சயனைட், காபனீரொட்சைட், அமோனியா, ஐதரசன் சல்பைட், ஆசனிக், மெதையில், அல்கஹோல் போன்றவை தோன்றுகின்றன.

புகைத்தலின் போது அண்ணளவாக 90 வீதமான நிக்கொட்டின் இரத்தத்துடன் கலந்துவிடுகிறது. அருகிலிருப்பவர்களுக்கு வெளிவிடும் புகைமூலம் 10 வீதமான நிக்கொட்டின் கலந்துவிடுகிறது. ஒரு சிகரெட்டில் ஏறக்குறைய 18 மில்லி கிராம் நிக்கொட்டின் அடங்கியுள்ளது.

* மனிதனுடைய இருதயம், நரம்புத் தொகுதிகள், இரத்தக் குழாய்கள், உணவுக் கால்வாய்கள், சிறுநீரகங்கள் என்பவற்றை இது பாதிக்கின்றது.
* இதயத்துடிப்பு 15-25 தடவைகள் வரை அதிகரிக்கிறது.
* தோலினதும் இதயத்தினதும் குருதிக்கலன்கள் சுருங்குவதால் குருதி அமுக்கம் 10- 20 அலகுகள் வரை உயர்கிறது.
* நுரையீரல்களிலிருந்து இதயத்துக்கும் ஏனைய உறுப்புகளுக்கும் குருதி கொண்டு செல்லப்படும் போது ஒட்சிசனின் அளவு காபனீரொட்சைட் காரணமாகக் குறைவடைகிறது.
* குருதிக் கலன்களின் உட்சுவர்கள் மீது கொழுப்புப் படிதலும் அதிகரிக்கிறது.
* இதயக் கோளாறுகளும் குருதிக் கலன்கள் தொடர்பான கோளாறுகளும் அதிகமாகின்றன.

**இன்று புகைப் பொருள் எதிர்ப்பு தினம்**

நிக்கொட்டின் சுவாசப் பாதையில் மேலும் கீழும் அசைந்து கொண்டிருக்கும் ''பிசிர்கள்'' எனப்படும் நார்களைப் பாதிக்கிறது. இதனால் உட்சுவாச வளியில் தூசுகள் தடுக்கப்பட்டுச் சுத்திகரிக்கப்படும் தொழிற்பாடு முற்றாகத் தடைப்படுகிறது.

இதனால் சுவாசக் குழாய் அழற்சி சுவாசப் பாதை வழியே பரவும் ஏனைய நோய்கள் என்பன ஏற்படக் காரணமாகிறது.

* நுரையீரல் புற்றுநோய்
* நாக்கு, வாய், குரல்வளை, தொண்டை, உணவுக் குழாய், சிறுநீர்ப்பை, பித் தப்பை, பன்கிறியஸ் என்பவற்றில் புற்றுநோய்.
* வயிற்றுப்புண்

என்பன ஏற்படுகின்றன. புகைத்தலால் மனிதனுக்கு ஏற்படும் ஆபத்துக்களை 1938 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ''ரேய்பண்ட் ரீட்'' என்பவரே முதன் முதலில் கண்டுபிடித்தவராவார். இதன் பின்னர் 1950 இல் ''டொல்'' என்பவரும் 1956 ஆம் ஆண்டில் ''கில்'' என்பவரும் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாகவே புகையின் காரணமாக நுரையீரலில் புற்றுநோய் ஏற்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களே புகை பிடித்தலுக்கு எதிரான இயக்கத்தையும் ஆரம்பித்தவர்களாவர்.

ஒரு சிகரெட்டைப் புகைத்து முடிக்கும் போது ஒரு மனிதன் தனது வாழ்வில் ஐந்தரை நிமிடங்களை இழக்கின்றான். நாளொன்றுக்கு 20 சிகரெட்டுக்கள் புகைக்கும் ஒருவன் தனது வாழ்வில் ஏறக்குறைய ஆறரை வருடங் களை இழக்கின்றான்.

அமெரிக்காவில் புகைத்தல் சம்பந்த மான நோய்களால் ஏறக்குறைய 443,000 பேர்வரை வருடம் தோறும் இறக்கின்றார்கள்.

இது HIV காரணமாக ஏற்படும் இறப்புக்களை விட அதிகமானது.

அனைவரும் சுகமாக, சுகாதாரமாக வாழ்வதற்குப் புகைப்பவர்கள் புகைத்தலை நிறுத்துதல், அதிக உடற்பயிற்சி செய்தல், சுத்தமான சத்துள்ள உணவுகளை உண்ணல் போன்ற செயல்களில் ஈடுபட வேண்டும். இன்றே புகைத்தலை விடுங்கள் உங்களுக்காக மாத்திரமல்ல

**இ. சந்திரசேகர சர்மா,**
முன்னாள் ஆலோசகர், புகை, போதை, குடி எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டம், போதுட்.

உங்கள் அன்புக்குரியவர்களுக்காகவும் சுற்றாடலுக்காகவும் புகைத்தலை இளைஞர், மாணவர்கள் அனைவரும் இன்றே கைவிடுவோம் என்று சபதம் எடுங்கள்.

# கமக்கார அமைப்பின் அடாவடி

அன்று அதிகாலை 4 மணி இருக்கும் வேளைக்கு எழும்பி குளித்துவிட்டு பரந்தன் செல்வதற்காக அவசர அவசரமாக வெளிக்கிட்டேன். எனது மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு எனது நண்பன் வீட்டுக்குச் சென்று அவனையும் கூட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் பரந்தன் நோக்கிப் புறப்பட்டேன்.

சூரியன் வர முதல் பரந்தனில் நிற்கிறோம். ஐந்து ஏக்கர் வயல் நிலம் அங்கே எனக்கு இருப்பதால் அந்த வயல் நிலத்தைப் பார்த்துவிட்டு வருவோம் என்று சென்றிருந்தேன்.

எனது வயலில் இறங்கினேன். பழைய நினைவுகள் நிழலாடின.

சாப்பாடு கட்டிக் கொண்டு வந்து வயல் வேலை செய்து நண்பகல் அந்தப் பனைமரத்தின் நிழலில் இருந்து கொண்டு சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் உறங்கி விட்டு மீண்டும் கதைத்து... கதைத்து..., பாடிப்....பாடி வயல் வேலை செய்து எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன.

அந்த நாள்களை நினைக்கையில் வயலில் நெல்லை விதைத்ததில் வந்து குவியும் நெல்லை அள்ள அள்ள மனதில் மகிழ்வு ஏற்படும். பட்ட உழைப்பில் பெறுமதி இருக்கும். ஆனால் இப் பொழுது வயலை விதைக்கிறதும் சரி, நெல்லை எண்ணி எண்ணி மூடை கட்டுவதும் சரி. உழைத்த உழைப்பு பயனில்லாமல் போய் விட்டது. இதை ஏன் சொல்லுறன் என்று பார்க்கிறியளா?

நெற் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அன்றைய காலங்களில் சிறந்த மருந்து வகைகள் வழங்கப்பட்டன. ஆனால் இன்று அவ்வாறான மருந்து வகைகள் வழங்கப்படாமையால் பல நோய்கள் வயல் நிலங்களில் பரவுகின்றன.

இதனால் நெல்லில் நோய் பரவி அதன் வளர்ச்சிக்குப் பாதகமாக அமைந்து விடுகிறது. அடுத்தபடியாக போதியளவு உர வகைகளை நெற் பயிர் நிலங்களுக்கு பயன்படுத்தப் படாமல் அந்த நிலம் வளம் குன்றிய நிலமாக இருப்பதால் பாதிப்பு ஏற்படுகிறது. இதனை யாருமே கவனத்தில் எடுப்பதில்லை .

என்னுடன் வந்த நண்பன் கதிர் கேட்டான், ''ஏன்ரா நீ இன்னும் விதைக்கவில்லை என்று. ஐந்து ஏக்கர் நிலத்தை விதைத்துவிட்டு ஒரு ஏக்கர் நெல்லை எடுப்பதால் என்ன இலாபம். முன்னைய காலங்களில் உந்த அரச அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் அந்த ஊர் சம்பந்தமாக அக்கறை கொண்டவர்களாக இருந்ததால் எந்த நடவடிக்கைகளிலும் மக்கள் இறங்கி வேலை செய்ய முடியும். ஆனால் இப்பொழுது அரச அலுவலகத்தால் என்ன பயன். ஆளாளுக்கு சம்பளத்துக்கு வேலை செய்யினம் ஒழிய கடமையாக இந்த வேலையை யாரும்செய்வதில்லை

உந்த வன்னிக் கந்தசாமி, போன முறைவிதைத்தவன். நீ கேட் டால் வயல் விதைக்கிறதை விட்டு விட்டு ஓடி விடுவாய்.

விதை நெல் மானிய அடிப் படையில் வழங் கப்படுகிறது என்று இவனும் ஒருநாள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கமக்கார அமைப்பிடம் சென்று தனது பெயரைக் கொடுத்து விட்டு, விதை நெல் வரும் வரும் என்று பார்த்துக் கொண்டு இருந்தான். விதை நெல்லும் வந்தது. ஆனால் இவனுக்குக் கிடைக்கவில்லை.

என்ன கொடுமை என்றால் அந்தக் கமக்கார அமைப்பு தமக்குத் தெரிந்தவர்களுக்கும் வயல் நிலம் இல்லாதவர்களுக்கும் விதை நெல்லை வழங்கியுள்ளது. கந்தசாமி அந்தக் கமக்கார அமைப்பிடம் சென்று வயல் நிலம் இல்லாதவர்களுக்கு விதை நெல்லை வழங்கியுள்ளீர்கள். வயல் நிலம் உள்ள எனக்கு ஏன் விதை நெல் வழங்கவில்லை எனக் கேட்டதும் அந்தக் கமக்கார அமைப்பில் உள்ள ஒருவர், ''இப்பொழுது விதை நெல் கைவசம் இல்லை. அடுத்த முறை வந்தால் தாறம் போய் வாரும்'' என்று சொன்னார்.

அந்த ஆளும் விட்ட பாடில்லை. வயல் நிலம் இல்லாதவர்களுக்கு விதை நெல்லை வழங்கியுள்ளீர்களே என்று மீண்டும் அந்தக் கமக்கார அமைப்பின் தலைவரைக் கேட்டார். அதற்கென்ன நாங்கள் முடிவெடுத்தால் முடிவெடுத்தது தான். நீர் எங்கு வேண்டுமானாலும் போய் முறையிடும் என்று மூஞ்சியைப் பொத்தி அறையாத குறையாய் சொல்லி விட்டார்.

இனிமேல் பாவம் அவரால் என்ன செய்யமுடியும். பேசாமல் வந்துவிட் டார்.

ஏன் இந்தப் பாகுபாடு. அந்தக் கமக்கார அமைப்பில் உள்ளவர்கள் யார்? இவர்கள் இப்படியாக நடந்து கொள்ளலாமா? இத்தனையும் கேள்விப்பட்ட எனக்கு எப்படி வயலில் விதைக்க மனம் வரும்.

என்னுடன் வந்தவனும் டேய் இவ்வளவு பெரிய வயல் நிலத்தை வைத்துக் கொண்டு நெல் விதைக்காமல் இருக்கிறாயே. எத்தனை சனம் நிலமே இல்லாமல் இருக்குது தெரியுமா. பிறகு ஏன் நீ நிலத்தை வைத்துக் கொண்டு இருக்கிறாய். உந்த மானிய அடிப்படையிலான நெல் வழங்குவது, உரம் வழங்குவது போன்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு உன் செலவில் நெல்லை விதைக்க வேண்டியது தானே என்றான்.

நீ இப்பொழுதுதான் பரந்தனுக்கு வந்தனீ. இங்கே பலர் தமது செலவில் அதாவது கடன்பட்டு நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். சில பேர் தம்மிடம் இருந்த மீதி நகைகளையும் ஈடு வைத்து செய்கையில் ஈடுபட்டனர். கடைசியில் என்ன பயனை அடைந்தார்கள் இவர்கள். கடன்பட்டு விதைத்த நெல்ஸ்ல விற்க முடியாமல் அறா விலைக்கு விற்றுக் கடனை அடைக்க முடியாமல் நகைகளையும் மீட்க முடியாமல் பட்டினியால் வாடுகின்றார்கள். உந்த விவசாய அமைப்பு அவர்களுக்கு என்னத்தை செய்தது. விதைத்த




நெல்லையாவது விலை நிர்ணயம் செய்து விதைத்தவர்கள் பாதிக்காத வகையில் விற்பனையில் ஈடுபட்டுக் கொஞ்சமேனும் இலாபம் பெற வழி அமைத்துக் கொடுக்கலாமே. அதைவிட்டு விட்டு இடைத்தரகர்கள் இலாபம் அடையும் விதத்தில் பார்த்துக் கொண்டு இருக்குதே. விவசாய மக்களுக்கு எப்பதான் விமோசனம் வருமடா என்று சொல்லிவிட்டு வெயில் ஏறிவிட்டது வா போவோம் என்று சொல்லிவிட்டு என்னுடைய வயல் நிலத்தை விட்டு வெளியேறினேன். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன். என்னுடைய வயல் நிலங்களில் எப்போதுவிதைப்பு நடக்குமோ என்று எனக் குள்ளே நினைத்துக் கொண்டு ஆனையிறவுக் காற்று வெளியில் பழையதை நினைத்து பெருமூச்சு விட்டுக் கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

கணபதி துணை
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
மஹோற்சவம் - 2011
31.05.2011

செவ்வாய்க்கிழமை
திருமஞ்சம்
மாலை 07.00 மணி
சுவாமி வீதியுலா இடம்பெறும்
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
www.inuvilinfo.com இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகள் பட்டியலின் குளறுபடி குறித்து இந்தியாவிடம் விளக்கம் கோருகிறது பாகிஸ்தான்

## மத்திய அரசை சாடுகின்றன எதிர்க்கட்சிகள்

இஸ்லாமாபாத்,மே.31

தங்களிடம் அளிக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகள் பட்டியலின் இப்போதைய நிலை குறித்து இந்தியாவிடம் விளக்கம் கோரியுள்ளது பாகிஸ்தான்.

இந்தியாவால் தேடப்படும் 50 பயங்கரவாதிகள் பெயர் அடங்கிய பட்டியல் பாகிஸ்தானிடம் சில மாதங்களுக்கு முன்பு அளிக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் உள்ளவர் களை விரைவில் பிடித்து இந்தியாவிடம் ஒப்படைக்குமாறும் பாகிஸ்தானுக்கு நெருக்குதல் அளிக்கப்பட்டு வந்தது.

இந்த அந்தப் பட்டி யலில் இடம் பெற்றுள்ளவர் களின் பெயர்கள் சமீபத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. அதில் இடம்பெற்றிருந்த இருவர் இந்தியாவிலேயே இருப்பது தெரியவந்தது.

அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்த மும்பைத் தொடர் குண்டுவெடிப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவர் தாணேயில் தொழில் செய்து வருவதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. இதையடுத்து அந்தப் பயங்கரவாதிகள் பட்டியல் குறித்து சர்ச்சை எழுந்தது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு மீது எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தின.

பயங்கரவாதிகள் பட்டியல் தயாரிப்பில் ஏற்பட்ட குளறுபடி மோசமானது. பாகிஸ்தான் இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு பட்டியலில் உள்ள மற்றப் பயங்கரவாதிகளும் தங்களது நாட்டில் இல்லை என்று ஏமாற்ற முயலலாம். இதற்கு இந்தியாவே வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

பயங்கரவாதிகள் பட்டியலில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக இந்தியாவில் கடும் சர்ச்சை ஏற்பட்டாலும் இது குறித்து பாகிஸ்தான் எவ்விதக் கருத்தும் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து மௌனமாக இருந்து வந்தது.

இந்த நிலையில் இந்தியா அளித்த பயங்கரவாதிகள் பட்டியலில் ஏற்பட்ட குளறுபடி குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெஹ்மினாவிடம் செய்தியாளர்கள் சனிக்கிழமை கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், இந்தியா எவ்வித கோரிக்கையை வைத்தாலும் அதை பாகிஸ்தான் தீவிரமாக எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கிறது. அந்தநாடு அளித்த பயங்கரவாதிகள் பட்டியலையும் தீவிரமாகவே எடுத்துக் கொண்டுள்ளது.

இந்தியா அளித்த பயங்கரவாதிகள் பட்டியலில் ஏற்பட்டுள்ள குளறுபடி குறித்து பாகிஸ்தான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அந்தப் பட்டியலின் இப்போதைய நிலை குறித்து அந்த நாடுதான் தெளிவுபடுத்த வேண்டும் என்றார்.

இதனிடையே, இந்தியா அளித்த பயங்கரவாதிகள் பட்டியலின் குளறுபடி குறித்து தகவல் வெளியானதுமே அந்தப் பட்டியலை பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் நிராகரித்துவிட்டதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நேட்டோ தாக்குதலில் 52 பேர் பலி

ஆப்கானிஸ்தானின் தென் பகுதி மாகாணம் ஒன்றில் 'நேட்டோ' விமானப் படைகள் நடத்திய குண்டுவீச்சில், பொதுமக்கள் உள்ளிட்ட 52 பேர் கொல்லப்பட்டதாக அந்தநாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின், ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளது. அதைத் தடுக்கும் வகையில் சந்தேகத்துக்குட்பட்ட இடங்களில் 'நேட்டோ' விமானப் படைகள் குண்டுகளை வீசித் தாக்கி வருகின்றன.

ஆப்கனின் ஹெல் மாண்டு என்ற தென்பகுதி மாகாணத்தில் நடந்த குண்டு வீச்சில், பெண்கள் உட் பட 14 பேர்பலியாகினர். இம் மாகாணத்தின் நவ்ஜாத் மாவட்டத்தில் உள்ள அமெரிக்காவின் கடற்படை வீரர்கள் தளம் ஒன்று, ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகள் சிலரால் தாக்கு தலுக்குள்ளானதை அடுத்து, 'நேட்டோ' விமானப் படைகள் குண்டு வீச்சைத் தொடக்கின.

# ஜெனரல் மிலாடிக் கைதானதைத் தொடர்ந்து செர்பியாவில் போராட்டம் வெடிக்கும் அபாயம்

போஸ்னியாவின் முன்னாள் ராணுவ தலைவர் ராட்கோ மிலாடிக் கைது செய்யப்பட்டதை கண்டித்து செர்பியாவில் திடீர் போராட்டம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு போராட்டத்தை செர்பிய தீவிரவாத கட்சியினர் நடத்துகிறார்கள். பெல்கிரேட்டில் நடைபெறும் இந்த எதிர்ப்புப் போராட்டம் அமைதியாகவே இருக்கும் என போராட்டக்காரர்கள் கூறியுள்ளனர். இருப்பினும் போராட்டத்தின் போது விபரீதங்கள் நிகழலாம் என செர்பியாவில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள் ளது.

இதே போன்ற எதிர்ப்பு பேரணி கடந்த 2008ஆம் ஆண்டு போஸ்னியத் தலைவர் ரவோவன் கராடிசிக் கைது செய்யப்பட்ட போதும் ஏற்பட்டது. இந்த போராட்டத்தின்போது வன்முறை வெடித்தது.

போர் குற்ற நிகழ்வுகளுக்காக ஜெனரல் மிலாடிக் கைது செய்யப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப்படுகிறார். தனது ஆதரவாளர்கள் அமைதி காக்க வேண்டும் என்று மிலாடிக் வேண்டுகோள் விடுத்துள்ளார் என அவரது வழக்கறிஞர் தெரிவித்தார்.

சிரப்னிகா பகுதியில் 7 ஆயிரத்து 500 முஸ்லிம் ஆண்களை கொலை செய்தது தொடர்பாக மிலாடிக் மீது குற் றம் உள்ளது. கடந்த 1995 ஆம் ஆண்டு அவர் மீது முறைப் படியான போர்க் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

மிலாடிக்கை தங்கள் தேசிய கதாநாயகனாக சில செர்பியர்கள் கருதுகிறார்கள். மிலாடிக் காலினோவிக் கிராமத்தில் பிறந்தார். அந்த கிராமத்திலும் போராட்டம் ஏற்பட்டதாக செர்பிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திப்பு....



துருக்மெனிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கன் அதிபர் ஹமீத் ஹர்சாய் (இடது) தலைநகர் ஆஸ்காபத் நகரில் அதிபர் குர்பன்குலிபெர்டி முகமெதோவ்வை சந்தித்தார்.

# ஆப்கனில் பொதுமக்கள் உயிரிழப்பு மன்னிப்புக் கோரியது நேட்டோ படை

காபூல், மே 31

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போர் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அங்கு ஸ்திரத்தன்மை மற்றும் அமைதி ஏற்படாத வகையில் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறார்கள்.

அங்கு பொதுமக்களை பாதுகாக்கவும் அமைதி நிலையை ஏற்படுத்தவும் பன்னாட்டுப் படைகள் முகாமிட்டுள்ளன. இந்த கூட்டுப்படை முகாமில் அமெரிக்கா, கனடா, ஜேர்மன் படைகள் உள்ளன.

தலிபான் தீவிரவாதிகளை கொல்வதற்காக பன்னாட்டுப் படைகள் ஹெல்மாண்ட் மாகாணத்தில் வான்வழித் தாக்குதலை நடத்தின. இந்த தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்ட னர் என ஹர்சாய் குற்றம் சாட்டினார்.

இறந்தவர்களில் 9 பேர் அப்பாவி மக்கள் ஆவார்கள் என சர்வதேசப்படை தெரிவித்துள்ளது. பொது மக்கள் கொல்லப்பட்ட நிகழ்வுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை பன்னாட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு சர்வதேச பாதுகாப்பு உதவிப்படை மேஜர் ஜெனரல் ஜான் மூலன் அறிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தென்மேற்கு பிராந்தியமான ஹெல்மாண்ட் பகுதியில் நடந்த வான்வழித் தாக்குதலில் அப்பாவி மக்கள் இறந்ததற்கு வேதனை அடைகிறோம். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு எங்களது இரங்கலைத் தெரிவிக்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்வதை அமெரிக்காவும் நேட்டோ படைகளும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் எச்சரித்ததை தொடர்ந்து பன்னாட்டு படைகளின் மேஜர் ஜெனரல் மன்னிப்பு கோரியுள்ளார்

# போரை முடிவுக்குக்கொண்டுவரும் நோக்குடன் தென்னாபிரிக்க ஜனாதிபதி திரிப்போலி விரைவு

திரிப்போலி, மே 31

லிபியாவில் நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டு வர தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாகப் சுமா திரிபோலி செல்கிறார். போர் நிறுத்தம் மற்றும் பேச்சுக்காக இந்த பயணத்தை மேற்கொள்கிறார்.

லிபியாவில் கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் கேணல் கடாபிக்கு எதிராகப் புரட்சிப் போராட்டம் வெடித்துள்ளது. இந்த போராட்டத்தை ஒடுக்குவதற்கு லிபியா ராணுவம் காட்டு மிராண்டித் தனமாக சுட்டு வருவதில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

லிபியா மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள ஐ.நா பாதுகாப்பு சபை நேட்டோ படைகளை அங்கு அனுப்பியுள்ளது. பன்னாட்டுப் படைகள் லிபியா தலைநகர் திரிபோலியில் கடாபி வீட்டுக்கு அருகே குண்டு மழைகளை பெய்து வருகின் றன.

வெடிகுண்டுகள் தாக்குதலில் சிக்காமல் இருக்க கடாபி மருத்துவமனையில் பதுங்கி இருக்கலாம் என்ற தகவலும் வெளியாகி உள்ளது.

கடாபி கடந்த 42 ஆண்டுகளாக லிபியாவில் சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகிறார். அவரை பதவிவிலக்க வேண்டும் என்பதில் அங்குள்ள மக்களும் மேற்கத்திய நாடுகளும் விரும்புகின்றன.

தென்னாபிரிக்க ஜனாதிபதி சுமா திரிபோலிக்கு முதன் முறையாக கடந்த ஏப்ரல் மாதம் சென்றார். அந்தப் பயணத்தின் போது உரிய பலன் கிடைக்கவில்லை.

லிபியாவில் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்ப்பதற்காகவே இந்தப் பயணத்தை மேற்கொண் டுள்ளார் என ஆபிரிக்க ஒன்றியத்தின் செய்தித் தொடர்பாளர் நௌரேடின் மெஸ்னி தெரிவித்தார்.

லிபியாவின் பெங்காசி நகரம் போராட்டக்காரர்களின் ஆதிக்க பகுதியாக உள்ளது. அங்கு போராட்டக்குழுத் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் போராட்டம் தொடங்கி சனிக்கிழமையுடன் 100 நாள்கள் ஆகின்றன எனக் குறிப்பிட்டார். கடாபி பதவி விலக வேண்டும் என ரஷ்யா வும் தற்போது கூறி இருப்பதை அவர் வரவேற்றார்.

# ஹெட்லியின் கருத்தை மறுக்கிறார் கிலானி

லாகூர்,மே31

மும்பை தாக்குதல் தொடர்பான தீவிரவாதி ஹெட்லி கூறியதற்கு பாகிஸ்தான் பிரதமர் கிலானி மறுப்பு தெரிவித்துள்ளார். அதாவது, சிக்காகோ நீதிமன்ற விசாரணையின் போது ஹெட்லி, தமது தந்தை 2010இல் இறந்தபோது கிலானி இறுதிச் சடங்கில் கலந்து கொண்டதாகவும் தனது குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவித்ததாகவும் கூறியிருந்தார்.

அதனை பாகிஸ்தான் பிரதமர் கிலானி மறுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமா அரசின் மிகப்பெரிய ஊழல் விரைவில் அம்பலத்துக்கு வரும்

## அரசியல் நிபுணர் எச்சரிக்கை

லண்டன், மே 31

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அரசின் முதலாவது மிகப் பெரிய ஊழல் விரைவில் வெளிப் படப் போவதாக அரசியல் நிபுணர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடக்க உள்ளது. இந்தநிலையில் அந்தத் தேர்தலுக்கு முன் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் அதிபர் ஒபாமா நிர்வாகத்தில் நடந்த மிகப்பெரிய ஊழல் ஒன்று வெளியுலகுக்குத் தெரியவரும் என்று பிரண்டன் நைஹான் என்பவர் தெரிவித்துள்ளார்.

பிரண்டன் நைஹான் அமெரிக்காவில் அரசியல் நிபுணராகவும் ஊடக விமர்சகராகவும் செயல்பட்டு வருகிறார். இவர் 1977 முதல் 2008 வரையிலான அமெரிக்க அதிபர்களின் ஊழல்கள் குறித்து ஆராய்ச்சி செய்து வருகிறார். அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் செயற்பட்டு வரும் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் இப்பணி யை மேற் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: அரசியல் மற்றும் ஊடகத் துணையுடன் அதிகார வர்க்கத்தின் மேல் மட்டத்தில் நிகழும் தவறான நடவடிக்கை கள் தான் ஊழல்.

அமெரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி ஒபாமாவின் ஊழல் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் வெளியுலகுக்குத் தெரியவரும். அமெரிக்காவின் மிகச் சில அதிபர்கள் தாங்கள் ஆட்சியில் நீடிப்பதற்காக ஊழலைத் தவிர்த்தனர்.

இதை அதிபர்கள் பற்றிய என்னுடைய ஆராய்ச்சியில் நான் கண்டறிந்தேன். அந்த வகையில் ஒபாமா மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர். ஒபாமா நிர்வாகத்துக்கு ஆதரவாக இல்லாத ரிபப்ளிகன் கட்சியின் ஒரு சிலரின் ஆதரவுடன் நான் எனது ஆய்வை முடித்துள்ளேன்.

தங்கள் ஆட்சியில் முதன் முறையாக ஊழல் குற்றச்சாட்டுகளைச் சந்தித்த ரொனால்ட் ரீகன் மற்றும் பில்கிளிண்டன் ஆகியோரைப் போல ஒபாமாவும் வீழ்ச்சியடைவார். இவ்வாறு பிரண்டன் நைஹான் தெரிவித்தார்.

# பின்லேடனுடன் தொடர்புடைய இரு தலிபான் தீவிரவாதிகள் கைது

ஆப்கானிஸ்தானில் எஸ்.ஏ. எஸ். சிறப்புப் படைபிரி வினர் நடத்திய அதிரடி வேட்டையில் தலிபான் தீவிரவாத இயக்கத்தின் 2 தலைவர்கள் பிடிபட்டனர். இவர்கள் அல் குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் பின்லேடனுடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள். பிடிபட்ட இருவரும் எதிர்த்தாக்குதல் நடத்தாமல் சரண் அடைந்ததாக சிறப்புப் படையினர் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் படைகளின்களின் மீது நடந்த பல தாக்குதல்களுக்கு இந்த இரு தலிபான் தலைவர்களுக்கும் தொடர்பு உண்டு.

தலிபான் தலைமையகமான குவெட்டா சுரா அமைப்பின் உறுப்பினர்களாகப் பிடிபட்டவர்கள் தலிபான் தீவிரவாதிகளான ரகுமான் மற்றும் முகமது ஆகிய இருவருமாவர். அவர்களுடன் வந்த 3 உதவியாளர்களும் கைதுசெய்யப் பட்டனர். 128 ஆயிரம் பவுண்ட் மதிப்பு உள்ள 80 கிலோ பதப்படுத்தப்படாத போதை மருந்தும் அவர்களிடம் இருந்து பறி முதல் செய்யப்பட்டது.

எஸ்.ஏ.எஸ் வீரர்கள் நடவடிக்கைக்கு ஆப்கா னிஸ்தான் தேசிய ராணுவம் உதவியது. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் கூட்டணிப்படைகள் ஆப்கானிஸ்தானில் ஏராளமான தலிபான் தலைவர்களை கொன்றதுடன் பலரை கைதும் செய்தன. அப்போது பாகிஸ்தான் எல்லை வழியாகத் தப்பியவர்களே ரகுமானும், முகமதுவும் என்றனர்.

## அரசியல் நிர்ணய சபையின் காலம் நீடிப்பு

காத்மாண்டு, மே 31

நேபாள நாட்டில் அங்கு நிலவும் சூழ்நிலையைக் கருதி அரசியல் நிர்ணய சபையின் காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதாவது கடந்த மே மாதம் 28 திகதியுடன் அரசியல் நிர்ணய சபையின் காலம் முடிந்தது. இந்நிலையில் ஒருங்கிணைந்த நேபாள கம்யூனிச கட்சி (மாவோயிஸ்ட்), நேபாள காங்கிரஸ் மற்றும் நேபாள கம்யூனிச கட்சி (ஒருங்கிணைந்த மார்க்ஸிட் லெனினிஸ்ட்) ஆகிய கட்சிகளும் இதற்கு சம்மதித்தன. அங்கு அமைதி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் புதிய அரசியல் நிர்ணய சபையை உருவாக்கவும் மூன்று மாதத்துக்கு கால நீடிப்புச் செய்யப் பட்டுள்ளது.

இந்தநிலையில் நேபாளப் பிரதமர் ஜலாநத்கணல் பதவியை ராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் புதிய அரசியல் நிர்ணய சபை உருவாக்கப் பட்ட பின்னரே அவர் ராஜினாமா செய்வார் எனத் தெரிகிறது.

பதவியேற்பு....



நைஜீரியா நாட்டின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட குட்லன் ஜொனாதனின் (இடது) பதவியேற்பு நிகழ்ச்சியில் செனகல் நாட்டு அதிபர் அப்தோலாயிவடே உட்படப் பல்வேறு நாட்டு அதிபர்கள் கலந்து கொண்டனர்.

## உளவு பார்த்த ஈரான் அதிகாரி கைது

கெய்ரோ, மே31

எகிப்தில் ஹோஸ்னி முபாரக் அதிபர் பதவியில் இருந்து விலகியபின், அந் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஈரான் அரசுக்கு உளவறிந்து சொன்னதாக, ஈரான் தூதரக அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எகிப்தில் உள்ள ஈரான் தூதரக அதிகாரி காசிம் அல் உசேனி என்பவர், முபாரக் வெளியேற்றத்துக்குப்பின், எகிப்து அரசியலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் குறித்து உளவறிந்து தகவல்கள் அளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கடந்த 1979 இல், இஸ்ரேல் உடன் எகிப்து உறவை ஏற்படுத்திக் கொண்டதனால் ஈரான், எகிப்துடனான தனது உறவை துண்டித்துக் கொண்டது. அதன் பின், இரு தரப்புக்கும் இடையில் தூதரக ரீதியாக முழுமையான உறவுகள் பேணப்பட வில்லை. எனினும், குறைந்த அளவிலான தூதரக செயல்பாடுகளை இரு நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன.

# ஆப்கன் எல்லையில் பாகிஸ்தான் விமானப்படை குண்டு வீச்சு

காபூல், மே 31

ஆப்கன் எல்லைப் பகுதியில் பாகிஸ்ான் விமானப் படைகள் சரமாரியாகக் குண்டு மழை பொழிந்தன. பாகிஸ்தான் அபோதா பாத்தில் பதுங்கியிருந்த பின்லேடன் அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இந்தகைய தாக்குதல்கள் தொடர்கின்றன.

பின்லேடன் தாங்கியிருந்தன் மூலம் தீவிரவாதி களுக்கு பாகிஸ்தான் புகலிடம் கொடுத்து வருவது உறுதி செய்யப் பட்டது. இந்த நிலையில் மேலும் 5 முக்கிய தீவிரவாதி களின் பட்டியலையும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கொடுத்துள்ளதுடன் அவர்களை வேட்டையாட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தக் கடும் நெருக்கடியைத் தொடர்ந்து பாகிஸ்தான் தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள வரிசிஸ்தான், ஒரக்ஷாய் மலைப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். அப் பகுதியில் பாகிஸ்தானின் விமானப் படைகள் சரமாரியாகக் குண்டு வீச்சுக்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் ஒரக்ஷாய் பகுதியில் மெகமூத் ஷாய் என்ற இடத்தில் பதுங்கியிருந்த 26 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அத்துடன் அவர்களின் மறைவிடமும் குண்டு வீசி அழிக்கப்பட்டது. இந்தத் தகவலை ஒரக்ஷாய் அதிகாரி ஷேர்பகதூர் கான் தெரிவித்தார்.

இதற்கிடையே சமீபத்தில் கராச்சியில் உள்ள மெக்ரான் கப்பற்படை விமானத் தளத்தில் நடந்த தாக்குதலில் ஈடுபட்ட 5 தீவிரவாதிகளை பாகிஸ்தான் கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஏமனின் ஸின்ஜிபார் நகரம் அல்குவைதா வசம்

சனா, மே 31

ஏமனில் அதிபர் அலி அப்துல்லா சலேஹ் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தெற்கு ஏமனில் அபயன் மாகாணத்தில் உள்ள ஸின்ஜிபார் நகரைத் துப்பாக்கி ஏந்திய சுமார் 200 பேர் வரையான தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

அல்குவைதா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளுடன் 2 நாள்கள் சண்டை நடைபெற்றதாகவும் இறுதியில் பாதுகாப்புப் படையினர் 16 பேர் உயிரிழந்ததாகவும் பின்னர் சுமார் 200 பேர் அடங்கிய துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகளின் கும்பல் நகரத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் ஏமன் அரசின் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் [illegible] தெரிவித்தார்.

நகரில் உள்ள முக்கிய சிறையை அவர்கள் திறந்து விட்டு கைதிகளைத் தப்ப விட்டுவிட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரிகளின் கவனக் குறைவே இந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்கு காரணம் என்றும் இது மிகவும் துரதிருஷ்டவசமானது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

பெரும்பாலான உள்ளூர் மக்கள் அருகில் உள்ள முக்கிய நகரான ஏடனுக்குச் சென்று விட்டனர். இது குறித்து ஸின்ஜிபார் நகரில் இருந்து வெளியேறிய மக்கள் சிலர் கூறுகையில், ''வெள்ளி, சனி ஆகிய நாள்களில் இருதரப்புக்கும் இடையே சண்டை நடந்தது. சரணடைந்த அரசுப் படையினரைக் கூட விடாமல் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். நகரின் சில பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர் சனிக்கிழமை காலையே கடைகளைத் திறக்குமாறு பயங்கரவாதிகள் ஒலி பெருக்கியில் அறிவித் தனர்.

ஆனால் பயத்தின் காரணமாகப் பெரும்பாலான மக்கள் வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. பலர் ஏடன் நகருக்கு தப்பி வருவதிலேயே கவனம் செலுத்தினர். இப்போது ஸின்ஜிபார் நகரைக் கைப்பற்றி இருப்பது அல்குவைதாப் பயங்கரவாதிகள்தான்'' என்றனர்.

இந்த நிலையில் ஸின்ஜிபார் நகரைப் பயங்கரவாதிகள் கைப்பற்றி இருப்பதற்கு அதிபர் அலி அப்துல்லா சலேஹ்தான் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஸின் ஜிபார் நகரத்தை பயங்கரவாதிகள் இப்போது கைப்பற்றியுள்ளனர். இதன் மூலம் அல் குவைதா அமைப்பு ஏமனில் வலுப்பெற வாய்ப்பு ஏற்படும். இதனால் ஏமன் உள் விவகாரத்தில் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கும் இது வழிவகுத்து விடும் என்று எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நல்லகண்ணு வலியுறுத்து



சென்னை, மே 31

ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் ஐநா அறிக்கை குறித்து மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ் மக்கள் இணைந்து நின்று குரல் கொடுத்து கொடுங்கோல் ஆட்சியை தனிமைப்படுத்தி ஈழத் தமிழர்களுக்கு வாழ்வு கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சாவூரில் தமிழ்வெளி இலக்கிய அமைப்பு சார்பில், இலங்கையில் ஈழத் தமிழர்களை இனப் படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக் கோரி ஐ.நாவை வலியுறுத்தி கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:

இந்திய ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர்களைப் பற்றி கவலைப் படுவதில்லை. ஈழத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள தாய்த் தமிழர்களுக்கும் பல வேறு பிணைப்புகள் உண்டு.

இந்தியாவுக்குப் பின்பு சுதந்திரம் பெற்ற இலங்கை ஆரம்பத்தில் இருந்தே அங்குள்ள ஈழத் தமிழர்களை அழிப்பதில் முனைப்புக் காட்டி வருகிறது. அவர்களுக்கான உரிமைகளை மறுத்தோடு அவர்களை அழிக்கவும் செய்து வருகிறது.

இலங்கையில் நடைபெற்ற போர் குறித்து ஐக்கிய நாடு சபையின் அறிக்கை வெளி யாகி இருக்கின்ற இந்த சமயத் தில், கடந்த காலங்களில் தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் ஈழத் தமிழர்களுக்காக என்ன செய்தன என்பதை திரும்பிப் பார்க்க வேண்டும்.

தமிழர்களுக்குச் சொந்தமான கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்ததால், இன்று வரை தமிழக மீனவர்கள் பாதிக்கப் படுகின்றனர். இலங்கை அரசு நடத்திய சூதாட்டத்தில் தமிழர்கள் பலியாகி விட்டார்கள். இந்திய ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று அவர் கூறினார். (வ)

# எம்.ஜி.ஆரிடம் இருக்கின்ற அரசியல் சக்தி ரஜனியிடம்



வைகோ தெரிவிப்பு

சென்னை, மே 31

உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள நடிகர் ரஜனி விரை வில் பூரண நலம் பெறுவார். எம்.ஜி.ஆருக்கு இருக்கின்ற அரசியல் சக்தி ரஜனியிடம் இருந்தது. இப்போதும் இருக்கிறது - என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

ரஜனிகாந்த் கடந்த 27 ஆம் திகதி இரவு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்னையில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார்.

ஆசியாவிலேயே மிகவும் சிறந்த மருத்துவமனை எனக் கருதப்படும் சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் ரஜனிகாந்த் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சென்னையில் ம.தி.மு.க. 18 ஆம் ஆண்டு தொடக்க விழா 28 ஆம் திகதி மாலை சைதைப்பேட்டையில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வைகோ பேசியவை வருமாறு-

நடிகர் ரஜனி சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருக்கிறார். அவர் சிங்கப்பூர் செல்லும் முன்பு பேசிய ஓடியோவை அவரது மகள் வெளியிட்டிருந்தார். அந்த ஓடியோவை நான் கேட்டேன். அந்த ஓடியோவில், நான் பணம் வாங்கிக்கொண்டு நடிக்கிறேன். அதற்கே தன் மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர்கள் என்று ரஜனி கூறுகிறார். இப்படிக் கூறுவதற்குப் பெருந்தன்மை வேண்டும்.

நடிகர் ரஜனி விரைவில் பூரண நலம் பெறுவார். எம்.ஜி.ஆருக்கு இருக்கின்ற அரசியல் சக்தி ரஜனியிடம் இருந்தது. இப்போதும் இருக்கிறது - என்றார். (வ)



தமிழக முதல்வர் ஜெயலலிதாவை, மாநில தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள சோ.அய்யர் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தீவிரவாத அமைப்புகளை ஒழிக்காவிட்டால் அந்த நாட்டுடனான உறவுகள் பாதிக்கப்படும்

## பாகிஸ்தானுக்கு அந்தோனி வலியுறுத்து

தீவிரவாத அமைப்புகளை பாகிஸ்தான் முற்றாக அழிக்காத வரையில் அந்த நாட்டுடன் நிரந்தரமான ஒத்துழைப்பு என்பதற்கு வழியே இல்லை. எனவே உறவு மேம்படவும் வாய்ப்புகள் குறையும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி வலியுறுத்தியுள்ளார்.

அவரது சொந்த மாநிலமான கேரளத்துக்குச் சென்று அவர் கண்ணூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமது நாட்டில் செயற்பட்டு வரும் தீவிரவாத முகாம்களை பாகிஸ்தான் கண்டிப்பாக அழிக்க வேண்டுமென அங்கு 42 பயங்கரவாத முகாம்கள் செயற்பட்டு வருவது மிகவும் கவலையளிக்கும் விடயம் என்றார்.

எனினும் பாகிஸ்தானுடன் பேச்சு நடைபெற்று வருவது குறித்து கருத்துத் தெரிவித்த அந்தோனி இந்திய பாதுகாப்புத்துறை செயலர்கள் இன்றும் நாளையும் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துகின்றனர்.

பாகிஸ்தானுடன் நல்லுறவு வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். இதற்கு பேச்சு நடத்துவதுதான் ஒரே வழி. பேச்சு நடத்தாவிட்டால் எந்தவித முன்னேற்றமும் இருக்காது. நாம் நட்பு நாடுகளை மாற்றிக் கொள்ள முடியும்.

ஆனால் அண்டை நாடுகளை மாற்றிக் கொள்ள முடியாது. எனவே அண்டை நாடுகளுடன் நட்புறவுடன் இருக்கவே இந்தியா எப்போதும் விரும்புகிறது. அவர்களுடன் நமக்கு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பேச்சு நடத்தி அதனைத் தீர்த்துக் கொள்வதே சாதுர்யமான செயல். என்றார் அந்தோனி. (வ)

# அ.தி.மு.க. அரசின் சா(சோ)தனைகள் ம.தி.மு.கவின் சுவரொட்டியால் பரபரப்பு

சென்னை, மே 31

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்று இரண்டுவார காலம் ஆன நிலையில், தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் அ.தி.மு.க. அரசின் சா(சோ)தனைகள் என்ற பெயரில் ம.தி.மு.கவினர் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர். இந்தச் சுவரொட்டி விவகாரம் தூத்துக்குடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சுவரொட்டியில், ''சட்டசபை இடமாற்றம் ரூபா 1100 கோடி நட்டம்'', ''சமச்சீர் கல்வித் திட்டம் இரத்து ரூபா 500 கோடி இழப்பு'', ''ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர் வீட்டில் கொள்ளை சட்டம், ஒழுங்கு - சந்தி சிரிப்பு'', ''சட்ட, மேல்-சபை முடக்கம் சர்வாதிகார ஆட்சியின் துவக்கம்'' - இவ்வாறு வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.




இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஜோயல், மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், அ.தி.மு.கவின் சர்வாதிகாரப் போக்கு ஆரம்பித்துள்ளது. ஆட்சிப் பொறுப் பேற்று ஒருவார காலத்திற்குள்ளாகவே, ஒரு சர்வாதிகார ஆட்சிதான் கொடுப்பேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு சட்டசபை இடமாற்றம், சமச்சீர் கல்வி ரத்து என்று ஆயிரம் கோடி ரூபாவான மக்களின் வரிப்பணத்தை இன்றைக்கு பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனை மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் சுவரொட்டி ஒட்டியுள்ளோம் என்றார். (வ)

# இந்தியக் கடல் எல்லையில் இலங்கை மீனவர்கள் கைது

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்த 10 இலங்கை மீனவர்களை கிழக்கு கடலோரக் காவல்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து 2 படகுகளும் கைப்பற்றப்பட்டன. காகிநாடாவுக்கு 120 கிலோமீற்றர் தொலைவில் அவர்கள் கைது செய்யப்பட்டதாக கடலோர காவல்படையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

2 படகுகளிலும் 5 ஆயிரம் கிலோ மீன்கள் இருந்தன. அந்த படகுகள் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக காகிநாடா துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

2011 இல் இலங்கை மீனவர்கள் இவ்வாறு இந்திய கடல் எல்லைக்குள் வந்து பிடிபடுவது இது 8ஆவது முறையாகும். இதுவரை 17 படகுகள் 84 நபர்கள் மற்றும் 18 ஆயிரத்து 900 கிலோ மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கடலோரக் காவல்படையின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# பிரதமர் மிக நல்ல மனிதர்; சோனியாதான் பிரச்சினை

## அன்னா ஹசாரே

பிரதமர் மன்மோகன்சிங் நல்ல மனிதர். ஆனால் சோனியா காந்தி ரிமோட் கென்ட்ரோல் ஆக இருந்து கொண்டு அவரை ஆட்டிப் படைக்கிறார். சோனியா காந்திதான் பிரச்சினைகளை உருவாக்கி வருகிறார். பிரதமர் மன்மோகன்சிங் கெட்ட மனிதர் அல்ல. ஆனால் பிரச்சினைகளை உருவாகுவதற்கு ரிமோட் கன்ட்ரோல் தான் காரணம் என்று அன்னா ஹசாரே கூறியுள்ளார்.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த காந்தியவாதியான அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிராக நாடு முழுவதும் பிரசாரம் செய்து வருகிறார். நேற்று முன்தினம் பெங்களூரில் ஊழலுக்கு எதிரான அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் அன்னா ஹசாரே கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

எந்த அரசாக இருந்தாலும் மக்கள் சக்தி தான் பலம் வாய்ந்தது என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. ஊழல்வாதிகளை விசாரிக்கும் லோக்பால் சட்ட மசோதாவை வருகிற ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதிக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

இல்லையெனில் புதுடெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் மீண்டும் சாகும்வரை உண்ணா விரத போராட்டத்தை தொடங்குவேன். இதற்கான கர்நாடக மக்கள் சிறை நிரப்பும் போராட்டத்தை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊழலுக்கு எதிராக நான் பிரசாரம் செய்து வருவதால் இது வரை 6 அமைச்சர்கள் ராஜினாமா செய்துள்ளனர். இந்த 6 பேரும் என்னை பழிவாங்கத் துடிக்கிறார்கள். ஆனால் கறைபடியாதவன் என்பதால் அவர்களால் என்னை நெருங்க முடியவில்லை. இவ்வாறு அன்னா ஹசாரே கூறினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவைக் கண்டித்து ஜீன் 6 இல் புரட்சி பாரதம் கட்சி ஆர்ப்பாட்டம்

சென்னை,மே31

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்து வரும் ஜூன் 6ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் - புரட்சிபாரதம் கட்சி அறிவித்துள்ளது.

புரட்சிபாரதம் கட்சியின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் அமிஞ்சிக் கரையில் நடந்து. கூட்டத்துக்கு மாநிலத் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி தலைமை தாங்கினார். பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

தமிழர்களை இலங்கையில் கொன்று குவித்து இனப்படு கொலை நடத்திய போர்க் குற்றவாளி மஹிந்த ராஜபக்ஷவிற்குத் தூக்குத்தண்டனை கிடைக்க மத்திய அரசை வலியுறுத்துகிறோம். இலங்கை தமிழர்களுக்கு முழுமையான அரசியல் அங்கீகாரம் கிடைக்க இந்திய அரசு தலையிட வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்து வரும் ஜூன் 6 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

தமிழக மீனவர்கள் தினம் தினம் கொல்லப்படுவதை மத்திய அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். மீனவர்கள் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(வ)

# சிகிச்சைக்கு ரஜினியின் உடல் ஒத்துழைப்பதால் தனியான 'வார்ட்டில்' அவர் அனுமதி



உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால் தனியான நோயாளர் விடுதியில் வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், சிகிச்சைக்கு ரஜனி உடல் ஒத்துழைப்புத் தருவதாகவும் சிங்கப்பூர் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நடிகர் ரஜினிகாந்த் கடந்த 27 ஆம் திகதி அன்று இரவு மருத்துவ சிச்சைக்காக சென்னையில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார். ஆசியாவிலேயே மிகவும் சிறந்த மருத்துவமனை என கருதப்படும் சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் நடிகர் ரஜனிகாந்த் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதல் கட்டமாக மூச்சுக் குழாய் அழற்சி மற்றும் சுவாசக் கோளாறுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து தனியான நோயாளர் விடுதிக்கு ரஜனிகாந்த் மாற்றப்பட்டுள்ளார். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால் இனி தனியான நோயாளர் விடுதியில் வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், சிகிச்சைக்கு ரஜனி உடல் ஒத்துழைப்பு தருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மருத்துவர்கள் மற்றும் குடும்பத்தினர்களிடம் ரஜனிகாந்த் உற்சாகமாகப் பேசினார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இனப்படுகொலை குறித்து விவாதிக்க வைகோ பெல்ஜியத்துக்குப் பயணம்

சென்னை, மே 31

ஈழத்தமிழர் இனப்படு கொலை குறித்து ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் பங்கேற்க பெல்ஜியம் நாட்டுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ நேற்று சென்றுள்ளார்.

இதுகுறித்து அந்தக்கட்சி வெளியிட்ட அறிக்கை வருமாறு:

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு ஈழத்தமிழர் இனப்படுகொலை குறித்து விவாதிக்க ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கூட்டம் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் நகரில் இன்று நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுமாறு வைகோவுக்கு ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்பாளருமான பால் மர்பி அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் கலந்துகொள்வதற்காக வைகோ நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் சென்னை விமான நிலையத்தில் இருந்து பிரஸ்ஸல்ஸ் நகருக்கு புறப்பட்டுச் சென்றார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

## வெற்றிக்குக் காணிக்கை...



சட்டசபைத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் அவரது மனைவி பிரேமலதாவுடன் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தார்.

# காஷ்மீரில் உலகின் மிக நீளமான புதிய மலைக் குகை ரயில் பாதை

காஷ்மீர்,மே31

இந்தியாவின் வடக்கு எல்லையாகக் கருதப்படும் காஷ்மீர் மாநிலம் ஜம்மு, காஷ்மீர் பள்ளத்தாக்கு என இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிந்து இருக்கின்றன.

இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையே பிர் பஞ்சால் மலைத் தொடர் உள்ளது. ஜம்முவிலிருந்து காஷ்மீர் பள்ளத்தாக்குக்குச் செல்ல வேண்டும் என்றால் இந்த மலைத் தொடரைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.

இந்த மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட ஜவஹர் மலை குகை பாதையே இதுவரை இந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கும் பாலமாக இருந்து வருகிறது. பனிக்காலங்களில் இந்த மலைக்குகை பாதையில் அடிக்கடி வீதிப் போக்குவரத்து தடைபடும். இதனைத் தொடர்ந்து அனைத்து பருவ காலங்களையும் சமாளிக்கும் வகையில் புதிய மலைக்குகை பாதை உருவாக்கி அதன் வழியாக ரயில் பாதை அமைக்க மத்திய அரசு முடிவு செய்து அதற்கான பணியை ஆரம்பித்துள்ளது.

அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் இந்தப் பணி நிறைவு பெறும் என வடக்கு ரயில்வேயின் நிர்வாக அதிகாரி சத்தோராம் தெரிவித்துள்ளார். இந்த மலைக்குகை ரயில் பாதை கட்டி முடிக்கப்பட்டால் உலகின் மிக நீளமான ஆழமான மலைகுகை பாதைகளில் ஒன்றாக கருதப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(வ)

# ஒஸ்கார் விருதை பணம் கொடுத்து வாங்கவில்லை - ஏ.ஆர்.ரஹ்மான்

ஒஸ்கார் விருதை பணம் கொடுத்தே வாங்கினார் என்ற தன் மீதான குற்றச்சாட்டை இசையமைப்பாளர் ரஹ்மான் அடியோடு மறுத்துள்ளார். அத்துடன், ஒஸ்கார் விருதுகளை யாரும் விலை கொடுத்து வாங்க முடியாது - என்றும் தெரிவித்துள்ளார்

ஹிந்தி பட இசையமைப்பாளர்களில் ஒருவரான இஸ்மாயில் தர்பார் சமீபத்தில் நாக்பூரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது, இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் மீது சரமாரியாக பல்வேறு குற்றச்சாட்டுக்களைக் கூறினார்.

2008 ஆம் ஆண்டு வெளியான 'ஸ்லம்டாக் மில்லினர்' படத்துக்காக ஏ.ஆர்.ரகுமான் 2 விருதுகளை வாங்கியதில் சந்தேகமாக உள்ளது. விளம்பரத்துக்காக அவர் பணம் கொடுத்து இந்த விருதுகளை வாங்கியுள்ளார் என்றே நினைக்கிறேன்.

உண்மையிலேயே ஏ.ஆர்.ரகுமான் திறமை உள்ளவர் என்றால் ரோஜா அல்லது பம்பாய் படத்துக்கு ஒஸ்கார் விருது வாங்கி இருக்க வேண்டியது தானே? அவர் பணம் கொடுத்துதான் விருது வாங்கினார் என்று எனக்குத் தெரியும். - இவ்வாறு இஸ்மாயில் தர்பார் ரஹ்மான் மீது குற்றம்சாட்டினார்.

அவரிடம் செய்தியாளர்கள் ஏ.ஆர்.ரகுமான் மீது நீங்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா? எதை வைத்து இந்த குற்றச்சாட்டை சொல்கிறீர்கள் என்று கேட்டனர்.

அதற்கு இஸ்மாயில் தர்பாரால் பதில் சொல்ல முடியவில்லை. இதையடுத்து இஸ்மாயிலுக்கு பல்வேறு துறையினரும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஏ.ஆர்.ரகுமான் மீது தேவை இல்லாமல் புழுதி வாரி தூற்றக்கூடாது என்று ஹிந்திப்பட உலகத்தினர் கூறியுள்ளனர். இந்தியர்களுக்கு ஒஸ்கார் விருது மூலம் பெருமை[illegible] தந்தவர் ரகுமான். அவரை பற்றி இவ்வாறெல்லாம் பேசக்கூடாது என்று மற்றொரு இசை அமைப்பாளர் லலித் பண்டிட் கூறினார்.

# ஜெயலலிதாவின் ஆட்சிக்கு ஆதரவு வழங்குமாறு தமது கழகத்துக்கு நடிகர் விஜய் வேண்டுகோள்

எமது இயக்கம் அதி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று என்று நடிகர் விஜய் கூறியுள்ளார்.

சென்னையில் உள்ள சங்கீதா கல்யாண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடிகர் விஜய், தனது மக்கள் இயக்க நிர்வாகிகளை திடீரென சந்தித்தார். நிகழ்ச்சிக்கு மக்கள் இயக்க நிறுவுனர் எஸ்.ஏ.சந்திரசேகரன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய நடிகர் விஜய்,- ஜெயலலிதா ஆட்சி அமைய அணிலாக இருந்த காரணத்தை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்தாலும், அந்த உணர்வுகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, என் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஜெயலலிதாவின் வெற்றிக்கு முழு மூச்சோடு [illegible] தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சி அமைய, நாமும் ஓர் அணிலாக இருந்த காரணத்தை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் வெற்றி பெற்ற பல வேட்பாளர்கள் என்னைத் தொடர்பு கொண்டு, உங்களது கடுமையான உழைப்பைப் பாராட்டிய போது எனக்குப் பெருமையாக இருந்தது.

மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என்று கவியரசு கண்ணதாசன் சொன்னது போல, எமது நற்பணி மன்றங்கள் காலப் போக்கில் நற்பணி இயக்கமாக மாறியது. இலங்கை தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்தது முதல், ஏழை மாணவ, மாணவிகளுக்கு கணினி மையங்கள் ஏற்படுத்தியது வரை, பல சமூக நலப்பணிகள் செய்து எமது இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியது.

இனிமேலும் சமூக நலப் பணியை தொடர்ந்து செய்து, முதலமைச்சர் ஜெயலலிதாவின் கரத்தை வலுப்படுத்தி, ஜெயலலிதாவின் ஆசியோடு உங்களின் எதிர்காலத்தையும் ஒளிமயமாக்கிக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவேகானந்தர் சொன்னது போல வேகத்தோடும், விவேகத்தோடும் பணியாற்றுங்கள். நாளைய உலகம் உங்கள் கையில் என்று நடிகர் விஜய் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் செறிவான சாட்சியாளர்களுக்கு குறைந்த அவகாசமே

## அதேசமயம் உயர் அதிகாரிகளுக்கு அளவுக்கு மீறிய மரியாதை

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் இணக்கக்குழுவின் விசாரணைகளின் போது உயர் அதிகாரிகளுக்கு அளவுக்கு அதிகமான மரியாதை வழங்கப்பட்டுள்ளது. செறிவான சாட்சியங்களைக் கொண்டிருந்தவர்களுக்கு குறுகிய நேரமே வழங்கப்பட்டுள்ளது உண்மைகள் மற்றும் சிக்கல்கள் பற்றி சாட்சிகள் அறிந்திருந்தவைகளைக் கண்டுபிடிப்பதற்கு இவை போதியளவாக இருக்கவில்லை. அத்துடன் அப்படி செய்தமை அவர்களுக்கு மரியாதை குறைவாகவும் இருந்திருக்கும்.

இவ்வாறு ஐ.நா. நிபுணர்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

*(நேற்றைய தொடர்ச்சி)*

316. சாட்சிகளுக்கு மேலும் அதிக பாதுகாப்பை வழங்குவதற்கான 2008 இன் உத்தேச சட்டவாக்கத்தை நிறைவேற்ற முடியாமற் போனதைத் தொடர்ந்து அந்த விடயத்தில் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கான மிகக் குறைவான சட்ட அடிப்படையே இலங்கையில் உள்ளது.

**4. எல்.எல்.ஆர்.சியின் நடைமுறை**

**(ஆ) சாதகமான நடவடிக்கைகள்**

317. தனது ஆணையை நிறைவேற்றுவதில், எல்.எல்.ஆர்.சி. கொழும்புக்கு வெளியே குறிப்பாக யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயங்களை மேற் கொண்டது. ஏனைய இடங்களுக்குப் புறம்பாக, வவுனியா (மெனிக் பாம் உள்ளிட்ட), கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஓமந்தை (தடுப்புக்காவல் முகாம் உள்ளிட்ட), மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அது அமர்வுகளை நடத்தியது. கொழும்புக்கு வெளியே அது நடத்திய அமர்வுகளின் போது, குறிப்பாகப் பாதிக்கப்பட்டோரையும் உள்ளடக்கிய கணிசமான எண்ணிக்கையிலான சாட்சிகளிடம் இருந்தும் அவர்களின் அனுபவம் பற்றி நேரடியாக எல்.எல்.ஆர்.சி. சாட்சியங்களைப் பதிவு செய்தது. வடக்கிலும் கிழக்கிலும், குறிப்பாகப் பெண்களை உள்ளிட்ட கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் சாட்சியம் அளிக்க சுயமாகவே முன்வந்தமை, இலங்கையில் உண்மையைக் கண்டறியும் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான மெய்யானதொரு செயற்பாட்டின் அவசரத் தேவையை உணர்த்துவதாகவுள்ளது.

318. அவற்றின் செயற்பாட்டின் முடிவில் ஏனைய அத்தகைய ஆணைக் குழுக்கள் பொதுவாக பரிந்துரைகளைச் செய்யும் அதேவேளையில், தடுத்து வைத்தல், நீதியும் அமைதியும், பொது நிர்வாகம் மற்றும் மொழி, காணி மற்றும் ஏனைய சமூக - பொருளாதார சிக்கல்கள், வாழ்வாதார விடயங்களை உள்ளிட்ட அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டும் என அது கருதும் விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு எல்.எல்.ஆர்.சி. ஏற்கனவே இடைக்கால பரிந்துரைகளைச் செய்துள்ளது. இந்தப் பரிந்துரைகளின் வடிவமைக்கப்பட்ட, அமைச்சுக்களுக்கிடையிலான அமுலாக்கத் தொடர் நடவடிக்கை என விளக்கப்பட்டுள்ள வசதியளிப்பை வழங்குவதற்காக முகவர்களிடையிலான ஆலோசனைக் குழு என்றதோர் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட பொறித் தொகுதியொன்றை அரசு அமைத்துள்ளது.

**(ஆ) உண்மையைக் கண்டறிவதில் அல்லது புலனாய்வில் தெளிவானதோர் அணுகுமுறை இல்லாத நிலை**

319. உண்மையைக் கண்டறிவது பொறுப்புக் கூறலின் அடிப்படை அம்சமொன்றாகும். கொள்கையளவில், எல்.எல்.ஆர்.சியின் ஆணை, அது விடயத்தில் தெளிவற்றதாக இருந்தபோதிலும், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவம் தொடர்பானவற்றை உள்ளிட்ட யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் பற்றிய உண்மையைக் கண்டறிவதில் அதன் பங்களிப்பை செய்வதைவிட்டும் அதனைத் தடுக்கவில்லை. ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அப்பால், எல்.எல்.ஆர்.சியின் உண்மையைக் கண்டறியும் நிலைச்சக்திக்கான பங்களிப்பு அதன் முறைமை மற்றும் அதன் அன்றாட நடைமுறை ஆகியவற்றினால் உருவாக்கப்படுவதாகும். அதன் தீர்மானங்களின் நம்பகத்தன்மை, ஓரளவு அந்த முறைமையின் ஒளிவு மறைவற்ற தன்மையில் தங்கியிருக்கும்.

320. கிடைக்கக் கூடிய தகவலை மீளாய்வு செய்ததைத் தொடர்ந்து, உண்மையைக் கண்டறிவதற்காக அல்லது மீறல்களைப் புலனாய்வு செய்வதற்காக எல்.எல்.ஆர்.சி. பிரயோகித்த சகலதுமடங்கிய முறைமையினை குழுவுக்குத் தெளிவாய் அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது. ஏனைய நாடுகளில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுக்கள் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் மற்றும் துஷ்பிரயோகத்தின் உருமாதிரிகள் தொடர்பான இராணுவ நடவடிக்கை பற்றிய உத்தியோகபூர்வ பதிவுகளை, காவல்துறைப் பதிவுகளை மற்றும் நீதிமன்றப் பதிவுகளைப் பெற்று மீளாய்வு செய்வதை உள்ளிட்ட ஏனைய புலனாய்வு முறைகளுடன் சாட்சியங்களைப் பதிவு செய்வது ஆகியவற்றை ஒருங்கிணைத்துள்ளன. சட்ட விரோதமாகத் தடுப்புக்காவலில் வைத்திருப்பது அல்லது பாதிக்கப்பட்டோர் மீதான மோதலின் விளைவுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான குறிப்பான புலனாய்வுகள் நடத்துதல் மற்றும் காயமடைந்த மற்றும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை நம்பகமாக அறிவதற்கான முறைமைகளை அமுல்படுத்தல். அறிக்கைகள் பிரதி செய்வோர், ஆய்வாளர்கள், புலனாய்வாளர்கள், தொடர்பாடல் துறைசார்ந்த நியுணர்கள், பாலியல் வித்தியாசம் பற்றிய நிபுணர்கள் மனநோய் மருத்துவர்கள் ஆகியவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பணியாள்தொகுதியினரை அவை தொழிலில் அமர்த்தியுள்ளன, எல்.எல். ஆர்.சியைப் பொறுத்தமட்டில், அவர்களது சாட்சியம் பதியும் வேலை முக்கியமாக எழுத்துமூலமான சாட்சியங்களைப் பெற்று அவை பொருத்தமானவை என மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் சாட்சியத்தைப் பெறுவதா என்பதை ஆணைக் குழு தீர்மானிக்கும். ஐக்கிய நாடுகளுடன் நடத்திய சந்திப்பின்போது, சட்டமா அதிபர், எல்.எல். ஆர்.சியிடம் 4 ஆராய்ச்சியாளர்கள், 4 காவல்துறை உத்தியோகத்தர்கள், 4 மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் சில துணை பணியாள்கள் அடங்கிய மொத்தம் 20 பேர்களைக் கொண்ட பணியாள் தொகுதி ஒன்று இருப்பதாக கூறியதோடு, யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் மிகவும் இயல்புக்கு மாறான நிலைமை தொடர்பாக உண்மையைக் கண்டறிவதற்குத் தேவையான மூலங்களைவிட அது மிகக் குறைவாகவே உள்ளது. மேலும், எல். எல்.ஆர்.சி. அதன் நடைமுறையில், யுத்தம் மற்றும் மீளிணக்கப்பாட்டின் சர்ச்சைக்குள்ளாகும் மற்றும் அவதானம் குறைவான வரலாற்று அம்சங்களின் பகுப்பாய்வில் இலேசாக ஈடுபடுவதோடு யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது புரியப்பட்ட மீறல்கள் மீதான அதன் பாத்திரம் தொடர்பாக இருமனப் போக்கையும் நிச்சயமற்ற நிலைமையையும் பிரதிபலிக்கிறது.

321. குறிப்பிட்டது போன்று, நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் சாட்சியங்களை எல்.எல்.ஆர்.சி. பெற்றுவந்துள்ளது. சாட்சியங்களை வழங்குமாறு அழைப்பு விடுத்தல் மற்றும் சாட்சிகளைத் தெரிவு செய்தலுக்கான அதன் முறைமை தெளிவற்றதாகவுள்ள தோடு அது ஒழுங்கான தொன்றல்ல என்ற கருத்தைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. பாதிக்கப்பட்டோரைப் பொறுத்தவரை, உண்மையைக் கண்டறியும் முயற்சியில் சாட்சியங்கள் சுயமானதாக இருக்க வேண்டும் என்ற சர்வதேச தரங்களுடன் அது ஒத்திருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தகவலை உடையவர்கள் அல்லது பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் அதன் முன் வருவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 28**

322. எல்.எல்.ஆர்.சியின் இணையத்தளத்தின்படி, 2011 ஜனவரி இறுதியில் இருந்தவாறாக, கொழும்பில் நடைபெற்ற அமர்வுகளின் போது சுமார் 148 தனி நபர்கள் மற்றும்/ அல்லது அமைப்புக்கள் சாட்சியமளித்துள்ளன. இந்தத் தனி நபர்கள் அரசதுறையில் மற்றும் வர்த்தகம், சமூகம் அத்துடன் சிவில் தலைமைத்துவம், உயர்தொழில்சார் அமைப்புக்கள், உயர்கல்வி மற்றும் சிவில் சமூகத்தைச் சார்ந்த சேவையில் இருக்கும் மற்றும் ஓய்வுபெற்றவர்களை மேவுவதாக இருந்தது. கொழும்பில் நடைபெற்ற அமர்வுகளின்போது, குறிப்பாக ஒரு சாட்சி ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நீண்டதொரு அறிக்கையை வாசிப்பதைத் தொடர்ந்து பல மணித்தியாலங்களுக்கு ஆணையாளர்களுடன் சுமுகமான கலந்துரையாடல் நடைபெறும். குறிப்பாக ஏன் போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியில் முடிவடைந்தது என்ற தர்க்கத்துடன் கூடிய எதிர்கால மீளிணக்கப்பாடு மற்றும் வரலாறு ரீதியிலான பிரச்சினைகள் பற்றிய கேள்விகள் இந்த அமர்வுகளின் முக்கிய தொனிப்பொருளாக அமைந்தன. பரவலான பிரச்சினைகளை புரிந்து கொள்வதற்காக இந்த அமர்வுகள் முக்கியமாக மற்றும் எல்.எல்.ஆர்.சியின் அதிக நேரத்தைக் குறிப்பதாகவும் இருந்தபோதிலும், ஆயுதந்தாங்கிய மோதலின் இறுதிக்கட்டங்களின் போது, குறிப்பாக அரசு அல்லது தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட்டிருக்கலாம் என்ற மீறல்கள் பற்றி அவை மிகக் குறுகிய விளக்கத்தையே வழங்குகின் றன.

323. சர்வதேச சட்டத்தின் மீறல்கள் பற்றி, பாதுகாப்புப் படையினர் நடந்து கொண்ட விதம் உள்ளாக, நேரடியாக நடவடிக்கை எடுக்கும் போது, எதிர்த்து நிற்காத போக்கே பின்பற்றப்படுகிறது. அவர்களது மிக முக்கிய கடமைகள் மற்றும் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் நேர்ந்தவை பற்றி அவர்கள் அறிந்திருந்தனர் என்ற போதிலும், பாதுகாப்புச் செயலாளரும் ஐந்து மிக உயர் பதவிவகிக்கும் இராணுவ அதிகாரிகளும் ஒவ்வொருவராக குறுகிய நேரத்துக்கு மாத்திரமே ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வுகளின் போது அதன் முன்னிலையில் சமுகமளித்தனர். இந்த சிரேஷ்ட அதிகாரிகள் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரானதும், மீறல்கள் பற்றிய பொதுவான குற்றச்சாட்டுக்கள் அல்லது யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான சகலதுமடங்கிய வியூகம் பற்றியே அவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. சர்வதேச ஊடகங்களில் பொதுவாக அறிவிக்கப்பட்ட மீறல்கள் பற்றி குறிப்பான விடயங்களை அபூர்வமாக ஆணையாளர்கள் அணுகினர். 'பொதுமக்கள் காயமடைவது மற்றும் கொல்லப்படுவது தொடர்பில் பூஜ்ய சகிப்புதன்மை' என்ற உறுதிப்பாடுகள் போன்ற குழுவினால் தொகுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு நேரடியாக முரண்பாடான நிலையிலான சாட்சியங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நேரடியாக புலனாய்வு முறைமையின் நலிவையும், பெரிய குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் உள்ள உண்மையைக் கண்டறிவதில் ஆணைக்குழுவின் திறனை அதிகமாக மட்டுப்படுத்தும் விதத்தில், சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அளவுக்கு அதிகமான மரியாதையை வழங்குவதையும் இது குறிக்கிறது. சிரேஷ்ட அதிகாரிகளின் மற்றும் சிவிலியன் அதிகாரிகளின் சாட்சியம் தொடர்பான இத்தகைய விமர்சனம் அற்ற மற்றும் மரியாதை நிறைந்த அணுகுமுறை, யுத்தத்தின் இந்த முக்கிய கட்டம் தொடர்பான உண்மைகளை அறிந்து, இலங்கையின் சிவிலியன் மற்றும் இராணுவ தலைமைத்துவத்துக்கு பெரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய அரசியல் அவதான மிக்க விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான எல்.எல்.ஆர்.சியின் மனஉறுதியைப்பற்றிய ஆழ்ந்த கேள்விகளை குழுவுக்கு எழுப்புகின்றன.

324. யுத்தத்தினால் பாதிப்படைந்த பெரும்பாலான சாட்சிகள் உள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கான எல்.எல்.ஆர்.சியின் கள விஜயங்களின் போது, அதன் அணுகுமுறை வேறுவிதமாகவே இருந்தது. மீறல்களுக்கான சாட்சியத்தை தேடிப் பிடிப்பதற்கும் பாதிக்கப்பட்டோரின் அனுபவம் பற்றிய உண்மையினை கண்டறியவும் யுத்தப் பிரதேசங்களிலான சாட்சி முக்கியமாக இருந்த போதிலும், 2011 ஜனவரி இறுதியில் இருந்தவாறாக எல்.எல்.ஆர். சியின் இணையத்தளம் 2010 மே மாதம் ஆணைக்குழுவுக்கான ஆணை வழங்கப்பட்ட திகதியில் இருந்து 14 கள விஜயங்களையே குறிப்பிடுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் சாட்சியம் பதிவு செய்வதற்காக பொருத்தமான சாட்சியுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட நேரம் மிகக் குறைவாகவே இருந்ததோடு சாட்சியம் வழங்க முன்வந்த அதிக எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்களுக்குச் சாட்சியம் அளிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்தப் பாதிக்கப்பட்டோரில் அதிகமானோர் பெண்களாவர். இந்தப் பெரிய எண்ணிக்கை மற்றும் அது பற்றி ஆணைக்குழுவின் கவனத்துக்குச் சிவில் சமூகத்தால் கொண்டுவரப்பட்ட போதிலும், இந்த எண்ணிக்கையிலான சாட்சிகளுக்கு வசதியளிப்பதற்காக அதன் சாட்சிகள் பதிவு செய்யும் அட்டவணையை எல்.எல்.ஆர்.சி. மறுசீரமைத்ததாகத் தெரியவில்லை.

325. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் வழங்கக் கூடிய நேரடிச் சாட்சியும் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது நடந்தவை பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்காக முக்கியமாக இருந்த போதிலும், இந்தச் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காக எல்.எல்.ஆர். சியின் மிகக் குறுகிய நேரமே ஒதுக்கப்பட்டுள் ளது. மேலும், மீறல்கள் பற்றி மிகச் செறிவான தகவலைக் கொண்ட சாட்சிகளுக்கு அநேகமாக 15 முதல் 20 நிமிடங்கள் அல்லது சில நேரங்களில் அதற்குக் குறைவான நேரமே வழங்கப்பட்டுள்ளது. மேலும், உண்மைகள் மற்றும் சிக்கல்கள் பற்றி சாட்சிகள் அறிந்திருப்பதைக் கண்டுபிடிப்பதற்கு இது போதியளவாக இல்லை என்பதோடு அப்படிச் செய்வது அவர்களுக்கு மரியாதை குறைவாகவும் இருக்கும்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் ஈ-எக்ஸ்சேன்ஜ்

கொமர்ஷல் வங்கியின் ஈ-எக்ஸ்சேன்ஜ் உடனடி பணப் பரிமாற்ற சேவையைப் பயன்படுத்திய பெருமளவான வாடிக்கையாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி வெகுமதிகளை அள்ளி வழங்கியுள்ளது. ஈ-எக்ஸ்சேன்ஜ் திட்டத்துக்கான பண்டிகைக் கால ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் போதே இந்த வெகுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொமர்ஷல் வங்கியின் குருநாகல் ஈ-எக்ஸ்சேன்ஜ் பணப்பரிமாற்ற வளாகத்திலும், வங்கியின் அம்பலாங்கொடை, அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு கிளைகளிலும் இடம்பெற்ற விஷேட வைபவங்களின்போது ஈ-எக்ஸ்சேன்ஜ் முத்திரை பொறிக்கப்பட்ட பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்பட்டன. 2011 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஈ-எக்ஸ்சேன்ஸ் மூலம் பணப்பரிமாற்றங்களைப் பெற்றுக் கொண்ட சகல பயனாளிகளுக்கும் இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கொமர்ஷல் வங்கியின் ஈ-எக்ஸ்சேன்ஜ் சேவையானது மிகவும் நவீன ஆனால் செலவு குறைந்த இணையத்தளம் மூலமான ஒரு பணப்பரிமாற்ற சேவையாகும். 50 நாடுகளில் உள்ள முகவர் வலையமைப்பின் ஊடாக இந்தப் பணப்பரிமாற்ற சேவையைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதன்மூலம் அனுப்பப்படும் பணத்தை வாடிக்கையாளர்கள் வங்கியின் கணினி வலையமைப்பின் ஊடாக நாடு முழுவதும் உள்ள 198 கிளைகள் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றுள் சில கிளைகள் வங்கி விடுமுறை தினங்களிலும் திறந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வங்கியின் 417 ஏரிஎம் வலையமைப்பின் ஊடாகவும் பணத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். இயந்திரங்கள் ஊடாக பணத்தை வழங்கும் முறைகளுள் நாட்டில் உள்ள மிகப்பெரிய வலையமைப்பு முறை இதுவேயாகும். (த)

# நோக்கியா விலை போகிறது

மொபைல் உலகின் முன்னணி நிறுவனமான நோக்கியாவை வாங்குகிறது மைக்ரோ சொப்ட் என தகவல்கள் வெளியாகியுள்ளதால் கோர்ப்பரேட் உலகில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நோக்கியாவின் ஹேண்ட் செட் யூனிட்டை வாங்கும் பேச்சுக்களில் மைக்ரோ சொப்ட் நிறுவனம் ஈடுபட்டுள்ளதாக, மொபைல் ரிவியூ பத்திரிகை ஆசிரியர் தனது ''ப்ளாகில்'' தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இது குறித்த இணக்கம் எட்டப்படும் எனத் தெரிகிறது. சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் ஆப்பிள் ஐபோனுடன் போட்டிபோட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது விண்டோஸ் மொபைல். அதற்கு நோக்கியாவை வாங்குவது உதவும் என நம்புகிறது.

# முதல் காலாண்டில் 256.3 மில்லியன் இலாபம் ஈட்டியுள்ளது செலான் வங்கி

2011 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் செலான் வங்கி ரூ.256.3 மில்லியனை இலாபமாக பதிவு செய்துள்ளது. இது முந்தைய வருடத்தின் இதே காலப்பகுதியின் ரூ.185.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 38% அதிகரிப்பாகும்.

வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம் ரூ. 395 மில்லியனாக பதியப்பட்டுள்ளதுடன் முந்தைய வருடத்தின் இதே காலப் பகுதியின் ரூ. 291.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 36% அதிகரிப்பாகும்.

செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட இச்சாதனைக்கு இலங்கை மக்கள் செலான் வங்கி மேல் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் அடையாளம் எனத் தெரிவித்தார்.

ரூ.4,691,533,285 திரட்டும் விதத்தில் 43,333,333 சாதாரண பங்குகளையும் 41,186,666 வாக்கில்லா பங்குகளையும் உரிமப் பங்காக வழங்க வங்கி திட்டமிட்டுள்ளது. இது மே மாதம் நடத்தப்படவுள்ள வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்படும்.

2010 ஆம் ஆண்டில் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.1.2 பில்லியனை வங்கி பெற்றுக் கொண்டுள்ளதுடன், முந்தைய ஆண்டின் ரூ. 534 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 126% அதிகரிப்பாகும். வரிக்கு முந்திய இலாபமான ரூ. 1.9 பில்லியன் 2009 உடன் ஒப்பிடுகையில் 124% அதிகமாக உள்ளதுடன், வங்கி ஸ்தாபிக்கப்பட்டது தொடக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள அதிகப்படியான இலாபமாக உள்ளது.

இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டாகவும் நிதி அறிக்கையிடலில் புதிய மாதிரியாக 2010 இன் வருடாந்த அறிக்கை உள்ளது. ''த பிஸ்னஸ் கேஸ்'' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அழகிய வெளியீடு வங்கியின் சகல பங்குதாரர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2010 ஆம் ஆண்டில் பங்குதாரர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளது என விளக்கப்படுத்தப் பட்டுள்ளது. (த)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் அண்மையில் மரணித்த திருமதி நிர்மலாதேவி தயாளானின் (யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியை) மரண இழப்பீட்டுக்கான காசோலையை அவரது கணவரிடம் அதன் வடபிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எவ். அரியநாயகம் வழங்குகிறார். அருகில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் உள்ளனர். (த)

# 'ஸ்பார்க் சேர்வர்' மூலம் நல்ல பெறுபேறு

ஒராக்கள் ஆப்ளிகேஷன் சேர்வர்களுக்கும், ஒராக்கள் டேடாபேஸ் சேர்வர்களுக்கும் ஏற்ற சிறந்த சேர்வர்களை உருவாக்கும் வகையில் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று ஒராக்கள் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய சேர்வரின் மூலம் உயர் வினைத்திறன் கொண்டசிஷ்டன் செயற்பாடும், வலுச்சிக்கனம் மற்றும் ஒராக்கள் டேடா பேஸ்களை செயற்படுத்தும் வாடிக்கையாளர்களின் செயற்பாட்டு திறன் அதிகரிப்பு போன்றனவும் எய்தப்பட்டுள்ளன. இந்தப் பெறுபேறுகள் இதற்கு முன்னர் ஒராக்கள் ஆய்வுகளின் மூலம் பெறப்பட்ட 70க்கும் அதிகமான பெறுபேறுகளைவிட சிறந்தவையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பெறுபேறுகள் குறித்து ஒராக்கள் நிறுவனத்தின் வன் பொருள் அபிவிருத்திப் பிரிவின் பிரதித் தலைவர் மசூத் ஹேதாசி கருத்துத் தெரிவிக்கையில், ''ஸ்பார்க் சேர்வர்களின் செயற்திறனை ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை புதிய கண்டு பிடிப்புகளின் மூலம் அதிகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதுண்டு, அந்த வகையில் இந்தப் புதிய பெறுபேறுகள் எமது தொடர்ச்சியான ஆய்வுகளுக்குக் கிடைத்த சிறந்த பிரதிபலனாக அமைந்துள்ளன'' என்றார்.

# கொக்காகோலா 'கிரிக்கெட் பாத்வே'

கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா லிமிடெட்டினால் (CCB SL) நடத்தப்படும் 2010ஆம் ஆண்டுக்கான 'கிரிக்கெட் பாத்வே' முகாம் கொழும்பு முவர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. அரவிந்த டீ சில்வா கிரிக்கெட் மன்றம் மற்றும் இலங்கைக் கிரிக்கெட்டுடன் ஒன்றிணைந்து நிறுவனத்தால் நடத்தப்படும் தொடர் முகாம்களே கொக்கா கோலா கிரிக்கெட் பாத்வே முகாம் என அழைக்கப்படுகின்றது.

இலங்கையின் கிராமப்புற மற்றும் ஊராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களிடம் மறைந்துள்ள கிரிக்கெட் திறமைகளை வெளிக்கொணருவதே இதன் நோக்கமாகும். மூன்று நாள்கள் நடைபெற்ற இந்த முகாமின் ஆரம்ப வைபவம் வெள்ளிக்கிழமை 13ஆம் திகதி பி.ப. 2.30இற்கு ஆரம்பித்தது. இதில் பாடசாலை மாணவர்கள் 80 பேர் இதில் கலந்துகொண்டனர். அத்துடன், இலங்கை கிரிக்கெட்டின் தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்ட கிரிக்கெட் பயிற்றுநர்களும் கலந்து கொண்டனர். கொக்கா கோலா பார் ஈஸ்ட்- லிமிடெட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிட முகாமையாளர் மணிஸ் சத்துர்வேதியுடன் கிரிக்கெட் ஜாம்பவான் அரவிந்த டீ சில்வாவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# பிரிட்டனுக்கான மாணவ விசா; புதிய நடைமுறைகள்

பிரிட்டனுக்கான மாணவ விசா பெற்றுக்கொள்வது தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி முதல் புதிய நடைமுறைகள் அமுலுக்கு வந்திருக்கின்றன. இதன்படி மூன்று வாய்ப்புக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1. English Courses

ஆங்கில கற்கை நெறியினை U.K சென்று கற்பதற்கு விசா அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் உண்மையில் 10 ஆம் திகதி ஜனவரி 2011 இல் அறிமுகப்படுத்தப்பட்டு மீள ஏப்ரல் 21 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் 6 மாதங்களுக்கு உட்பட்ட ஆங்கில கற்கை நெறிகளை மேற்கொள்ளலாம். விசா 11 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். இந்த விசா முறை Student Visitor Visa என்று அழைக்கப்படுகிறது. இந்த விசாவுக்கு G.C.E. (O/L) சித்தி போதுமானது.

2. Foundation Degree Programme

இந்தக் கற்கைநெறிகளை U.K இல் பயில்வதற்கு Student Visa அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு மாணவன் Certificate Level அல்லது Diploma Level இல் இருந்து தொடங்கி இறுதியில் ஒரு Degree யினை முடிக்கும்வரை விசா வழங்கப்படுவதுடன் இந்த வகை விசா நீடிக்கப்படக் கூடியதும் ஆகும். ஆனால் இதற்கு ஆங்கில அறிவு அவசியமானதாகும். ஆங்கில அறிவு தொடர்பான ஐரோப்பிய பொது ஒழுங்கமைப்பில் (Common European Framework of Reference - CEFR) B1 தராதரத்தில் சித்தி அடைந்திருக்க வேண்டும் என்பதுடன் G.C.E.(O/L) சித்தி போதுமானது.

3. Degree Programme

ஒரு மாணவன் நேரடியாகவே Degree Programme ஒன்றுக்கு வீசாவினைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த விசாவினை நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்பும் உண்டு. ஆனால் ஆங்கில அறிவு தொடர்பான ஐரோப்பிய பொது ஒழுங்கமைப்பில் (Common European Framework of Reference - CEFR) B2 சித்தி அடைந்திருக்க வேண்டும் என்பதுடன் G.C.E.(O/L), G.C.E (A/L) அவசியமானதும் ஆகும்.

மேற்கூறிய மூன்று வகை கற்கை நெறிகளில் ஏதாவது ஒன்றின் மூலமே தற்போது U.K விசாவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னரான நடைமுறையின் கீழ் U.K இல் உள்ள College களுடன் Skype interview அல்லது Spot Admission மூலம் அவர்களது ஆங்கில அறிவை பரிசோதித்து அது B1 தராதரத்துக்கு இருந்தால் அனுமதி வழங்கலாம் எனப்பட்டது. ஆனால் பெருமளவிலான College கள், வியாபார நலன் கருதி இந்த வாய்ப்பை துஷ்பிரயோகம் செய்ததால் இந்தமுறை நீக்கப்பட்டு விட்டது.

இறுதியாக பிரிட்டனின் விசா தொடர்பான புதிய நடைமுறைகளின் கீழ் நீங்கள் உங்கள் வீசாக்களை உறுதிப்படுத்த இல.15, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள British College of Higher Studies (BCHS) அதன் சகோதர நிறுவனமான 30, 1/14, W.A.Silva மாவத்தை, வெள்ளவத்தையில் அமைந்துள்ள Express International Studies & Consultants (EISC) நிறுவனத்தினர் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றார்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 மே 2011 செவ்வாய்க்கிழமை

# தேசிய ஹொக்கி அணிக்கு நான்கு யாழ்.வீராங்கனைகள்

யாழ்ப்பாணம், மே 31

இலங்கைப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவு தேசிய ஹொக்கி அணிக்கு முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில் இருந்து 4 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே ஹொக்கி சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகளே தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகளான கம்லினி மில்ஸ், கிருத்திகா சின்னத்தம்பி, மேசி அன்ரூஸ், பியூலா அன்ரூ ராஜசூரியர் ஆகிய 4 வீராங்கனைகளுமே தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.



மேசி அன்ரூஸ் — [illegible] மில்ஸ் — கிருத்திகா — பியூலா

இவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.பாடசாலைகள் ஹொக்கி சம்மேளனம் நடத்திய போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி காலிறுதிவரை முன்னேறியது.

காலிறுதிஆட்டத்தில்கொழும்பு அணியுடன் உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது.

இந்த ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமனிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் உடுவில் மகளிர் கல்லூரி தோல்வி கண்டது.

இந்தப் போட்டியில் மிகவும் சிறப்பாகவும் அனுபவத்தையும் முதிர்ச்சியை காட்டிய 4 வீராங்கனைகள் தேசிய அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.(த-23)

## கிளிநொச்சி லீக் நடத்தும் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 31

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் கிளிநொச்சி லீக்கில் பதிவு செய்யப்பட்ட 11 கழகங்கள் பங்குபற்றவுள்ளதாக கிளிநொச்சி லீக்கின் தலைவர் ப.ஜோய் பியசீலன் தெரிவித்துள்ளார். (த-23)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை புதன் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதலில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கிரிக்கெட் போட்டி

வடமராட்சி, மே 31

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 12 ஓவர் 11பேர் பங்கு கொள்ளும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த கழகங்களில் 16 கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு போட்டி நடைபெறும். (த-236)

# மன்னாரை வென்றது யாழ்.அணி தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,மே31

வடமாகாணப் பெரு விளையாட்டுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகித் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்ற 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 6 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணியினர் சகல விக்கெட்டுகளையும் இழந்து 34 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

மயூரி 7 ஓட்டங்களையும், சுகன்யா ஆட்டம் இழக்காமல் 8 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மாவட்ட அணி வீராங்கனைகளான வனுப்பிரியா 2 விக்கெட்டுக்களையும் கோகிலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

35 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய யாழ்.மாவட்ட அணியினர் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் யாழ்.மாவட்ட அணி 4 விக்கெட்டுகளால் மன்னார் மாவட்ட அணியை வெற்றி கொண்டது.

(த-23)

# வடமாகாணப் பெரு விளையாட்டு கராத்தே முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், மே 31

வட மாகாணப் பெரு விளையாட்டுப் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆண், பெண் இரு பாலாருக்குமான காரத்தே போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**காட்டா போட்டி**

பெண்கள் பிரிவு

ஜெ.சுசைநாயகி பீரிஸ் (மன்னார்), கே.பிரசாந்தினி (யாழ்ப்பாணம்), எஸ். நந்தினி (முல்லைத்தீவு), யூ.சைகிலா (முல்லைத்தீவு).

**குமித்தே போட்டி**

பெண்கள் பிரிவு

50 கிலோ பிரிவுக்குட்பட்டோர்

ஜெ.சுசைநாயகி பீரிஸ் (மன்னார்), எஸ்.நந்தினி (முல்லைத்தீவு).

55 கிலோ பிரிவு

யூ.சைகிலா (முல்லைத்தீவு).

61 கிலோ பிரிவு

கே.பிரசாந்தினி (யாழ்ப்பாணம்).

**காட்டா - ஆண்கள் பிரிவு**

கே.நாகேந்திரன் (முல்லைத்தீவு), எஸ்.ஜெயந்தன் (யாழ்ப்பாணம்), ஆர். ஆனந்தகுமார் (யாழ்ப்பாணம்), ஈஸ்வர ஆனந் (வவுனியா).

**குமித்தே- ஆண்கள் பிரிவு**

50 கிலோ பிரிவு

யூ.உதயசங்கர் (யாழ்ப்பாணம்), எம்.ரமேஸ்குமார் (முல்லைத்தீவு), என். கருணாகரன் (முல்லைத்தீவு), ஆர்.யக்சன் (முல்லைத்தீவு).

55 கிலோ பிரிவு

வெனிடஸ் (முல்லைத்தீவு), வை. விமலேஸ்வரன் (யாழ்ப்பாணம்), எஸ். சுபிராஜ் (கிளிநொச்சி), கே.ராமச்சந்திரா (யாழ்ப்பாணம்).

60 கிலோ பிரிவு

கே.சுதர்சன் (முல்லைத்தீவு), என். அன்ரனி (யாழ்ப்பாணம்), ரி.யாவேனான் (முல்லைத்தீவு), ரி.ஈஸ்வர ஆனந்த சுவாமி (வவுனியா).

67 கிலோ பிரிவு

எம்.வசந்தகோசன் (யாழ்ப்பாணம்), பி.அமலதாஸ் (யாழ்ப்பாணம்), ஜே.வெற்றி நிறஞ்சன் (மன்னார்), எ.ஜெயனேஸ்வரன் (மன்னார்).

75 கிலோ பிரிவு

ஏ.காந்தன் (கிளிநொச்சி), ரி.சுந்தராஜ் (யாழ்ப்பாணம்), எம்.ரமணன் (முல்லைத்தீவு), ஆர்.ரமேஸ் (யாழ்ப்பாணம்).

84 கிலோ பிரிவு

ரி.ஜெயந்தன் (யாழ்ப்பாணம்), கே.நகேந்திரன் (முல்லைத்தீவு), கே.கஜேந்திரன் (முல்லைத்தீவு), ஏ.எட்மன் றீகன் (யாழ்ப்பாணம்).

84 கிலோ பிரிவுக்கு மேற்பட்டோர்

ரி.பிரபாகரன் (முல்லைத் தீவு), ஜெ.கனிராஜ் (முல்லைத் தீவு).

முதலாமிடம் இரண்டா மிடங்களைப் பெற்ற வீரர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 23ஆம் 24ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர். (த-23)



யாழ்.பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அவையினரால் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக அணிக்கு விளையாட்டு அவையின் தலைவரும் விரிவுரையாளருமான ம.கணேசநாதன் கிண்ணம் வழங்குகின்றார். (த-23)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டுத் துறையினால் நடத்தப்பட்ட ஆனந்தரட்ணம் வெற்றிக் கிண்ணத்துக்கான ஹொக்கிப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி 19 வயதுப் பிரிவு அணி. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாதை தந்தது ஐ.பி.எல்லே!

- கிறிஸ் கெயில்



ஐ.பி.எல் போட்டியில் கிடைத்த மரியாதையும், ரசிகர்களின் அன்பும் மேற்கிந்தியத்தீவுகளில் கிடைக்கவில்லை என்று பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் முன்னணி வீரர் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் கூறியிருப்பதாவது:

ஐ.பி.எல் போட்டியில் விளையாடிய போது உலகம் முழுவதும் உள்ள ஏராளமான ரசிகர்கள் என் மீது அன்பும், மரியாதையும் காட்டினர். ஆனால் இது ஒருபோதும் மேற்கிந்தியத்தீவுகளில் கிடைத்த தில்லை.

மேற்கிந்தியத்தீவுகளில் இருந்து மூன்று வீரர்கள் கலந்து கொண்டனர். அதில் டரன் பிராவோ மட்டுமே சம்பியன் பட்டம் வென் சென்னை அணியில் இடம்பிடித்திருந்தார். கிண்ணம் வென்ற அணியில் பிராவோ இடம்பெற்றது மகிழ்ச்சியே என்று கூறியுள்ளார்.

முன்னதாக கடந்த ஜனவரியில் பெங்களூரில் நடைபெற்ற ஐ.பி.எல் ஏலத்தில் கெயில் விலை போகவில்லை. பெங்களூர் அணியில் இடம் பெற்றிருந்த ஆஸ்திரேலிய வீரர் நனிஸ் காயம் காரணமாக விலகினார். இதையடுத்து அவருக்குப் பதிலாக கெயில் சேர்க்கப்பட்டார்.

இதனிடையே மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபைக்கும் கெயிலுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இருப்பினும் 12 ஆட்டங்களில் விளையாடிய அவர், 2 சதங்களுடன் 608 ஓட்டங்கள் குவித்து தொடர் நாயகன் விருதைத் தட்டிச் சென்றார். (15)

# அயர்லாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான்



அயர்லாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தில் 96 ஓட்டங்களுக்கு அயர்லாந்தைச் சுருட்டிய பாகிஸ்தான், 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 2 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் 1- 0 என்று முன்னிலை வகிக்கிறது. இடது கை வேகப்பந்து வீச்சாளர் ஜுனைத் கான் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சயீட் அஜ்மல் இறுதியா துடுப்பெடுத்தாடிய வீரர்கள் 3 பேரை வீழ்த்தினார். பந்துகள் கடுமையாக 'ஸ்விங்' ஆனதால் அயர்லாந்து துடுப்பாட்டக்காரர்களால் தாக்கு பிடிக்க முடியவில்லை. ஆட்டம் மழை காரணமாக தாமதமானதால் பாகிஸ்தானுக்கு 36 ஓவர்களில் 95 ஓட்டங்கள் வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

முதல் விக்கெட்டுக்காக ஹபீஸும் தபீக் உமரும் இணைந்து 73 ஓட்டங்களைச் சேர்த்து அயர்லாந்தின் வாய்ப்பை முடித்து வைத்தனர். அதன் பிறகு 3 விக்கெட்டுக்களை எடுத்தார் அயர்லாந்து பந்து வீச்சாளர் கியூஸக். (15)

பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ்

# காலிறுதியில் பெடரர், ஜொகோவிச் சானியா - வெஸ்னினா


சானியா

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் காலிறுதிச்சுற்றுக்கு இந்தியாவின் சானியா - ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிற்சர்லாந் தின் பெடரர், செர்பியாவின் ஜோகோவிச், இத்தலியின் பேபியா ஆகியோரும் காலிறுதிக்கு தகுதிபெற்றனர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் 4 ஆவது சுற்றில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-2, 7-5 என்ற நேர் செட்களில் சகவீரர் ஸ்டானிஸ்லல் வாவ்ரிங்கையும், இத்தாலியின் பேபியோ 4-6, 6-4, 3-6, 6-3, 11-9 என்ற கணக்கில் ஸ்பெயினின் அல்பேர்ட்டையும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினர். மற்றொரு ஆட்டத்தில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6-4, 6-4, 6-2 என்ற நேர் செட்களில் பிரான்ஸின் ரிச்சர்டு காஸ்கட்டை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் 4 ஆவது சுற்றில் நடப்புச் சம்பியன் இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியாவோனே 6-3, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச்சையும், ரஷியாவின் அனாஸ்டாஷியா 7-6 (4), 2-6, 6-2 என்ற செட் கணக்கில் சக வீராங்கனை வேரா ஸ்வோனரேவாவையும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினர்.

**சானியா ஜோடி வெற்றி:**


மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சானியா மிர்சா- எலினா வெஸ்னினா ஜோடி, ஸ்பெயினின் மரியா ஜோஸ்-மெடினா ஜோடியை எதிர்கொண்டது.

இந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய சானியா-வெஸ்னினா ஜோடி முதல் செட்டை 6-1 என்ற கணக்கில் எளிதாக வென்றது. இதனால் முதல் செட் 7 கேம்களிலேயே முடிவுக்கு வந்தது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது சுற்றில் ஸ்பெயின் ஜோடி கடுமையாகப் போராடியது. இருப்பினும் சானியா-வெஸ்னினா ஜோடி 10 ஆவது கேமை வென்று 6-4 என்ற கணக்கில் இரண்டாவது செட்டை முடிவுக்கு கொண்டு வந்தது. இதன்மூலம் இந்தியா-ரஷ்ய ஜோடி 6-1, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் கஜகஸ்தானின் ஏரோஸ்லாவா-அமெரிக்காவின் வானியா கிங் ஜோடி 2-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் சீனதைபேயின் யங் ஜான்-ருமேனியாவின் மோனிகா ஜோடியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. (15)

# சிறந்த ஆரம்பமே வெற்றியைத் தந்தது!



ஐ.பி.எல் கிண்ணத்தை டோனி 2 ஆவது முறையாக சென்னை சூப்பர் கிங்சுக்கு பெற்றுக்கொடுத்தார். இறுதி ஆட்டத்தில் பெங்களூரை வீழ்த்தி ஐ.பி.எல் கிண்ணத்தை கைப்பற்றியது குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணித்தலைவர் டோனி கூறியதாவது:-

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு முரளி விஜய், மைக் ஹசியின் சிறப்பான தொடக்கமே காரணம். முக்கியத்துவம் பெற்ற இறுதி ஆட்டத்தில் இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். 15 ஓவர் இருவரும் நிலைத்து நின்று அதிரடியாக விளையாடியதால் 205 ஓட்டங்களைக் குவிக்க முடிந்தது. இதற்காக இருவரையும் பாராட்டுகின்றேன். இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானால் துடுப்பாட்ட வீரர்கள் சாதிக்க வேண்டும் என்று விரும்பினேன். அதன் படி நடந்தது.

அஸ்வினின் பந்துவீச்சு மிகவும் அற்புதமாக இருந்தது. உண்மையில் அனைவரது இதயத்தை தொடும் வகையில் இருந்தது. கடந்த ஐ.பி.எல். போட்டியில் நாங்கள் அரை இறுதியில் கடுமையாக போராடியே நுழைந்தோம். இந்த முறை அப்படி இல்லை. தொடக்கத்தில் இருந்தே நன்றாக விளையாடி கிண்ணத்தை வென்றோம்.

உலகக் கிண்ண போட்டி முடிந்த உடன் ஐ.பி.எல். போட்டி வந்துவிட்டது. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது இந்திய முழுக்க விருப்பமாக இருந்தது. அதை தொடர்ந்து நடந்த ஐ.பி.எல் போட்டி நீண்ட அட்டவணையை கொண்டு இருந்தது. ரசிகர்கள் மிகுந்த களைப்புடன் இருந்தாலும் ஐ.பி.எல் போட்டியை நாள் செல்ல செல்ல வெகுவாக ரசித்தார்கள்.

சென்னை ரசிகர்களின் உற்சாகத்தால் வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். சேப்பாக்கத்தில் சூப்பர் கிங்ஸ் அனைத்து ஆட்டத்திலும் வெற்றி பெறுவதற்கு ரசிகர்களின் ஆதரவே காரணம். நன்றி தெரிவிக்கிறேன் கிண்ணத்தை சென்னை வென்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.

# கிறிஸ் கெயில் நீக்கம்

இந்தியாவுக்கு எதிராக 'ரி - 20, ஒரு நாள் போட்டியிலிருந்து மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெயில் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி சமீபத்தில் பாகிஸ்தானுடன் விளையாடியபோது கிறிஸ் கெயில் அதைப் புறக்கணித்தார். காயங்களுக்கு சிகிச்சை பெற உள்ளதாக அவர் அதற்கு காரணம் கூறியிருந்தார். இதனால் அந்த நாட்டின் கிரிக்கெட் வாரியத்துக்கும், அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

கிறிஸ் கெயில் நன்றாக காணப்படுகின்றார். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வாரியத்துக்கு தகவல் தெரிவிக்காமல், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் சார்பில் விளையாட இந்தியாவுக்கு சென்றுள்ளார் என்று மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட் சபை நிர்வாகம் குற்றம்சாட்டியது.

இந்த நிலையில் இந்திய அணிக்கு எதிரான போட்டிகளில் விளையாடும் வீரர்களின் பட்டியலில் கிறிஸ் கெயிலின் பெயர் இடம்பெறவில்லை. மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர்கள் தேர்வின் போது கிறிஸ் கெயிலின் பெயர் பரிசீலிக்கப்பட வில்லை என்று அந்த நாட்டின் கிரிக்கெட் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## CIMA வகுப்புகள்

CAPSTONE இல் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
Level 1 (Certificate) - 05.06.2011
Level 2 (Operational) - 11.06.2011
Level 3 (Management) - 11.06.2011

வடக்கு, கிழக்கில் CIMAவின் முதல் 3 Level களுக்கும் வகுப்புகளை நடத்தும் ஒரே நிறுவனம் Capstone அனைத்து விரிவுரையாளர்களும் கொழும்பிலிருந்து வருவதுடன் நன்கு தகுதியுடையவர்களும் (Qualified) ஆவர்.

CAPSTONE
இல. 01, (மேல்மாடி) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0727, 021 720 0777.


## கிளைக்குழுத் தெரிவு

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்ககிளைக் குழுத் தெரிவுகள் எதிர்வரும் 05.06.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அந்தந்த கிளைகளுக்கென குறிப்பிட்ட இடங்களில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது. வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் தமது கிளைக்குழுத் தெரிவில் பங்குகொண்டு ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

செயலாளர்.

## வியாபாரிகளுக்கு அபராதம்

தென்மராட்சி, மே 31

நிறுவை அளவை உபகரணங்களுக்கு இந்த வருடத் துக்குரிய முத்திரை இடாமல் பயன்படுத்திய சாவகச்சேரி நகர்ப் பகுதியைச் சேர்ந்த 10 வியாபாரிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 1000 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நிறுவைகள், அளவைகள் திணைக்கள உத்தியோகத்தரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று நீதிமன்றில் தனித் தனியாக விசாரிக்கப்பட்டன.

வியாபாரிகள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 1000 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-207)

## மரண அறிவித்தல்



### குணரட்ணம் செல்வராசா

இல. 720, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மாப்பியன் மில்லேன், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் செல்வராசா (ரட்ணா) கடந்த 29.05.2011 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணம்- இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சரவணபவன்- லீலாவதி தம்பதியரின் மருமகனும், சுகன்யாவின் அன்புக் கணவரும், குணசீலன், காலஞ்சென்றவர்களான செல்வராணி, ஞானேந்திரன் மற்றும் பற்குணராஜா, ஞானசேகரம் (ராசா), நவரட்ணம் (லண்டன்), ஜெயராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சரோஜினி மற்றும் பிறேமினி, மங்களேஸ்வரி(மல்லிகா), கௌசலா, கிருஷா, சிவகுமார், கோகிலா, ரவிச்செல்வன், நிரஞ்சினி(கனடா), ஜெனார்த்தனி, அபிராமி ஆகியோரின் மைத்துனரும், சஜீவன், சஜீவீ, அன்றூ, ஒஸ்மன், மக்சிமீலியன், சுஜீவீ, அமல்ராஜ், சஞ்சீவீ, சஞ்சீவன், கஜந்தன், சயந்தன், வினோதினி, நிதுஷன், நிந்துஜா, நிலுக்ஷா, சின்மியா, திவானி ஆகியோரின் சித்தப்பாவும், சேந்தன், கிருஷாந்தன், நிதுஷன், சாருஜன், நிரவீன், ஆருக்ஷா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுதுமலை தெற்கு, மானிப்பாய். மனைவி, சகோதரர்கள்.

## ஈரவிழிகளுடன் கண்ணீர் காணிக்கை





### வைரமுத்து குருமூர்த்தி J.P

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், சரவணை, வேலணை, புங்குடுதீவு- மத்தியஸ்தர் சபை வேலணை)

அன்புடனும், பண்புடனும் என்றும் பழகி ஆற்றி நின்ற
இனிய நற் சமூக, சமய சேவை கண்ணியமாய்
கடமை செய்யும் ஆற்றல் கண்டு வந்தோம் உந்தனது வாழ்வில்
எண்ணரிய நோக்கங்களை ஈடு செய்தாய் ஏன்? இறைவா!
பாதியிலே அழைத்தாய் செயலிழந்து நிற்கின்றோம் நாங்கள்
அவரைக் காத்து நின்று அமைதி செய்வாய் இறைவா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேலணைவடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
வேலணை வடக்கு வாழ் மக்கள்.

(49,20,52)-(730)

## மரண அறிவித்தல்கள்



### மாணிக்கம் குலசிங்கம்

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குலசிங்கம் நேற்று (30.05.2011) இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோயிற்குடியிருப்பு சாவகச்சேரி. கு.குணரத்தினம் (குணன்) மகன் (சாவகச்சேரி சந்தை வர்த்தகர்).



### தம்பிப்பிள்ளை அருளம்பலம் (மண்கும்பான்)

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை அருளம்பலம் நேற்று (30.05.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
NO.145, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. அ.கனகரத்தினம்(மகன்)

## யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| 100 ரூபா | சீட்டு இலக்கம் |
|---|---|
| முதலாம் பரிசு- | 13580 |
| 02ஆம் பரிசு - | 03158 |
| 03ஆம் பரிசு- | 07877 |
| **50 ரூபா** | |
| முதலாம் பரிசு- | 4128 |
| 02ஆம் பரிசு- | 3156 |
| 03ஆம் பரிசு- | 1297 |
| **20 ரூபா** | |
| முதலாம் பரிசு- | 5006 |
| 02ஆம் பரிசு- | 8159 |
| 03ஆம் பரிசு - | 8649 |

பரிசுக்குரிய இலக்கங்களுக்கான சீட்டுக்களை வைத்திருப்போர் பாடசாலை நேரத்தில் அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்:
யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.


## சந்திரகாந்தன் திருமண சேவை

மணமகன் தேவை
இந்து கௌரவ குடும்பம் பெண் 81 உத்திரட்டாதி, செவ்வாய், பாவம் 62

மணமகள் தேவை
70ஆம் ஆண்டு உத்தராடம் செவ்வாய், பாவம் 62, கனடா (P.R) எஞ்சினியர் வந்துள்ளார். அவசரம்.

இயக்குனர்: ஆனந்தி
T.P- 0775081756, 0215680063

## வீடு தேவை

பாடசாலை மாணவியும், பெற்றோரும் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். நகரப் பகுதி அல்லது அதனை அண்டிய பகுதிக்குள் முழுமையாகவோ [illegible]
[illegible] 0772963513


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம் (அப்பையா அண்ணை)



GPS வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வரணி வடக்கு, வரணி கும்பிட்டான்புலம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று (30.05.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது வரணி வடக்கு இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஐயன்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சுரேஸ்குமார். (மகன்) ச.பத்மலோஜினி(மகள்),
சு.தவயோகநாதன்(மகன், ஹொலன்ட்),
வரணி. சு.தயாகுமார்(மகன், ஹொலன்ட்)

## கண்ணீர் அஞ்சலி





### குணரட்ணம் செல்வராசா

அவர்கள் திடீர் மரணமடைந்த செய்தியறிந்து மிகவும் ஆற்றொணாத் துயர் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவினால் துன்புறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீநிதியா நகை மாளிகை,
உரிமையாளர்களும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமொரு மிலேச்சத் தாக்குதல்

**உதயன் அலுவலகச் செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து த ஐலன்ட் பத்திரிகையில் 30 ஆம் திகதி தீட்டப்பட்ட ஆசிரிய தலையங்கம் இது.**

பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கையின் யுத்தம் இரண்டு வருடங்களுக்கு முன்பே முடிவடைந்து விட்டபோதும் துரதிர்ஷ்ட வசமாக நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படவில்லை. மக்கள் இனிமேல் பயங்கரவாதம் பற்றிய அச்சத்துடன் வாழவேண்டிய அவசியம் இல்லை என்பது உண்மை. எனினும், எதிர்க்கட்சியினரும் ஊடகங்களும் சட்டத்துக்கு அப்பாற்பட்ட மிலேச்சர்களால் துன்புறுத்தப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ''உதயன்'' தமிழ்ப் பத்திரிகையின் நிருபர் ஒருவர் மிலேச்சர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். எஸ். கவிதரன் எனும் இந்த நிருபர், தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் வைத்துக் குழுவொன்றால் சனிக்கிழமை தாக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் பற்றி பொலிஸார் ஒரு போலி விசாரணையை மேற்கொள்வர் எனவும், ஈற்றில் மக்களின் குரல் தேயும்போது அவ் விடயத்தை மறந்துபோன சம்பவமாக்கி விட்டு கையைக் கழுவிக் கொள்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

''உதயன்'' பத்திரிகையாளர்கள் கடந்த சில வருடங்களில் காடையர்களால் இலக்குவைத்துத் தாக்கப்பட்டுள்ளனர். எனினும், தாக்குதல்களை நடத்தியவர்கள் இதுவரை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவரப்படவில்லை. வட பிராந்தியம் இன்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உள்ளது. எனவே முன்னாள் ஆயுதக் குழுக்களின் அங்கத்தவர்கள் அல்லது ராணுவத்தினரின் அடிவருடிகள் தவிர்ந்த எவரும் இத்தகைய துணிகரத் தாக்குதலை நடத்த வாய்ப்பில்லை.

இந்தச் சம்பவம் பற்றி ஊடக விசாரணையொன்றை நடத்துவது எங்கள் நோக்கமல்ல. எனினும் ஊடகவியலாளர்கள் மீதான இத்தகைய மூர்க்கத் தாக்குதல்களுக்கான குற்றச்சாட்டை அரசாங்கம் நிராகரிக்க முடியாது. வாசற்படிகளில் மேற்கொள்ளப்படும் இத்தகைய தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய சரியான விசாரணைகள் மேற்கொள்ளப்படாததால் இந்தக் குற்றவாளிகள் சர்வ சுதந்திரத்துடன் உலா வருகிறார்கள்.

இந்தக் கலாசாரம் கொலம்பிய அரசாங்கம் பின்பற்றும் கொள்கையைப் போன்று அமைந்துள்ளது. அங்கு எந்த எழுத்தாளனும் தான் நினைத்ததை எழுத சர்வ சுதந்திரம் கொண்டவன் எனவும் ஏனையவர்கள் அத்தகைய எழுத்தாளனைக் கொல்வதற்கும் சர்வ சுதந்திரம் கொண்டவர்கள் எனவும் எழுதப்படாத சட்டம் அமுலில் இருக்கிறது. இதுபோன்ற சட்டம் இந்த நாட்டிலும் இருப்பதாக உணரப்படுகின்றது.

யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் அமுலாக்குவதும் குரல் எழுப்புபவர்களை வன்முறையின் மூலம் ஒடுக்காமல் இருப்பதும் அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும். தகவல்கள் யுகமென அழைக்கப்படும் இந்தக் காலத்தில் தங்களுக்கு எதிரான பத்திரிகைச் செய்திகள் வெளிவரும் போது சிலர் குழம்பிப் போவதற்கும் செய்திகளை வெளியிட்டவர்களைத் தாக்குவதற்கும் கொல்வதற்கும் ஊடக நிறுவனங்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்துவதற்கும் என்ன காரணம் என்பது புரியவில்லை.

வெவ்வேறு மார்க்கங்களில் இருந்து வரும் தகவல்களையும், கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து தங்களது சொந்த முடிவுகளை எடுப்பதற்கு மக்களுக்கு உரிமையுண்டு. அவதூறான, நிந்தனையான ஆக்கங்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமுண்டு.

பொய்கள் குறுகிய கால ஆயுளுடனேயே வெளி வருகின்றன. அவ்வாறான பொய்களைக் கூறுபவர்களின் முகத்திரைகள் யுத்தகாலத்திலும், கடந்த சில வருடங்களில் நடைபெற்ற பெரிய தேர்தல்களிலும் கிளிக்கப்பட்டுள்ளன. பாரிய முதலீட்டுடன் செய்தி நிறுவனமொன்றை நடத்துவதன் மூலம் அப்பட்டமான பொய்களை வெளியிட்டு குறுகிய கால அரசியல் லாபத்தைத் தேட எவருக்கும் முடியும். அது தான் இந்த நாட்டில் நடந்து வருகிறது.

ஆனால் அத்தகைய ஊடக 'சக்வித்திகள்' எல்லாம் மக்களையும் எல்லா நேரங்களிலும் முட்டாள்களாக ஆக்கிக்கொண்டிருக்க முடியாது. இவர்களை நம்பியிருக்கும் அனுசரணையாளர்களுக்கு இந்த ஊடக 'சக்வித்திகள்' ஒரு சுமையாக மாறிவிடுகின்றனர். அவர்களது ஊகங்களும், எதிர்பார்ப்புக்களும் பிழையாகிப்போகும் போது - அவர்களின் உண்மைச் சொரூபம் அம்பலமாகும் போது - வடிகட்டிய ஏமாளியும் கூட விழித்துக்கொள்வதுண்டு. அதற்குப் பின் தங்கள் முகத்தில் அசடு வழிவதை இந்த ஊடக சக்திகளால் தடுக்க முடியாது.

''உதயன்'' பத்திரிகையின் ஆக்கங்கள் பற்றிய கருத்தினை அதன் அறிக்கை நடையை, தலையங்கக் கொள்கைகளை அல்லது பத்திரிகையை தங்களது கருத்துக்களை வெளியிடும் மேடையாகக் கருதுபவர்களைப் பற்றி எவரும் இணக்கம் தெரிவிக்காமல் இருக்கலாம். எனினும் தாக்குதலுக்கு இலக்காகாமல் ஒரு பத்திரிகை என்ற ரீதியில் அதற்கு சுயமாக இயங்க உரிமையுண்டு.

இடர்பாடுகளும், தடங்கல்களும் நீக்கப்படுவதற்கு உத்தரவாதம் வேண்டும். யாழ்ப்பாணத்தில் கடைசியாக நடந்த இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணையை நடத்தி சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பெரிய பொறுப்பு அரசைச் சார்ந்தது. இதனைச் செய்வதன் மூலம் மட்டுமே பொது மக்களின் நோக்கில் அரசு சந்தேகப் பேர்வழியாகத் தோன்றுவதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

## ரணில் - கிருஷ்ணா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைவரம் குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தனர் என்று புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்தது. ரணிலின் இந்தப் பயணத்தின் போது அவர் ஏனைய மூத்த இந்தியத் தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேச உள்ளார். (உ)

## விந்தனுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார் என்றும் விந்தன் தெரிவித்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார் விந்தன்.

இது தொடர்பாக பொலிஸிலும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

''மோட்டார் சைக்கிளில் வந்த இரு இராணுவப் புலனாய்வாளர்கள் வீட்டின் முன் நடமாடினர். மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் நான் வெளியே புறப்பட, அவர்கள் எங்களைத் துரத்தினர். குறுக்குப் பாதைகளால் பாதுகாப்பான ஒரு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்'' என்று தெரிவித்தார் விந்தன்.

''யாழ். மாநர சபையில் நாம் அரசுக்கும் முப்படையினருக்கும் நாட்டிற்கும் எதிராகச் செயல்பட்டதும் இல்லை. பேசியதும் இல்லை. ஆனால் மாநகர முத்லவர் நாம் புலிகளுக்கும், பிரிவினை வாதத்துக்கும், முப்படைக்கும் அரசுக்கும் எதிராக விரோதமாக நடந்தும், பேசியும் வருவதாக இராணுவத்தினருக்கும் இராணுவப் புலனாய்வாளர்களுக்கும் தவறான தகவல்களை வழங்கி எம்மை அச்சுறுத்தி வருகின்றார்.

எனவே இது விடயமாக பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு முதல்வரின் அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என்று அவர் நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தான் மிரட்டப்படுகிறார் என்று விந்தன் தெரிவிக்கும் இரண்டாவது முறைப்பாடு இது வாகும். ஏற்கனவே ஒரு தடவை தனது வீட்டுக்கு அயலில் உள்ளவர்களிடம் வந்து, இரு இராணுவப் புலனாய்வாளர்கள் தனது நடவடிக்கைகள் பற்றி விசாரித்து அறிந்தனர் என்று அவர் பொலிஸில் முறையிட்டிருந்தார். (உ-ஐ)

## இலங்கைக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் கடுமையாக வலியுறுத்துகின்றன. குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் என்பன இந்த நிலைப் பாட்டில் தீவிரமாக இருக்கின்றன. மனித உரிமைகள் சபையில் இவையும் உறுப்பினர்களாக இருக்கின்றன.

"நிபுணர் குழுவால் ஆவணப்படுத்தப்பட்டு எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள பாரதூரமான முறைகேடுகள் குறித்து இந்தச் சபை கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும்'' என்றார் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் எலீன் சம்பெர்லைன் டொனாகே.

''குற்றங்களை எந்தத் தரப்புச் செய்தது என்பதை விடுத்து, சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் இலங்கை விரைவாகவும் நம்பத் தகுந்த வகையிலும் விசாரணைகளை மேற்கொள்வது மிக அவசியம்'' - என்றும் அவர் கூறினார். (உ)

## யாழ்.தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமாற்றம் செய்யப்பட்ட பொ. குகநாதன், தேர்தல் திணைக்களத் தலைமையகத் தில் நேற்றுத் தனது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார்.யாழ். குடாநாட்டில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் போன்றவற்றை ஜனநாயக வழியில் முன்னெடுக்க அவர் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலிலும் பெயர் குளறுபடி காரணமாக அரச தரப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இந்தப் பின்னணியிலேயே குகநாதனுக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு ஆறுமாத காலத்துக்கான இடமாற்றம் செய்யப்பட்ட இவர் தலை மையகத்தில் நேற்று இணைந்து கொண்டார். எனினும் அவருக்கு பொறுப்புகள் ஏதும் குறித்து ஒதுக்கப்படவில்லை. இப்போதைக்கு மட்டக்களப்பு, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வாக்குரிமையை பயன்படுத்துவதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராயும்படி அவர் கேட்கப்பட்டுள்ளார். (உ-ஐ)

## உள்ளூராட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வழக்குத் தாக்கல் செய்தன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட 33 வேட்புமனுக்கள் மீள ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

அதேபோல் ஐ.தே.கவால் தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட இரண்டு வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் தாக்கல் செய்யப்பட்ட 19 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அவை மீள ஏற்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து தேர்தல் ஏற்பாடுகளில் தேர்தல்கள் செயலகம் [illegible] தேர்தல்கள் செயலகம் நேற்றுத் தெரிவித்தது. (உ-சி)

## உள்ளகத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள அறிக்கை வருத்தமளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 17ஆம் அமர்வுகள் நேற்று ஜெனீவாவில் ஆரம்பமானது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

''நாட்டில் மீண்டும் வன்முறைகள் ஏற்படாத வகையிலான நடவடிக்கைகள் குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை அதிருப்தி அளிக்கும் வகை யில் அமைந்துள்ளது. இருந்தும், நிபுணர் குழுவின் அதிகாரங்களுக்கு புறம்பான வகையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.'' - என்றார் அவர்.

## போர்க்குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் படுகொலைகள் தொடர்பான ஐ.நா.வின் சுயாதீன விசாரணையாளர் கிறிஸ்டோவ் கென்ஸ் தனது 482 பக்க அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

'சனல்-4' வீடியோ காட்சிகள் உண்மையானவை என்று அந்த அறிக்கையில் ஐயந்திரிபுரத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் 59 பக்கங்கள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த வீடியோ காட்சிகள் உண்மையற்றவை; புனையப்பட்டவை என்று இலங்கை அரசு அடியோடு மறுத்திருந்த நிலையில், அது சந்தேகத்துக்கு இடமற்ற வகையில் உண்மையானது என்று ஐ.நா. விசாரணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த 5 நிமிட வீடியோ, முன்னர், பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோவைவிடப் புதிதானது.

இலங்கையில் ''மிகப் பாரதூரமான குற்றம் நிகழ்ந்துள்ளது என்பதை இந்த வீடியோ பிரதிபலிக்கிறது. அவை போர்க் குற்றங்கள் என்று வரையறுக்கப்படுகின்றன'' என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த சட்டப் பேராசிரியரான கிறிஸ்டோவ் கென்ஸ்.

தொழில்நுட்ப ரீதியாகவும் தடயவியல் ரீதியாகவும் துறைசார் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், ''அந்த வீடியோ உண்மையானது, நம்பகமானது. அங்கு என்ன நடந்தது என்பதை அதிலுள்ள காட்சிகள் மிகத் தெளிவாக விளக்குகின்றன'' என்று மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கூறுகின்றது.

அந்த வீடியோவில் காணப்படும் சிலரின் முகங்கள் மிகத் தெளிவாகத் தெரிவதால் அவர்களை இனங்காண்பது இலங்கை அரசுக்கு அப்படி ஒன்றும் சிரமமான காரியமல்ல என்றும் -

இந்தப் பிரச்சினையைக் கையாள்வதற்காகவும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச விசாரணை ஒன்று தேவையான அதிகாரங்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் - அறிக்கை கூறுகின்றது.

''இந்த குற்றங்களில் இலங்கை அரசோ அல்லது அதன் பகுதிகளோ குற்றவாளிகள் என்று இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை. அது நீதிமன்றச் சட்டங்களின் மூலம் மட்டுமே நிரூபிக்கப்பட முடியும். இலங்கையில் நடந்த போரின் இறுதிக் கட்டத்தில் பாரதூரமான குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன என்பதை இந்த வீடியோ உறுதிப்படுத்துகிறது. இதனையும் இன்னும் கிடைக்கக்கூடிய ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் விசாரணையாளர்களால் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். அதேசமயத்தில் இதற்குப் பொறுப்பானவர்களைத் தேடிக் கண்டறியும் தெளிவான நோக்கத்தோடு சுயாதீனமான சர்வதேச விசாரணைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட வேண்டும்'' என்று அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4HP ல் இருந்து 24HP வரையான மின் தேவையுடைய இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான டைனமோக்களையும், எஞ்ஜின்களையும் பெற்றுக்கொள்ள

ஆர்க் என்ரப்பிறைசஸ்

150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க தரம் 5 மாணவர்களுக்கான இரவுநேரப் புலமைப் பரிசில் வினா விடை வகுப்பு

ஆரம்பம் : 1.06.2011 புதன் 6.00 மணி

★ வாரத்தில் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் மாலை 6.00 மணி - 8.00 வரை
★ முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாக்கள்
★ யாழ். மாவட்ட பிரபல ஆசியர்களின் கற்பித்தலில்
★ முதல் 50 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு - 0774598440

### இலங்கை மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்க வேண்டியது இலங்கை அரசின் கடமையாகும். அத்துடன் அரசு ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபாரிசுகளை நடைமுறைப் படுத்த வேண்டும். சர்வதேச பொறிமுறை ஒன்றை அமைத்து தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் விசாரணையை கண்காணிக்க வேண்டும்.

இலங்கை பற்றிய இம்முக்கிய அறிக்கையில் உள்ள புதிய தகவலை ஏற்றுக் கொண்டு மனித உரிமை சபை தனது நிலையை வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை சிவயோகம்

பருத்தித்துறை, தும்பளை வீதியைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சிவயோகம் கடந்த 28.05.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லத்துரை (இளைப்பாறிய ஆசிரியர், J.P ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசம்பு - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை, சிவச்செல்வம், திருமகள், பிறேமாவதி (ஆசிரியை ,கலட்டி றோ.க.பாடசாலை), திருச்செல்வம், அருந்தவச்செல்வம், செல்வச்சந்திரன் (யாழ். போதனா வைத்திய சாலை), சிறிமதி ஆகியோரின் அன்புத் தாயும், மாலினி (ஆசிரியை, ரத்தோட்டை இ.ம.வி), ரவீந்திரராஜா, ஈஸ்வரன் (நூலகர், யாழ். மாநகரசபை), நாகநந்தினி, றேனுகா, பாலகுமாரி, நிர்மலா, சின்னத்துரை ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2011) செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## படிவங்கள் விற்பனையாகிறது

அனர்த்த முகாமைத்துவ நிலைய
பதவி வெற்றிடங்கள் - 15

1. பணிப்பாளர் - (முன் ஆயத்தம்)
2. பணிப்பாளர் - (விழிப்புணர்வூட்டல்)
3. பணிப்பாளர் - (மனிதவளம் -நிதி)
4. உள்ளக கணக்காய்வாளர்
5. உதவிப்பணிப்பாளர் - (அனர்த்த குறைப்பு)
6. உதவிப்பணிப்பாளர் - (முன் ஆயத்தம்)
7. உதவிப்பணிப்பாளர் - (தொடர்பாடல்)
8. உதவிப்பணிப்பாளர் - (நிதி)
9. கணக்கீட்டு உத்தியோகத்தர்.
10. அந்தரங்க உதவியாளர்.
11. நூலகப் பொறுப்பாளர்.
12. அபிவிருத்தி உதவியாளர்.
13. மொழி பெயர்ப்பாளர்.
14. கமரா வீடியோ புகைப் படப் பிடிப்பாளர்.
15. முகாமைத்துவ உதவியாளர்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ்நிலையம் யாழ்ப்பாணம். | வேம்படிச் சந்தி யாழ்ப்பாணம்.

## VACANCIES AT TILKO JAFFNA CITY HOTEL

First and foremost star class hotel constructed under BOI , in the center of Jaffna town require the following staff.

1) Food & Beverage Manager.
2) Management Accountant.
3) Housekeeping Executive.
4) Waiters.
5) Room Boys
6) Hotel Gardener.
7) Kitchen Cleaner.
8) Kitchen Helper.
9) General Cleaner.

* Excellent carrier prospects.
* Salaries commensurate with age and experience.
* Please send your CV to the following E-mail address.

citystarkb@gmail.com

*Tilko Jaffna City Hotel (Pvt) Ltd,*
*70/6, K.K.S Road, Jaffna (Near the General Post Office)*

## ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி

ஒரு குழந்தை தன் தாய்மொழியைப் பேசப் பழகுவதற்காக இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில்லை. மாறாகத் தன் குடும்பத்தில் உள்ளவர்கள் பலரும் பேசும் வசனங்களை அவதானித்தே தானும் அதுபோலப் பேசப்பழகுகிறது. ஒரு மொழியைப் பேசப்பழகுவதற்கான சரியான வழி இதுபோன்ற பழக்கப்படுத்தலே.

எமது ஆங்கிலக் கற்பித்தல் முறையும் இதுபோன்றதே. இங்கு இலக்கணப் பயிற்சியோ எழுத்துப் பயிற்சியோ வழங்கப்படுவதில்லை. மாறாக மாணவர்களுக்கு வசன அமைப்பு முறையை விளக்கி ஏனையவர்களுடன் உரையாடல் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலம் 3 மாதத்தில் பழக்கப்படுத்தப்படுகிறது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான இப்பயிற்சி நெறியில் இணைந்த அனைத்து மாணவர்களுமே தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புகிறீர்களா?

பயிற்சியில் இணைய விரும்பும் இளைஞர், யுவதிகள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், கிராமசேவகர்கள் 04.06.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I - மு.ப. 8-10 , பிரிவு II - மு.ப. 10-12, பிரிவு III - பி.ப.1-3, பிரிவு IV பி.ப. 3 - 5

பயிற்சிநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியாதுவிடின் முழுப் பணமும் திருப்பித்தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். T.P: 0776214567

3 மாத பயிற்சிநெறிக் கட்டணம் 3500/-
(ஒரு பிரிவில் 16 பேருக்கு மட்டுமே அனுமதி)

(48.27 22)

## Study In the UNITED KINGDOM

## இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை

G.C.E (O/L) மற்றும் G.C.E (A/L) உடன் கற்கைநெறிகளை தொடரலாம்

JULY / SEPTEMBER - INTAKES IN PROGRESS

2011 April 21ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறையின் கீழ்

(1) G.C.E (O/L) அடிப்படை தகுதியுடன் ஆங்கில கற்கை நெறியினை U.K. இல் மேற்கொள்ளலாம் IELTS தேவையில்லை

(2) G.C.E (O/L) G.C.E (A/L) அடிப்படை தகுதியுடன் Foundation Degree யினை மேற்கொள்ளலாம். இதற்கு City & Guilds இன் B1ஆங்கில அறிவு (பரீட்சை மிகவும் இலகுவானது) போதுமானது. IELTS தேவையில்லை.

உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்ப்படுத்தல் என்பன எங்களால் நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்.

சகல நாடுகளுக்குமான அனைத்துவித Documentation மற்றும் விசாக்களும் 100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத் தரப்படும்.

Jaffna: BRITISH COLLEGE OF HIGHER STUDIES
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
T.P: 0212224550 (above Cosy Hotel & Near Ariyakulam Junction)

EISC EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel:2500207 E-mail:eisc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935 Web: www.expresslanka.com

## யாழ் நகரில் முதன்முறையாக நம்ப முடியாத கட்டணக் கழிவில்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

BCHS

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

Qualification: G.C.E. (O/L) Plus IELTS 5.5 or B1

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2 1/2 Years Diploma & Degree
குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்

B1 Exam - Student visa மூலமாக UK செல்பவர்களுக்கானது

Duration 2 MONTHS

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E.(O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commissionனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டது.

Diploma in English (2 Months) Advanced Diploma in English (2 Months)

100 % பயிற்சி

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

100 % பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் உறுதி

SPONSOR /SETTLEMENT VISA - EXAMS

பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்வதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1 PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.

Duration : 2Months
புதிய பிரிவு : 15.06.2011

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :0212224550
HotLines: 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 11.05.2011, 15.05.2011
காலை : 10.30 மணி
மாலை : 03.00 மணி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்31.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org